இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 89 | வள்ளுவர் ஆண்டு 2048 | ௦ மாசி 11, வியாழக்கிழமை 23.02.2017

# காணி விடுவிப்புக்குக் காலக்கெடுவை அறிவிக்கவேண்டும் முப்படையினர்

## மைத்திரியும், ரணிலும் கோரியுள்ளனர் என நேற்றுச் சபையில் கூறினார் மங்கள சமரவீர



கொழும்பு, பெப். 23
பாதுகாப்புத் தரப்பினர் தமது வசம் வைத்துள்ள தனியார் காணிகளை எப்போது விடுவிப்பார்கள் என்பது தொடர்பான காலவரையறையைக் கூறுமாறு, முப்படையினரிடமும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் கேட்டுக் கொண்டுள்ளதாக அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புப் பிரேரணை நேற்றுக்கொண்டு வரப்பட்டது. பிலக் >> 04

## வடக்கில் அதிகரிக்கிறது பன்றிக் காய்ச்சல் பாதிப்பு

### வவுனியாவிலும் இருவருக்குத் தொற்று

வவுனியா, பெப். 23
பன்றிக் காய்ச்சல் எனப்படும் என்1எச்1 வைரஸ் தொற்று வடக்கில் நாளாந்தம் அதிகரிக்கிறது. வவுனியாவிலும் 2 பெண்கள் பன்றிக் காய்ச்சல் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். இதனுடன் சேர்த்து >> 24

## போர்க்குற்றம் புரிந்தோருக்கு தண்டனை அவசியம்

### சம்பந்தன் வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 23
போர்க்குற்றமிழைத்த படையினருக்கு எதிராகத் தண்டனை வழங்கப்படுவது அவசியம். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், >> 24

## உள்நாட்டு பொறிமுறையை நம்பவேண்டும் சம்பந்தன்

### சபையில் ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப். 23
உள்நாட்டுப் பொறிமுறை மீது எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நம்பிக்கை >> 24

## கர்ப்பிணிப் பெண் கோரக் கொலை; 2 சகோதரர்களையும் நேற்று அடையாளம் காட்டினான் சிறுவன்

யாழ்., பெப். 23
ஊர்காவற்றுறையில் கர்ப்பிணிப் பெண் கோரமாகக் கொல்லப்பட்ட வழக்கில், ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்க >> 24

# மகிந்த அரசு போன்றே நல்லாட்சியும் தமிழரை கொடுமைப்படுத்துகிறது

## மக்கள் இவ்வாறே கருதுகின்றனர் என சபையில் சம்பந்தன் இடித்துரைப்பு



கொழும்பு, பெப்ரவரி 23
அரசின் நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். கடந்த அரசைப் போன்றே இந்த அரசும் தம்மைக் கொடுமைப்படுத்துகின்றது என்ற உணர்வு தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், அரசியல் தீர்வு கிடைக்கும் வரை >> 24

## 3ஆம் நாளாகவும் பரவிப்பாஞ்சான் நில மீட்புப் போர்

### கால அவகாசங்கள் எதையும் ஏற்பதில்லை என மக்கள் உறுதி



கிளிநொச்சி, பெப். 23
பரவிப்பாஞ்சானில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலமீட்புக்கான அறவழிப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் >> 04

## இனப்பிரச்சினையை தீர்க்காவிடின் ஆபத்து

கொழும்பு, பெப். 23
இனப் பிரச்சினையைத் தீர்க்காமல் கைவிட்டுச் செல்வது எதிர்காலச் சந்ததியினருக்குப் பெரும் ஆபத்தானதாகும். >> 24

## கேப்பாபிலவு மக்களுக்கு கொழும்பிலும் பேராதரவு

### புறக்கோட்டையில் நேற்றுப் போராட்டம்

கொழும்பு, பெப். 23
முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களின் போராட்டம் 20 நாள்களைக் கடந்தும் தீர்வின்றித் தொடரும் நிலையில் >> 22



## தீர்க்கமான முடிவு கிடைக்கும்வரை போராட்டம்தான்

### காணாமற்போனோரின் உறவினர்கள் உறுதி

கிளிநொச்சி, பெப். 23
கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலின் அருகில், காணாமற்போனோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள அறவழிப் போராட்டம் நேற்று மூன்றாவது >> 24



## தந்தைக்கு வந்த மாரடைப்பால் தனயனின் உயிர் பிரிந்தது நேற்று

### சிலாவத்துறையில் துயரச் சம்பவம்

மன்னார், பெப். 23
தனயனுக்கு நீச்சல் பழக்கிக்கொண்டிருந்தபோது, தந்தைக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இதனால் தந்தை பிடித்திருந்த கை நழுவியதால், தனயன் தண்ணீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. >> 04

## மாணவி வித்தியா கொலை வழக்கில் புதிய திருப்பம்

### 11ஆவது சந்தேகநபர் நேற்று அரச சாட்சியாக மாறினார்

யாழ்ப்பாணம், பெப். 23
புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் விளக்கமறியலிலுள்ள 11ஆவது சந்தேக நபர், சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் >> 23



## வடக்கு—தெற்குஇணைந்து குடாநாட்டில் கவனயீர்ப்பு

### நில விடுவிப்பு, காணாமற்போனோர் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி

கொழும்பு, பெப். 23
பாதுகாப்புத் தரப்பினரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள >> 04

## அரச அதிகாரி மீது துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம், பெப். 23
மட்டக்களப்பு மாவட்டக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜ் (வயது 31) >> 04

## 20 ஆவது நாளாகத் தொடரும் புதுக்குடியிருப்புப் போராட்டம்



முல்லைத்தீவு, பெப். 23
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டு வரும் அறவழிப் போராட்டமும், >> 04

## பிலக்குடியிருப்பும் புதுக்குடியிருப்பும் இராணுவத்தினரின் சீதனச் சொத்துகளா?

### முல்லைப் போராட்டத்தில் பங்கேற்ற மக்கள் கேள்வி

முல்லைத்தீவு, பெப். 23
காணிகளை விடுவிக்குமாறு கோரி முல்லைத்தீவில் போராட்டங்களை மேற்கொண்டுள்ள மக்களுக்கு ஆதரவாக, முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்தை >> 04






தற்போது உங்களது வழக்கமான வட்டிக்கு மேலாக 60% மேலதிக வட்டியையும், இலவச ஆயுட் காப்புறுதித் திட்டத்தையும் பெற்று அனுபவியுங்கள்!

0114 711 411 www.nationstrust.com

Nations MaxBonus

## பொலிஸ் சமிக்ஞையை மீறிய மோட்டார் சைக்கிள் மீது சூடு

*கண்டியில் இருவர் படுகாயம்*

கண்டி, பெப். 23
கண்டி - தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திகனை பிரதேசத்தில் பொலிஸ் சமிக்ஞையை மீறிச் சென்ற மோட்டார் சைக்கிள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் திகனை - மின்சார சபை மாவத்தையில் இடம்பெற்றது.

திகனை ரஜவெல்ல கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட இந்திக சஞ்ஜீவ (வயது-35), ருஜிர கயான் (வயது-28) ஆகிய இருவருமே துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகிக் காயமடைந்தவர்கள்.

காயமடைந்த இருவரும் தெல்தெனிய மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-ய)

## பிலக்குடியிருப்பு மக்களுக்கு அச்சுறுத்தல் ஏதும் ஏற்படாது

*ஒளிப்படம் எடுத்தமை குறித்து வான்படைப் பேச்சாளர் விளக்கம்*

கொழும்பு, பெப். 23
பிலக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை பாதுகாப்புத் தரப்பினர் படம் எடுத்ததை விடப் பத்திரிகையாளர்கள் அதிகளவில் படம் எடுத்துள்ளனர். இதனால் அந்த மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதா? தகவலைத் திரட்டுவதற்காக எடுக்கப்படும் ஒளிப்படங்களால் மக்களுக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படாது. இவ்வாறு வான்படைப் பேச்சாளர் சந்திம அல்விஸ் தெரிவித்தார்.

பிலக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை, பாதுகாப்புத் தரப்பினர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒளிப்படம் எடுத்தனர். பாதுகாப்புத் தரப்பினர் ஏன் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்பது தொடர்பில், வான்படைப் பேச்சாளரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

படை முகாம் என்பது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது. வெளியிலிருந்து படை முகாமுக்கு வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் தேவையும், அந்த முகாமில் உள்ள அதிகாரிகள் வசம் உள்ளது. தங்களது பாதுகாப்புக்காக அவர்கள் ஒளிப்படம் எடுத்திருக்கலாம்.

படை முகாமுக்கு முன்னால், பிறிதொரு தரப்பினர் ஆர்ப்பாட்டமொன்றிலோ அல்லது வேறேதேனும் நடவடிக்கையிலோ ஈடுபட்டிருந்தால், அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய பொறுப்பு, அந்தப் படை முகாம் தளபதிக்குரியது. தங்களுக்குரிய தேவையைத் திரட்டி வைத்துக் கொள்வதற்காக, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை, ஒளிப்படமோ அல்லது காணொலிப் பதிவோ செய்திருக்கலாம். படைத் தரப்பினர் எடுத்ததை விட, பத்திரிகையாளர்கள் பலர், போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை ஒளிப்படம் எடுத்துள்ளனரே. அதனால், அந்த மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதா? அது போலத்தான், தங்களது தகவல் திரட்டுக்காக எடுக்கப்பட்ட ஒளிப்படங்களால், பொதுமக்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படப் போவதில்லை. அது குறித்து, அந்த மக்கள் அச்சமடையத் தேவையில்லை - என்றார். (கு-5)

## 11 ரூபாவுக்கு ஆசைப்பட்டு ரூ.18,000 இழந்த வர்த்தகர்

தென்மராட்சி, பெப். 23
பருப்பின் நிர்ணய விலை ஒரு கிலோ 159 ரூபாவாக உள்ளபோதிலும் அரைக் கிலோ (500 கிராம்) பருப்பை 85 ரூபாவுக்கு விற்பனை செய்த வர்த்தகருக்கு 18 ஆயிரம் ரூபாவும், காலாவதியான ஒரேன்ஞ் பிஸ்கட் விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு 9 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான்.

யாழ்.மாவட்டப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட திடீர்ப் பரிசோதனைகளின்போது அகப்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்கை விசாரித்த நீதிவான், அதிகரித்த விலைக்குப் பொருள்கள் விற்பனை செய்த வர்த்தகருக்கு 18 ஆயிரம் ரூபாவும், திகதி காலாவதியான பிஸ்கற் விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு 9 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தார். (த-9)



# பிலக்குடியிருப்பில் சிறுவர் நிலை கண்டு இளைஞர் வேதனை

*போராட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு அனைவரிடமும் கோரிக்கை*

முல்லைத்தீவு, பெப். 23
பிலக்குடியிருப்பு மக்கள் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இடத்துக்குச் சென்ற இளைஞர்கள் சிலர் அங்கு சிறுவர்களின் நிலை கண்டு வேதனை அடைந்தனர். காணி விடுவிப்புப் போராட்டங்களில் முழுமையான பங்களிப்பை வழங்க மக்கள் முன்வரவேண்டும் எனவும் அவர்கள் அறைகூவல் விடுத்தனர்.

பிலக்குடியிருப்பில் தொடரும் அறவழிப் போராட்டக் களத்துக்கு நேற்று முல்லைத்தீவின் பல பாகங்களில் இருந்தும் சென்ற இளைஞர்கள், அங்கு குழந்தைகள், சிறுவர்கள் கொடிய வெயிலில் படும் துன்பத்தைக் கண்டு வேதனை அடைந்தனர்.

தகரக் கொட்டகைகளுக்குள் கிடந்து மக்கள் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். இவர்களின் நியாயமான போராட்டத்தைக் கருத்திற் கொண்டு காணிகளை உடனடியாக நல்லாட்சி அரசு விடுவிக்கவேண்டும் என்று இளைஞர்கள் கோரினர். (த-7)

## பிரதான கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தீர்வுக்குச் சாத்தியம்

*கூறுகிறார் தலைமை அமைச்சர்*



கொழும்பு, பெப். 23
இரண்டு பிரதான கட்சிகள் மற்றும் ஏனைய கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் அரசியல் தீர்வை வழங்கும் சாத்தியம் இருப்பதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பிசப் கல்லூரி அரங்கில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும்பாலான மக்களின் கருத்துக்குச் செவி சாய்த்து இலங்கையின் அடையாளத்தைப் பேணி அனைத்து இனங்களுக்கும், மதங்களுக்கும், கலாசாரங்களுக்கும் மதிப்பளிக்கக் கூடிய ஒரே இலங்கையை உருவாக்குவதற்கு அரசு கடமைப்பட்டுள்ளது.

போரின் பின்னர் நாட்டில் சமாதானம் ஏற்படும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அந்த எண்ணம் ஈடேறவில்லை. 2015 ஆம் ஆண்டில் மக்கள் இரண்டு பிரதான கட்சிகளிடமும் இந்தச் சவாலை ஒப்படைத்தனர்.

இனவாதத்தையும் மத பேதங்களையும் ஏற்படுத்தச் சில சக்திகள் முயற்சித்தாலும் அது வெற்றியளிக்கவில்லை. இனங்களையும், மதங்களையும் அடிப்படையாகக் கொண்ட அரசியலை ஒரேயடியாக நிறைவுக்குக் கொண்டு வரமுடியாது.

நாட்டை முன்னேற்றக் கிடைத்த இந்த இறுதிச் சந்தர்ப்பத்தின் மூலம் பயனடைந்து கொள்ளவேண்டும். நாட்டின் பெரும்பாலான மக்களினதும் உலக நாடுகளினதும் முழுமையான ஒத்துழைப்பு இலங்கைக்குக் கிடைத்துள்ளது. அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் இரண்டு பிரதான கட்சிகளும் 2015 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தன.

அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து ஒரே இலங்கையை உருவாக்குவதே நாட்டின் பெரும்பாலான மக்களின் விருப்பமாகும். தற்போது அதிகாரப் பகிர்வுக்கு அனைத்துக் கட்சிகளும் இணக்கம் வெளியிட்டுள்ளன. அனைத்துக்கட்சிகளினதும் இணக்கப்பாட்டில் புதிய அரசமைப்பை நிறைவேற்றக் கூடிய சந்தர்ப்பம் தோன்றியுள்ளது-என்றார். (த-5)

## நில மீட்புப் போருக்கு ஆதரவு வழங்கி நாளை மோ.சைக்கிள் பேரணி

*மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் அழைப்பு*

முல்லைத்தீவு, பெப். 23
தமது சொந்தக் காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நாளை மோட்டர் சைக்கிள் பேரணிக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு மக்களின் நில விடுவிப்புப் போராட்டம் 23ஆவது நாளாகத் தொடர்கிறது. புதுக்குடியிருப்பு மக் களின் போராட்டமும் தொடர்கிறது.

மக்களின் நியாயமான இந்தப் போராட்டங்கள் வெற்றி பெறவேண்டுமெனப் பலரும் ஆதரவை வழங்குகின்றார்கள். இந்த வகையில் நாளை உங்கள் இடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் கறுப்புத் துணி கட்டியவாறு கேப்பாபுலவு - பிலக்குடியிருப்புக்கு நண்பகல் 12 மணிக்கு வந்து சேருங்கள். இந்த மக்களுக்காக அனைவரும் ஒன்றிணைந்து எமது நிலம் எமக்கு வேண்டும் எனக் குரலெழுப்புவோம்-என்றார். (த-7)

## கேப்பாபிலவு நில மீட்புக்காக திருமலையிலும் கவனவீர்ப்பு



திருமலை, பெப்.23
கேப்பாபிலவு மக்களின் நில மீட்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நேற்று மாலை 4.00 மணியளவில் திருகோணமலைச் சிவன் கோயிலுக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

பசுமைத் திருகோணமலை, சிவில் சமூகங்களின் அமையம் மற்றும் தமிழர் ஜனநாயக இயங்குதளம் ஆகிய அமைப்புக்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தன. பாதுகாப்பு, அபிவிருத்தி, மதம், வனப் பாதுகாப்பு, தொல்லியல் துறை ஆகியவற்றின் பெயரால் ஆக்கிரமிக்கப்பட்ட எமது நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-ய-45)

## காத்திரமான சேவையை வழங்குகிறார் சுமந்திரன்

**சபையில் நேற்று சம்பந்தன் புகழாரம்**

கொழும்பு, பெப். 23
நாடாளுமன்றத் தேர்தலில் 15 ஆயிரம் வாக்குகளை மாத்திரம் பெற்று மக்களால் நிராகரிக்கப்பட்ட சில கட்சியின் உறுப்பினர்கள், அதனை விடவும் 4 மடங்கு அதிகமான வாக்குகளைப் பெற்ற சுமந்திரனைத் துரோகி என்கின்றனர். மக்களுக்காகச் சுமந்திரன் காத்திரமான சேவையை வழங்கி வருகின்றார்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சீற்றத்துடன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சபை ஒத்தி வைப்புப் பிரேரணை மீது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
2015 இல் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் 15 ஆயிரம் வாக்குகளை மாத்திரமே பெற்ற கட்சியின் உறுப்பினர்கள், அதை விடவும் நான்கு மடங்கு அதிகமான வாக்குகளைப் பெற்ற சுமந்திரனைத் துரோகி என்கின்றனர். மக்களுக்காகச் சுமந்திரன் காத்திரமான சேவையை வழங்கிவருகின்றார். அதை நாம் பாராட்டவேண்டும். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் தமது குறைபாடுகளை மறைப்பதற்கே சுமந்திரனைத் துரோகி என்கின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு மத்தியிலேயே அரசியல் நடத்த வேண்டியுள்ளது என்பதை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் புரிந்துகொள்ள வேண்டும்.

சுமந்திரனுக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் தொடர்பில் உரிய வகையில் விசாரணை நடத்தப்பட வேண்டும்' என்றார். (த-5)

# புலிகள் செய்த கொலைகளை மறைக்கும் அரசு

## பொது எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 23
1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் செய்யப்பட்ட படுகொலைகள் மற்றும் இழப்புக்கள் சம்பந்தமான முழுமையான அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக அரசு வாக்குறுதி வழங்கியிருந்தாலும் அதனை நிறைவேற்றாது பின்வாங்குவதாகப் பொது எதிரணி நேற்றுச் சபையில் குற்றம்சாட்டியது.

பொது எதிரணியின் சந்தேகங்களுக்கும் - கேள்விகளுக்கும் சட்டம், ஒழுங்கு மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க இன்று வியாழக்கிழமை சபை அமர்வுகளின்போது பதில் அளிப்பார் என்று ஆளும்தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான கயந்த கருணாதிலக குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்டவர்களது விவரங்களை நேற்றுமுன்தினம் கோரியிருந்த பொது எதிரணி, நேற்றுப் புதன்கிழமை வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகளால் படுகொல்லை செய்யப்பட்டவர்களது விவரங்களைக் கோரியது.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி - பதில் நேரத்தில் பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த குணசேகர மேற்படிக் கேள்வியை எழுப்பியிருந்தார். இதற்குப் பதில் வழங்க விடயப் பரப்புக்குப் பொறுப்பான அமைச்சர் வராத நிலையில், ஆளும் தரப்பு பிரதம கொறடா கேள்விக்கான பதிலை வழங்கியிருந்தார்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர்கள் குறித்தான தகவல்கள் போதியளவில் இல்லை. பொலிஸுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் பிரகாரம் ஆயித்து 56 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ரெலோவின் 16 உறுப்பினர்கள் மற்றும் புளொட் கட்சித் தலைவர் உட்பட அந்தக் கட்சியின் 13 பேர் உள்ளடங்கலாக 29 அரசியல்வாதிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களுக்கு அமைய 623 அரச உத்தியோகத்தர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர், என்று ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இவை சம்பந்தமான முழுமையான அறிக்கையைச் சபையில் சமர்ப்பிக்குமாறு முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆளும் தரப்பின் பிரதம கொறாடா, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாவட்டங்கள் 1983ஆம் ஆண்டு முதல் 2009 வரை விடுதலைப்புலிகள் வசமிருந்தமையால் அந்தப் பகுதிகளில் பொலிஸ் நிலையங்கள் சரியான முறையில் இயங்கவில்லை. 2009 க்குப் பின்னரே பொலிஸ் நிலையங்கள் சரியான முறையில் இயங்கின. போர்க் காலப் பகுதியினுள் நிலவிய பொலிஸ் நிலையங்களின் ஆவணங்கள் உரியவாறு இற்றைப்படுத்தப்படாமையால் அந்தக் காலப் பகுதியினுள் விடுதலைப்புலிகள் இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நபர்கள் அல்லது வேறு நபர்களின் எண்ணிக்கை பற்றி உறுதியான முடிவொன்றுக்கு வரக்கூடிய அளவுக்குப் போதிய அறிக்கைகளை, ஆவணங்களைத் தேடிக்கொள்வதில் சிரமம் காணப்படுகின்றது' என்று தெரிவித்தார்.

பிரதம கொறடாவின் பதிலுக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த உதயசாந்த, விடுதலைப் புலிகளால் செய்யப்பட்ட படுகொலைகள் மற்றும் இழப்புக்கள் குறித்து முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதாகவும், ஆனால் அதற்குப் போதியளவு கால அவகாசம் தேவை எனவும் நேற்று (நேற்று முன்தினம்) அமைச்சர் சாகல குறிப்பிட்டார். நேற்றைய (நேற்று முன்தினம்) கருத்துக்கும் இன்றைய (நேற்று) கருத்துக்கும் பரஸ்பர முரண்பாடு காணப்படுகின்றன. அறிக்கை சமர்ப்பிக்க அரசு பின்வாங்குகின்றது - என்றார். (த-5)

# பகிடிவதையை தடுக்க உடனே செயற்படுங்கள்

## பொலிஸ்மா அதிபருக்கு அரச தலைவர் பணிப்புரை



கொழும்பு, பெப். 23
பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானபீட மாணவர்களினால் புதிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அசாதாரணமான பகிடிவதை, இலவசக் கல்வியின் ஒரு சாபக்கேடு என்று சாடியுள்ள அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன, பகிடிவதையைத் தடுப்பதற்குப் பல்கலைக்கழக நிர்வாகங்களுடன் இணைந்து செயற்படவேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு ஆனந்த தேசியக் கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்றுக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாய விஞ்ஞான பீட மாணவர்களினால் புதிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அசாதாரணமான பகிடிவதை, இலவசக் கல்வியின் ஒரு சாபக்கேடு. இது தொடர்பாகக் கண்டி மூத்த பொலிஸ் அத்தியட்சகரிடம் நான் விசாரணை மேற்கொண்டேன். மிலேச்சத்தனமான இந்தச் சம்பவம் குறித்து அரசு வருத்தம் தெரிவிக்கின்றது.

கல்விமான்கள் மற்றும் மேதைகளை உருவாக்கும் பல்கலைக் கழகத்தின் கௌரவத்தைப் பாதிக்கும் இவ்வாறான செயல் கள் இலவசக் கல்விக்குச் செய்யப்படும் அவமதிப்பு. எமது நாட்டின் 40-50 வருட கால பல்கலைக்கழக வரலாற்றில் பகிடி வதை தொடர்பாக கரும்புள்ளிகள் காணப்படுகின்றன. பல்கலைக்கழ கத்துக்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அவர்களது பெற்றோரின் நிம்மதியைத் துயரக் கண்ணீராக மாற்றும் வகையில் மாணவர்கள் செயற்படக் கூடாது - என்றார். (த-5)

# சைட்டம் பிரதானி மீதான துவக்குச் சூட்டில் சந்தேகம்

## உண்மையைத் தெளிவுபடுத்த அரசிடம் கோருகிறது ஜே.வி.பி.

கொழும்பு, பெப். 23
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் (சைட்டம்) தலைமை நிறைவேற்று அதிகாரியின் வாகனம் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது. உரிய விசாரணைகளை நடத்தி உண்மையைத் தெளிவுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க கேள்வி எழுப்பினார்.

'சைட்டம் பிரதானி மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவமானது ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக வெளிவந்தன. சைட்டத்துக்கு எதிரானவர்கள் இதைச் செய்திருக்கலாம் என்று அமைச்சர்கள் சிலர் கருத்து வெளியிட்டனர். அடையாளம் தெரியாத இருவரே சூடு நடத்தினர் எனவும் கூறப்படுகின்றது. இது சம்பந்தமாக விசாரணை அவசியம். அவ்வாறு விசாரணை நடத்தப்படாவிட்டால் அதன் பின்னணியில் அரசின் கரம் இருப்பதாகச் சந்தேகம் எழும். உண்மையைக் கண்டறிய வேண்டியது அரசின் கடப்பாடாகும். சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது எந்தக் கட்டத்தில் இருக்கின்றன? இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் எவை? சம்பவம் தொடர்பில் சந்தேகம் இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது உண்மையா? துரிதமாக விசாரணை நடத்தப்பட்டு நாட்டு மக்களுக்கு உண்மை அறிவிக்கப்படுமா? போன்ற கேள்விகளுக்கு அரசின் பதில்கள் அவசியம்' - என்றார் அநுர.

மேற்படி கேள்விகளுக்குச் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க இன்று வியாழக்கிழமை பதிலளிப்பார் என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்தார். (த-5)

# எமது கட்சிக்குச் சபையில் சிறப்புரிமை வழங்குங்கள்

## ஐ.ம.சு. முன்னணியுடனான உறவு முறிவு என சபாநாயகரிடம் கூறினார் வீரவன்ச

கொழும்பு, பெப். 23
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனான சகலவிதமான அரசியல் உறவுளையும் முறித்துக் கொண்டுள்ளோம். எமது கட்சியை சுயாதீனமாகச் செயற்படும் குழுவாக அங்கீகரித்து நாடாளுமன்றத்தில் வழங்கப்படும் சிறப்புரிமைகளை வழங்குங்கள்.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச சபா நாயகரிடம் நேற்றுக் கோரிக்கை விடுத் தார்.

நாடாளுமன்றில் விமல் வீரவன்ச சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பினார்.

'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனான அரசியல் ரீதியான உறவுகளை எமது கட்சி துண்டித்துள்ளது. தேசிய சுதந்திர முன்னணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சுயாதீன அணியாகச் செயற்படுவதற்கு அனுமதிக்குமாறு கேட்டிருந்தோம். சுயாதீனமாகச் செயற்படும் கட்சியொன்றுக்கு நாடாளுமன்றத்தில் வழங்கப்படும் உரிமைகள் - சலுகைகளையும் கோரியிருந்தோம். சபாநாயகர் என்ற ரீதியில் நீங்கள் இன்னும் எவ்வித அறிவிப்பையும் விடுக்கவில்லை' - என்றார் விமல்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இது பற்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அறிவித்தேன். இந்த முடிவு குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு நீங்கள் இன்னும் அறிவிக்கவில்லை என்று எனக்கு அறிவிக்கப்பட்டது. இன்று தான் நீங்கள் இப்படியொரு அறிவிப்பை விடுக்கின்றீர்கள் - என்றார்.

'இல்லை. இதற்கு முன்னர் நான் கோரிக்கை விடுத்திருந்தேன். நாம் வெளியேறுவதை அனுமதிக்க முடியாது என்று தான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறியுள்ளது. அதை எம்மால் ஏற்க முடியாது. சுயாதீனமாகச் செயற்படும் உரிமை எமக்குள்ளது' என்று கூறினார் விமல்.

பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் விமலின் கருத்தை நியாயப்படுத்தி அவருக்கு சார்பாகக் கருத்து வெளியிட்டனர்.

இதன்போது அமைச்சர் ஹக்கீம், ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் போட்டியிட்டதால் கடந்த தடவை எமது கட்சிக்கு நாடாளுமன்றத்தில் தனிக் கட்சிக்குரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. அறிவிப்புகளைக்கூட விடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்று சுட்டிக்காட்டினார்.

இது சம்பந்தமாகக் கட்சித் தலைவர்களுடன் பேசி முடிவொன்றை அறிவிக்கின்றேன் என்று கூறி சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வந்தார் சபாநாயகர். (த-5)

# அதிகாரப் பகிர்வை ஐ.ம.சு.மு. ஆதரிக்கும்

## இதனால் இடைக்கால அறிக்கை விரைவில் என்கிறார் கிரியெல்ல

அதிகாரப் பகிர்வை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இருக்கின்றது. அந்தக் கட்சியின் ஆசியுடன் விரைவில் வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப் பிக்கப்படும் என்றும் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மொழி உரிமையையே தமிழர்கள் அன்று கோரினர். அந்தக் கோரிக் கைக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை. பின்னர் அதை மையப்படுத் தியே ஏனைய பிரச்சினைகள் உருவெடுத்தன. மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

தற்போது பிரதான இரு கட்சிகளும் கைகோர்த்துள்ளன. தீர்வைக் காண்பதற்குரிய வரலாற்றுச் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அரசமைப்புச் சபையின் வழிநடத்தும் குழு இதுவரை 49 தடவைகள் கூடியுள்ளது.

அதிகாரப் பகிர்வுக்கு ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியும் ஆதரவைத் தெரிவித்துள்ளது. 13 பிளஸ் என்று முதலில் கூறியவர் தலைவர் மகிந்த தான் என்பதை யும் இதன் போது சுட்டிக்காட்டு கின்றோம்.

சிறுபான்மையின மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களிக் கின்றனர். அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. இதை மறந்து செயற்படமுடியாது என்றார். (த-5)

## மலேசிய ஆர்வலர் லீனாவை குற்றவாளியாக அறிவித்தது மலேசிய நீதிமன்றம்

இலங்கையின் இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விவரிக்கும் 'நோ பயர் சோன்' (போர்த் தவிர்ப்பு வலயம்) ஆவணப் படத்தை மலேசியாவின் தணிக்கை சபையின் அனுமதி பெறப்படாமல் வெளியிட்டதாக மலேசிய மனித உரிமை செயற்பாட்டாளர் லீனா ஹென்றி மீதான குற்றஞ்சாட்டை அந்த நாட்டு நீதிவான்மன்றம் உறுதி செய்தது.

கோமாஸ் என்ற, மனித உரிமைகளுக்கான அரச சார்பற்ற தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த லீனா ஹென்றி மீது மலேஷியாவின் தணிக்கைச் சட்டங்களின் கீழ் குற்றஞ்சாட்டப் பட்டது.

இலங்கையில் இறுதிக் கட்டப் போரின் போது நடந்ததாகக் கூறப்பட்ட மனித உரிமை மீறல்களை காட்டுவதாகக் கூறும் 'நோ பயர் ஸோன்' ஆவணப் படத்தை 2013ஆம் ஆண்டு காண்பித்ததற்காகவே அவர் மீது இந்த வழக்கு பதியப்பட்டது.

தணிக்கை மோசடிக்காக லீனாவிற்கு மூன்று வருட சிறை அல்லது 17 இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்படலாம். அல்லது இரண்டு தண்டனையும் ஒன்றாக வழங்கப்படவும் வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு இதே நீதிமன்றத்தினால் லீனாகுற்றமற்றவராக தீர்ப்பளிக்கப்பட்டிருந்தார். குறித்த தீர்ப்பை அளித்த நீதிபதிதான் தற்போதைய தீர்ப்பையும் அளித்துள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (வ-5)

## இசை நடன கல்லூரி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்.பெப்.23

திருவேரகம் இசை நடனக் கல்லூரி ஆரம்ப நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி கந்தையா சாலையில் தென்ம ராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் வே. உதயகுமார் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் நந்தனா நவரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ண குமாரும் சங்கீத வித்துவான் பொசன் ஸ்ரீ வாம தேவனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு நிலை மூத்த விரிவுரையாளர் கலாநிதி சி.மகேந்திரனும், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா அரியரட்ணமும் தென்மராட்சி கல்வி வலய ஆசி ரிய ஆலோகர் திருமதி புனிதா ஈழ நேசனும், தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசையாளர் நயினை ப. சிவமைந் தனும் ஆசிரியர் திருமதி சுந்தர வல்லி ஆனந்தராசாவும் கலந்து கொள்வர் என்று தெரிவிக் கப்பட்டது. (வ-ரி-131)

### காணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

குடியிருப்பு, புதுக்குடியிருப்பு மக்கள் தமது காணிகளைக் கேட்டுத்தான் போராடுகின்றார்கள். அந்தக் காணிகளை விரைந்து விடுவிக்கவேண்டும் என்று இரா.சம்பந்தன் கோரியிருந்தார்.

இது தொடர்பில் பதிலளித்து உரையாற்றிய மங் கள சமரவீர,

பாதுகாப்பு அமைச்சின் தகல்களின் அடிப்படையில், 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இருந்து இதுவரை கணிசமான அளவு தனியார் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இன்னமும் 4 ஆயிரத்து 162.9 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. எஞ்சியிருக்கும் தனியார் காணிகள் எப்போது விடுவிக்கப்படும் என்பது தொடர்பான காலக்கெடுவொன்றைக் கூறுமாறு அரச தலைவரும், தலைமை அமைச்சரும், நானும் இராணுவத்திடம் கேட்டுள்ளோம்.

அடுத்த வருடம் சுதந்திரத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்படவுள்ள நிலையில், இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டிருக்கவேண்டும். அதன் நிமித்தம் ஏனைய விடயங்கள் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு இணைந்து செயற்பட முன்வருமாறு அனைத்து நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன்- என்றார். (த-5)

### வடக்கு–தெற்கு...

நிலங்களை விடுவிக்குமாறு கோரியும், காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என் பதைப் பகிரங்கப்படுத்துமாறு கோரியும் வடக்கு - தெற்கு மக்கள் இணைந்து யாழ்ப் பாணத்தில் நேற்று மிகப் பிரமாண்டமான கவனவீர்ப்புப் பேரணியை நடத்தினர். பேரணியின் முடிவில், யாழ். மாவட்டச் செயலகத்தில் மனு கையளிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி மாவட்டத்தின் பரவிப்பாஞ்சான் மற்றும் வலி.வடக்கில் மயிலிட்டி உள்ளிட்ட பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினர் அத்துமீறி ஆக்கிரமித்து வைத்துள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரப் பட்டது. இந்தக் காணிகளை விடுவிக்கு மாறு கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட கவனவீர்ப் புப் பேரணியில் சிங்கள மக்களும் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்தின் முன்பாக நேற்று முற்பகல் 10 மணிக்கு ஒன்று கூடிய மக்கள், அங்கு சிறிது நேரம் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். பின்னர் அங்கிருந்து மருத்துவமனை வீதியின் ஊடாகப் பேரணியாகப் புறப்பட்டனர். பின்னர் ஏ-9 முதன்மைச்சாலையின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை அடைந்தனர். மாவட்டச் செயலகத்தின் முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர். இறுதியில் மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலரைச் சந்தித்து மனுவைக் கையளித்தனர்.

காணி விடுவிப்பை வலியுறுத்தியும், காணாமற் போனோர் விவகாரத்திற்குப் பதில் கோரியும் பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிப் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5-6-101)

### பிலக்குடியிருப்பும்...

முற்றுகையிட்டு நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. போராட்டம் நடத்தப்படும் பிலக்குடியிருப்பிலும், புதுக் குடியிருப்பிலும் இதேபோன்று கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பிலக்குடியிருப்பும், புதுக்குடியிருப்பும் இராணுவத்தின் சீதனச் சொத்துக்களா எனப் போராட்டத்தில் பங்கேற்ற மக்கள் கோசம் எழுப்பினர். பாதுகாப்புத் தரப்பினர் ஆக்கிரமித்து வைத்துள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரிப் பிலக்குடியிருப்பிலும், புதுக்குடியிருப்பிலும் மூன்று வாரங்களுக்கு மேலாக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இன்னமும் காணிகள் விடுவிக்கப்படவில்லை. மக்களின் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவது தொடர்பில் கடந்த வாரம் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் மாவட்ட ரீதியிலான போராட்டம் மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் பல பகுதிகளிலிருந்தும் வந்த மக்கள் ஒன்று கூடினர். நேற்றுக் காலை 9.30 மணியளவில் போராட்டம் ஆரம்பமானது. மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக் கோசங்களை எழுப்பிப் போராட்டம் நடத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், க.சிவநேசன், .வே.சிவயோகன், க.தர்மலிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். கவனவீர்ப்பின் முடிவில் அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்குமான மனு மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக நடைபெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து, பிலக்குடியிருப்புக்குப் போராட்டக்காரர்கள் சென்றனர். அங்கும் சிறிது நேரம் கவனவீர்ப் புப் போராட்டத்தை நடத்தினர். தொடர்ந்து புதுக்குடியிருப்புக்குச் சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் கலந்துரையாடல் நடத்தினர். கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். (த-5-7)

### தந்தைக்கு...

இந்தப் பரிதாபச் சம்பவம் மன்னார் சிலாவத்துறைக் கடலில் நேற்றுப் பகல் இடம் பெற்றது. சிலாவத்துறையைச் சேர்ந்த ரவூப் இவாதுல்லா (வயது - 21) என்பவரே தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார்.

தனயனுக்குத் தந்தை நீச்சல் பயிற்சி வழங்கிக் கொண்டிருந்தபோது தந்தைக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. தந்தை திடீரென நெஞ்சைப் பொத்தியவாறு வீழ்ந்துள்ளார். இதனால் நீச்சல் பழகிக் கொண்டிருந்த தனயனும் தண்ணீரில் மூழ்கியதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அங்கு நின்றிருந்தோரால் தந்தை காப்பாற்றப்பட்டார். எனினும் தனயன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டபோதும் அதற்கு முன்னரே உயிரிழந்து விட்டதாகப் பரிசோதனையில் தெரிவிக்கப் பட்டது. சடலம் மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசா ரணை நடப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-10)

### 3ஆம் நாளாகவும்...

தொடர்ந்தது. வாக்குறுதிகளையோ, கால அவகாசங் களையோ ஏற்கப்போவதில்லை என்றும் காணி விடுவிப்பு மாத்திரமே தமக்கு முடிவாகக் கிடைக்க வேண்டும் என்று அந்த மக்கள் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாது உள்ள 9.5 ஏக்கர் காணிக்குச் சொந்தமான 27 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் சுழற்சி முறையில் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு முன்னரும் இரு தடவைகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளைத் தொடர்ந்து போராட்டங்களை மக்கள் கைவிட்டிருந்தனர். கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை, பரவிப் பாஞ்சானில் தமது காணிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம் முன்பாகப் போராட்டத்தை ஆரம்பித்த மக்கள், இரவு - பகலாக அங்கே தங்கியிருந்து போராடுகின்றனர். அரசியல்வாதிகள் பலரும் அந்த மக்களை நேரில் சென்று சந்தித்து தமது ஆதரவுகளை வழங்கி வருகின்றனர். (த-5-35)

### 20ஆவது...

சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டமும் 20ஆவது நாளாகவும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

பாதுகாப்புத் தரப்பிடம் உள்ள 19 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரி முகாம் முன்பாக - புதுக்குடியிருப்பு பிரதேச செயலக முன்றிலில் அமர்ந்திருந்து மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமான அறவழிப் போராட்டம், 14 ஆம் திகதி தொடக்கம் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டமாக மாறியது.

உணவு ஒறுப்புப் போராட்டத்தில் நேற்று முன் தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனும் இணைந்துகொண்டார்.

தமது காணிகள் கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடுவதில்லை என்பதில் அந்த மக்கள் உறுதியாக இருந்தனர்.

புதுக்குடியிருப்புக் காணி விடுவிப்புப் போராட்டத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் நேரில் சென்று ஆதரவு தெரிவித்து வருகின்றனர். போராட்டம் நடக்கும் பகுதியில் நுளம்பின் தாக்கம் அதிகமாக உள்ளமையால் நேற்றையதினம் அங்கு புகையூட்டல் இடம்பெற்றது. (த-7)

### அரச அதிகாரி...

என்பவர் மீது நேற்றிரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. படுகாயமடைந்த அவர் மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

களுதாவளை கடற்கரை வீதியிலுள்ள அவரது வீட்டுக்கு நேற்றிரவு சென்ற இனம்தெரியாத நபர்கள் அவரை வெளியே அழைத்து அவருடன் உரையாடிக்கொண்டிருக்கும்போது துப்பாக்கியால் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சூட்டுக்கு இலக்கான மட்டக்களப்பு மாவட்டக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் உடனடியாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

# உப உணவுப் பயிர்ச் செய்கையில் குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம்

*மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாமைக்கு இதுவே காரணம் என்கிறார் விவசாயப் பணிப்பாளர்*

அச்சுவேலி, பெப். 23

'யாழ். மாவட்டத்தில் விவசாயிகள் உப உணவு பயிர்ச் செய்கையில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர். அதனாலேயே மாரி மழையை அடுத்த காலப்பகுதியில் மரக்கறி வகைகளின் விலை பெருமளவில் அதிகரிக்கவோ- தட்டுப்பாடு ஏற்படவோ இல்லை' இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்ளப் பணிப்பாளர் அ. செல்வராசா. உப உணவு மற்றும் மரக்கறி பயிர்ச் செய்கையின் நிலைப்பாடு தொடர்பாக விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் மழை நேரங்களில் மரக்கறி வகையின் விலை பெருமளவில் அதிகரிக்கவில்லை. அத்துடன் எந்தக் காலப் பகுதியிலும் மரக்கறி வகைகளை நியாய விலையில் பாவனையாளர் தட்டுப்பாடு இன்றி பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

இதற்குக் காரணம் யாழ்.மாவட்ட விவசாயிகள் மரக்கறி பயிர்ச் செய்கையில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளமை. அத்துடன் மழைவெள்ளத்தினால் மரக்கறிச் செய்கை பாதிப்புகளுக்கு உள்ளாகாத நிலைமையுமாகும்.

மரக்கறிச் செய்கையில் ஆர்வத்தோடு ஈடுபடுவதற்கு மரக்கறிப் பயிர் வகைகள் சிலவற்றின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு மானிய உதவியும் வழங்கப் பட்டது. மரக்கறி மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கை கடந்த காலங்களை விட கூடியளவில் செய்கை பண்ணப்பட்டுள் ளது. இந்த வகையில் யாழ். மாவட்டத்தில் காலபோகத்தில் பீற்றூட் 120 ஹெக்ரேயர் நிலப் பரப்பிலும், பூசணி 94 ஹெக்ரேயர் நிலப்பரப்பிலும், கோவா 45 ஹெக்ரேயர் நிலப் பரப்பிலும், கறிமிளகாய் 38 ஹெக் ரேயர் நிலப் பரப்பிலும், தக்காளி 60 ஹெக்ரேயர் நிலப் பரப்பிலும், கத்தரி 45 ஹெக்ரேயர் நிலப்பரப்பிலும், வெண்டி 73 ஹெக்ரேயர் நிலப் பரப்பிலும், பயிற்றை 90 ஹெக்ரேயர் நிலப் பரப் பிலும், அவரை 12 ஹெக்ரேயர் நிலப்பரப் பிலும், மிளகாய் பயிர்ச்செய்கை 303 ஹெக்ரேயர் நிலப் பரப்பிலும், உருளைக்கிழங்கு 78 ஹெக்ரேயர் நிலப் பரப் பிலும், கரட் 50 ஹெக்ரேயர் நிலப்பரப்பிலும் செய்கை இடம்பெற்றன. - என்றார். (வ-11)



## தகவலறியும் சட்டத்தின் கீழ் காணி விவரங்களைத் தருக

### வவுனியாவில் 180 குடும்பங்கள் விண்ணப்பம்

வவுனியா, பெப்.23

தாம் குடியிருக்கும் காணிகளின் விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்க வேண்டும் என்று கோரி 180 குடும்பங்கள் வவுனியா பிரதேச செய லகத்தில் விண்ணப்பித்துள்ளனர்.

அந்தக் குடும்பங்கள் 15 வருடங்களுக்கும் மேலாக காணிகளில் குடியிருக்கும்போதும் காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. அந்தக் காணிகள் யாருடைய பெயரில் உள்ளன?, நீண்டகாலமாக அதில் வசிக்கும் தமக்கு காணிகள் வழங்கப்படாமைக்கான காரணம் என்ன? என்பது தொடர் பில் காணிகளில் இருப்போர் விவரங்களைக் கோரியு ள்ளனர்.அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவின் நெளுக்குளம், ஊர்மிளா கோட்டம், காத்தான்கோட்டம், ஈசன்கோட்டம், அம்பிகை பாலன் கோட்டம், தாஸ்கோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு விண்ணப்பங்களைக் கைய ளித்தனர். அவற்றைப் பெற்றுக் கொண்ட வவுனியா பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் அ.ஜெயரட் ணம் 14 நாள்களுக்குள் இது தொடர்பில் அறியத் தரப்படும் என்று தெரிவித்துள்ளதுடன் மக்களிடம் விண் ணப்பங்களைப் பெற்றுக் கொண்டமைக்கான பதில் கடி தங்களை வழங்கினார்.

கடந்த 3ஆம் திகதி முதல் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. (ற-21)

## தென்மராட்சியில் வீட்டுத் திட்டப் பயனாளிகளில் 45 பேருக்கு நிதி வழங்க ஏற்பாடு

தென்மராட்சி, பெப். 23

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்தில் இதுவரை கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டதா 45 வீடுகளுக்கான நிதி வழங்கப்படவுள்ளது.

பிரதேசத்தில் மாற்று வலுவுடையயோரைக் கொண்ட குடும்பங்கள் காணாமற்போனோரின் உறவுகளின் குடும்பங்கள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றவர்களின் குடும்பங்கள், தமிழகத்திலிருந்து வருகை தந்து சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் ஆகியோரிலிருந்து 45 பயனாளிகளின் பெயர்களைத் தெரிவு செய்து அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது.

இதனையடுத்து கிராம அலுவலர்களும் பொருளாதார அபிவிருத்தி அலுவலரும் பிரிவு ரீதியாக குறித்த தகைமையுடைய குடும்பங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட போர் மற்றும் வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட 879 குடும்பங்களின் வீடுகள் கட்டும் பணிகள் நிறைவு செய்யப் படாத நிலையில் உள்ளன என்று கடந்த வருடம் பிரதேச செயலகத்தால் அறிக்கையிடப்பட்டிருந்தது. இவர்களில் 90 குடும்பங்கள் கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்டு தலா 2 லட்சம் ரூபா வீதம் வழங்கி வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள் ளன.அந்த வகையில் இந்த வருடம் 45 குடும்பங்கள் மட்டும் தெரிவு செய்யப் படவுள்ளன.

பிரதேசத்தில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்படாத நிலையில் 879 குடும்பங்களும் நிரந்தர வீடுகளின்றி 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களும் உள்ள நிலையில் 45 குடும்பங்களை மட்டும் அலுவலர்கள் தெரிவு செய்து பதிவுகளை மேற்கொள் வது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர். (ணவ-9)

## சாவகச்சேரி நகர சபையால் கழிவகற்றல் சேவை விரிவாக்கம்

### திங்கள் முதல் புதிய ஒழுங்கில்

சாவகச்சேரி, பெப். 23

சாவகச்சேரி நகர சபையால் முன்னெடுக்கப்பட்ட வட்டாரச் சுத்திகரிப்புப் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அட்டவணைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறையில் தலா இரு உழவு இயந்திரங்கள் வீதம் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று அறிவிக் கப்பட்டது.

'சபை எல்லைக்குட்பட்ட டச்சு வீதி தொடக்கம் மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு, சங்கத்தானை, கோயிற் குடியிருப்பு, சாவகச்சேரி நகர், சாவகச்சேரி வடக்கு ஆகியவை வலயம் 1 ஆகவும் டச்சு வீதியிலிருந்து நுணாவில் கிழக்கு, நுணாவில் மத்தி, நுணாவில் மேற்கு, கல்வயல், மண்டுவில் ஆகிய பகுதிகள் வலயம் 11 எனவும் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்கில் ஒவ்வொரு திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை வார நாட்களில் நடைபெறும்.

வார இறுதி நாட்களான சனி, ஞாயிறு தினங்கள் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெறும் என்று சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது' என்று சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார்.

நகரத்தை சுத்தமாக வைத்திருப்போம் என்னும் நகர சபையின் திட்டத்தின் கீழ் சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ப்படும்.

பிரதேசத்தில் டெங்கு நோய்த் தொற்றுத் தாக்கம் அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் சாலைகள் பொது இடங்கள் பயன்பாடற்ற காணிகள் போன்றவற்றில் குப்பைகள் போடுவதைத் தவிர்க்கும் பொருட்டும் வட்டார சுத்திகரிப்புச் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வட்டார ரீதியில் குப்பை அகற்றும் வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும். வார நாட்களில் தமது குடியிருப்புக் காணிக்குள் வைக்கப் பட்டிருக்கும் குப்பைகள் மற்றும் பாவனைக்குதவாத பிளாஸ்ரிக் பொருள்கள், தகரங்கள், பழைய ரயர்கள் உள்ளிட்ட கழிவுப் பொருள்களை வாகனங்களில் கையளிக்க வேண்டும். சேவையில் ஈடுபடவுள்ள வாகன சாரதிகளின் தொலைபேசி இலக்கங்கள் அந்தந்தப் பகுதி கிராம அலுவலரிடம் வழங்கப்பட்டுள்ளன. சாரதிகளுடன் பொதுமக்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஓவ்வொரு திங்கட்கிழமைகளில் 7, 9, 10 ஆகிய வட்டாரங்களிலும் செவ்வாய்க்கிழமைகளில் 1, 2, 3 ஆகிய வட்டாரங்களிலும் புதன்கிழமைகளில் 3, 4, 10, 11 ஆகிய வட்டாரங்களிலும் வியாழக் கிழமைகளில் 5, 7, 8 வட்டாரங்களிலும் வெள்ளிக்கிழமைகளில் 1, 6 ஆகிய வட்டாரங்களிலும் சுத்திகரிப்புச் சேவைகள் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

## தராசுகள் சீலிடும் பணி மானிப்பாயில் இன்று

யாழ்ப்பாணம்.பெப்.23

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையினரால் நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகள் முத்திரையிடல் நடவடிக்கை இன்று முதல் எதிர்வரும் 3ஆம் திகதி வரை இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டது.

இன்று தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமையும், 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரைக்கும் மானிப்பாய் பிரதேச சபை அலுவலகத்திலும், எதிர் வரும் மார்ச் மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு உப அலுவல கத்திலும் நடைபெறும்.

இந்த நாட்களில் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்டவர்கள் தமது நிறுவைகள் அள வைகள் நிறுக்கும் கருவிகளை முத் ரையிடலாம் என்று வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (வ-ரி)



திருநெல்வேலி
பழங்கிணற்றடி
வீரகத்தி விநாயகர் ஆலயம்
இன்று 23.02.2017
13 ஆம் திருவிழா

பிள்ளை வாரண மதி வதனப்
பெரு வீரகத்தி விநாயகரை
எள்ளுப்பொரி தேனவல் கடலை
இனிய முப்பழமும் இளநீரும்
வள்ளிக்கிழங்கும் மாவிளக்கும்
வகையாய் பொங்கலும் மோதகமும்
கிள்ளிய அறுகொடு பூவுமிட்டு
கேண்மை யொடும் நாம்கை தொழுவோம்.

அறிவொளி போன் சொப்
இல.27, பலாலி வீதி, திருநெல்வேலி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு
மேரி யோசை. நெல்சன்
(பயிற்றப்பட்ட றோ.க. B.Ed)

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச
நினைவு மகாநாட்டு மண்டபத்தில் 31.01.2017
அன்று நடைபெற்ற தேசிய கல்வி நிறுவக
பட்டமளிப்பு விழாவில் எமது பாடசாலை
ஆசிரியர்
திரு. மேரி யோசை நெல்சன்
அவர்கள் "கல்விமாணி பட்டம்"
பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் அவர் கல்வி உலகில்
மேலும் பட்டங்கள் பெற
வாழ்த்துகின்றோம்.



ஆசிரியர் நலன்புரிசங்கம்
யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை
மிருசுவில்
(AJA/IN/844) (22,17,18)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 1853 ஏக்கரில் புகையிலைச் செய்கை

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு ஆயிரத்து 853 ஏக்கரில் புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு யாழ்.மாவட்ட விவ சாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர் காலத் தில் புகையிலைச் செய்கை தடை செய்யப்படும் என்று அரசு அறி வித்துள்ள போதிலும், குறுகிய காலத்தில் அதிக வருவாய் கிட்டுவதால் விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவில் 261.5 ஏக்க ரிலும், வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் 230.5 ஏக்கரிலும், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 27.5 ஏக்கரிலும், சங்கானைப் பிரதேச செயலக பிரிவில் 62.5 ஏக்கரிலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 7 ஏக்கரிலும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் 256 ஏக்க ரிலும், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 10 ஏக்கரிலும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 93 ஏக்கரிலும், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் 750 ஏக்கரிலும், பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் 99 ஏக்கரிலும், சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் 60 ஏக்கரிலும் புகையிலைச் செய்கை மேற்கொள்ளப் படுகின்றது- என்றார்.

(ந-101)

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் உயர்திரு. முருகேசு சண்முகமூர்த்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



தோற்றம் 17.10.1955 — மறைவு 24.01.2017

குடும்பத்தின் ஒளிவிளக்காய் மிளிர்ந்த எம் தலைவனே!
அறிவூட்டி சீராட்டி வளர்த்த தந்தையே!

நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள்மயமானது உலகம்
எங்கும் தேடுகிறோம் உங்கள் முகம் காணவில்லை
அழுதபோதும் எங்கள் மனம் ஆறவில்லை
பல ஜென்மங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுடன் வாழ்ந்திடுவோம்

எங்கள் குடும்பத்தின் சுடராய் வாழ்ந்து எங்களையும் உயர்வாக வாழவைத்து 24.01.2017 அன்று சிவபதமடைந்த எங்கள் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அத்துடன் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (23.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

பிரிவால் துயருறும்...
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
வேலுப்பிள்ளை
அருள்ஞானசுந்தரம் -(J.P)
(முன்னாள் உரிமையாளர் - அருள்றேடர்ஸ், சுன்னாகம்)

மலர்வு 29 . 06 . 1946 — உதிர்வு 24 . 01 . 2017


அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு இன்று (23.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகிகள் அறக்கொடை நிறுவனத்தின் (TCT) சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

133, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 704 6968

அ.பிரியதர்ஷினி (மகள்),
வை.க.ரவீகரன் (மைத்துனர்)

(AJA) (818) (13.18)

## மரண அறிவித்தல்



**கார்த்திகேசப்பிள்ளை இராமச்சந்திரன்**

பருத்தித்துறை, வியாபாரி மூலையைச் சேர்ந்த கார்த்திகேசப்பிள்ளை இராமச்சந்திரன் 21.02.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு .திருமதி கார்த்திகேசப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னம்பலம் தம்பதியரின் அன்பு மருமகனும் திருமகள் (ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர், சங்கீதம், கல்விப்பணிமனை, மாத் தளை) அவர்களின் அன்புக் கணவரும் சுகன்யா(லண்டன்), கார்த்திக் (மின் அத்தியட்சகர், திட்டமிடல் பிரிவு, இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்), பூர்ணிமா (மக்கள் வங்கி, ஹட்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சேந்தன் (பொறியியலாளர் - லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும் சைந்தவியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2017) வியாழக்கிழமை இல.64/6, இரத்தோட்டை வீதி, களுதாவளை, மாத்தளை இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 11.30 மணியளவில் மாத்தளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

077 733 6696/ 077 790 3331

## கரம்பைக்குறிச்சிப் பாடசாலைக்கு புதிய அதிபரை நியமிக்கவேண்டும்

*வலியுறுத்தி கல்விப் பணிப்பாளருக்கு மனு*

தென்மராட்சி, பெப். 23

வரணி கரம்பைக்குறிச்சி பாடசாலைக்கு புதிய அதிபரை நியமிக்கக் கோரி பாடசாலை சமூகத்தினர் நேற்று தென்மராட்சி கல்வி வலயத்துக்கு வருகை தந்து வலயக் கல்விப் பணிப்பாளரிடம் மனுக் கையளித்தனர்.

வரணி கரம்பைக்குறிச்சி பாடசாலையில் கடமை நிறைவேற்று அதிபர் கடமையாற்றி வந்துள்ளார். வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு அண்மையில் இலங்கை அதிபர் சேவைக்குள் இணைக்கப்பட்ட அதிபர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

இதன்போது பாடசாலையில் கடமை நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றியவர் தாமாவே முன்வந்து வேறு பாடசாலையில் கடமையாற்ற விரும்புவதாகத் தெரிவித்தார். அவரை வேறு பாடசாலையில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டது.

வரணி கரம்பைக்குறிச்சிப் பாடசாலைக்கு அதிபர் சேவை தரம் 111 ஐச் சேர்ந்த அதிபர் நியமிக்கப்பட்டார். அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட தரம் 111 அதிபரின் செயற்பாட்டில் திருப்தி கொள்ளாத கல்விச் சமூகத்தினர் அவரை இடமாற்றம் செய்து புதிய அதிபரை நியமிக்குமாறு நேற்று வலய கல்வி அலுவலகத்துக்கு வருகை தந்து வலயக் கல்விப் பணிப்பாளருடன் உரையாற்றினர்.

புதிய அதிபர் ஒருவரை விரைவில் இடமாற்றம் செய்வதாக கூறிய பணிப்பாளரின் பதிலில் திருப்தியடைந்த கல்விச் சமூகத்தினர் அதனை ஏற்றுக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-9)


## கண்ணிவெடியகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்

THE HALO TRUST

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 16நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக் கொள்ளவேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமதுதரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்வதாகும். எனவே இதனைக் கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

**குறிப்பு :** எமது முன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதியவிண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரக்கோவைகளை எதிர்வரும் 28ஆம் திகதி மாசி மாதம் 2017 அன்று செவ்வாய்க் கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்க முடியும்.

**ஹெலோ ரஸ்ட், 450,திருநகர் மேற்கு,
கிளிநொச்சி.**

## கொங்கிறீற் தூண்கள் விற்பனை

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் வேம்பன் வீதி, உரும்பிராயில் உள்ள கொங்கிறீற் உற்பத்திப் பகுதியில் கீழ் குறித்த கொங்கிறீற் தூண்கள் உடன் விற்பனைக்குண்டு.

01) 8.3.மீற்,ஆர். சி.தூண்கள் (மின்கம்பங்கள்)
02) 6.7 மீற் .ஆர். சி. தூண்கள் (தொலைத்தொடர்பு கம்பம்)

மேலதிக விவரங்களுக்கு :
பொறுப்பதிகாரி
சிமெந்துக் கூட்டுத்தாபனம், வேம்பன் வீதி , உரும்பிராய்
தொடர்பு கொள்ளவும்:
021 321 5341 , 077 112 1690
தலைவர்
சிறீ லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம் ,
27, வொக்சோல் வீதி, கொழும்பு – 02
011 244 0203

## தேவை

1. யாழ்நகரை அண்டிய பகுதிகளில் உணவகத்திற்கு(பீசா) கடை வாடகைக்குத் தேவை.
2. விற்பனைப் பணியாளர்களும் தேவை.

075 076 6979

## விற்பனை ஆள்கள் தேவை

பிரபல வியாபார விற்பனை நிலையத்திற்கு ஆண்கள் தேவை.

தொடர்பு: 075 042 2389

## காணி விற்பனைக்குண்டு

அச்சுவேலியில் மகாவித்தியாலயத்துக்கு முன்பாகவும், இலங்கை வங்கிக்கு அருகிலும் (யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்திருக்கும்) நிலப்பரப்பு 7 குளி 16.25 விசாலம் கொண்ட கொத்திக்கலட்டி என்னும் பெயருடைய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 757 6258

## வேலை ஆள்கள் தேவை

- ★ போட்டோக் கொப்பி அடிக்கத் தெரிந்தவர்கள்.
- ★ கணினி ரைப்செற்றிங் தெரிந்தவர்கள் (Corel draw, Adobe Photoshop) அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

தீபம் பிறிண்டேர்ஸ்
இல.717, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
077 250 6234

# பொலிஸாரின் மோ. சைக்கிளுடன் மோதி பொதுமகன் காயம்

தென்மராட்சி, பெப். 23

போக்குவரத்துப் பொலிஸாரின் மோட் டார் சைக்கிளை ஏ - 9 சாலையில் வேக மாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி ஏற் பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த பொதுமகன் காயமடைந் தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவ கச்சேரி வைத்தி யசாலைக்கு அருகில் இடம்பெற்றது.

ஏ-9 சாலையில் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு அண்மை யாக காலை தொடக் கம் கடமைகளை மேற்கொண்ட பொலி ஸார் அங்கிருந்து மதிய உணவுக்காக புறப்படுவதற்கு தமது மோட்டார் சைக்கிளை சாலைக்கு கொண்டுவந்தனர். இதன் போது சாவகச்சேரி நகரிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரின் மோட் டார் சைக்கிளுடன் மோதியது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொதுமகன் சிறுகாயம டைந்தார். அவருக்கு வைத்தியசாலையில் சிகிச்சையளிக் கப்பட்டது. பின்னர் அவரை பொலிஸ் நிலையத்துக்கு போக்குவரத்துப் பொலிஸார் அழைத்துச் சென்றனர் எனத்தெ ரிவிக்கப்பட்டது. (வ -9)

# சிவராத்திரி விழா

பளை, பெப். 23

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில் சிவராத்திரி விழாவும் ஆலய அறநெறிச் சமூக விழாவும் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம் ஆலய முன்றிலில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆலயத்தில் நான்கு சாம வழிபாடுகள் நடைபெறும் அதேவேளையில் அறநெறிச் சமூக விழாவும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் அறநெறிச் சமூக விழாவுக்கு முதன்மை விருந்தினராக பளை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.அருட்செல்வன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மாசார் அ.த.க.பாடசாலை அதி பர் த.கணேசலிங்கம், ஸ்ரெப் இன்ஸ்ரிரியூட் நிர்வாகி கு.குணரூபன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பளை கமநல சேவைகள் நிலைய விவசாயப் போதனாசிரியர் வை.ஞானபாஸ்கரன் திருப்பணியாளர் கோ.சசிகரன் ( லண்டன்) ஆகியோரும் கலந்து கொள்வர்.

' சிவ மகிமை ' என்னும் தலைப்பில் இதிகாசமணி புலவர் சு.சோமசுந்தரம் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்துவார். நிகழ் வில் ஆலய அறநெறி மாணவர்களின் பண்ணிசை நடனம் பேச்சு கவிதை ஆகியவை உள்ளிட்ட கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

நிகழ்வில் மகா சிவராத்திரியை முன்னிட்டு ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கல், கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பிரதேச மாணவர்கள் 6 பேர் கௌரவிப்பு, பல்கலைக்கழக அனுமதி பெற்ற 11 மாண வர்கள் கௌரவிப்பு, சமய சமூக கலாசாரம் அரச சேவை துறைசார் புலமை சார்ந்தோர் கௌரவிப்பில் கந்தையா பொன்னம்பலம் (இறைபணி) விநாயகமூர்த்தி இராசேந்திரம் (புராண பாராயணம்) குழந்தையர் கந்தசாமி ( மரச் சிற்பம்) முத்தையா செல்லத்துரை (புராணமும் ஆலய சிறப்பு தின அலங்காரமும்) செல்லத்துரை சுப்பிரமணியம் (புராணம் இதிகாசம் இறைபணி) ஆகியோர் கௌரவிப்பு என்பன இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம், அரியாலை சிறிகலைமகள் சனசமூக நிலைய கலைக் குழுவின் மகா சிவராத்திரி விழா நாளை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று தெரி விக்கப்பட்டது.

நிலையத் தலைவர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சிறந்த கலைச் சேவை வழங்கிவரும் நிலைய அங்கத்தவர்களுக்கு கலைமகள் கலைச் சிகரம் விருதுகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது (வ-9)

# பெற்றோருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.23

வேம்படி உயர்தரப் பெண்கள் பாட சாலையில் 2017ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவிகளின் பெற்றோர்களுக்கான கலந் துரையாடல் எதிர்வரும் மார்ச் முத லாம் திகதி புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு தம்பையா மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டது. பரீட்சைக்குத் தோற் வுள்ள மாண விகளின் பெற்றோர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

### சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்

# குருதிப் பரிசோதனை செய்வதில் தாமதம் மேலதிக அதிகாரியை நியமிக்கக் கோரிக்கை

தென்மராட்சி, பெப்.23

தென்மராட்சியில் டெங் குத் தொற்றுக்குள்ளா னோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத் தியசாலை ஆய்வுகூடத் துக்கு மேலதிகமாக குரு திப் பரிசோதனை அதி காரி நியமிக்கப்பட வேண் டும்.

இவ்வாறு விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர் களும், பிரதேச மக்களும் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததா வது:

வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் குருதிப் பரிசோ தனை அதிகாரி ஒருவரே பணியாற்றுகின்றார். வெளிநோயாளர் பிரிவு மற்றும் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர் கள் தங்களின் இரத்த மாதிரிகளைப் பரிசோத னைக்காக ஆய்வு கூடத் துக்குவழங்கிவிட்டுமணிக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. தின மும் வெளிநோயாளர் பிரி வில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள தும், விடுதிகளில் தங் கியுள்ள நோயாளர்களி னதும் குருதி மாதிரிகள் ஆய்வுகூடத்துக்கு அனுப் பப்படுகின்றன.

பரிசோதனைக்கு அனுப் பப்படும் குருதி மாதிரி களின் அறிக்கை மதியத் துக்குப் பின்னர் வெளி நோயாளர் பிரிவுக்கும் மாலை 6 மணிக்குப் பின்னர் விடுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

> வெளிநோயாளர் பிரிவு மற்றும் விடுதி களில் தங்கியுள்ள நோயாளர்கள் தங்களின் இரத்த மாதிரிகளை பரிசோத னைக்காக ஆய்வு கூடத்துக்கு வழங்கி விட்டு மணிக் கணக் கில் காத்திருக்க வேண்டியுள்ளது.

டெங்கு மற்றும் உண் ணிக் காய்ச்சலால் பீடிக் கப்பட்டவர்களின் குருதி மாதிரிகளை இரண்டு அல்லது மூன்று தட வைகள் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியுள் ளது. தனியொருவர் அனைத்துப் பரிசோதனை களையும் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நோயாளர்கள் அதிக நாள் கள் வைத்தியசாலையில் தங்க வேண்டி ஏற்படு கின்றது.

தற்போது தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றும் அதிகரித்து வருவதால், நோயாளர் களின் நலன்கருதி தற் காலிகமாகவேனும் ஆய்வுகூடத்துக்கு மேல திக அலுவலரை நிய மிக்க மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என் றனர்.

வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் குருதிப் பரிசோத னைக்குரிய அனைத்து வசதிகளும் உள்ளன. அண்மைக் காலமாக டெங்கு மற்றும் உண் ணிக் காய்ச்சல், வைரஸ் காய்ச்சல் போன்றவற் றால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற வருவோரின் எண் ணிக்கை அதிகரித்துள் ளது. தினமும் வெளிநோயா ளர் பிரிவில் சிகிச்சைபெற வரும் 600க்கு மேற்பட்ட நோயாளர்களில் 400க்கு மேற்பட்டோர் காய்ச்ச லால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற வருகின்றனர்.

ஆய்வுகூடத்தில் ஒரு அதி காரியே பணியாற்றுகின் றார். அவர் தினமும் 500க்கு மேற்பட்ட குருதி மாதிரிகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப் பிக்கின்றார். டெங்கு நோய் பாதிப்பு குறைந்த வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆய்வு கூட அலுவலர்களை தற் காலிமாக நியமித்தால் இலகுவாக இருக்கும்- என்று வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித் தனர். (ற-9)

# தெல்லியூர் துர்க்காதேவிக்கு மாசி மக இலட்சார்ச்சனை

அளவெட்டி,பெப்.23

தெல்லிப்பழை துர்க்காபு ரம் ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மாசி மக இலட் சார்ச்ச னைத் திருவிழா எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகி பத் துத் தினங்கள் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இடம் பெற்றும் என்று அறி விக் கப்பட்டது.


11ஆம் திகதி மாசி மகப் பெருவிழா நடை பெறும். இந்தத் தினத்தில் எண் பத் தொரு கலச முழுக்குஸ் வர்ண பத்ம மலர் அர்ச னையும் உள்வீதி உலா நிகழ்வும் இடம் பெறும் என்று தெரிவிக் கப்பட்டது.

இந்த நாளில் பால், தயிர், இளநீர், பழவகை, மலர் முதலியவற்றை மாசி மக சிறப்பு உற்சவத்தில் உரிய நேரத் துக்குக் கொடுத் துதவுமாறு ஆலய நிர்வா கத்தினரால் கேட்கப் பட்டுள்ளது. (வ-36)

# போக்குவரத்து விதிமுறைகளை மீறியோருக்குத் தண்டம்

சிவப்பு வெள்ளைச் சமிக்ஞைகளுக்கு எதிராகச் செயற்பட்டமை, பாதசாரிகள் கடவையில் வாக னத்தை நிறுத்தாமல் சென்ற குற்றச்சாட்டுக்க ளின் பேரில் கைது செய்யப்பட்ட இருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட் டுள்ளது. இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாண நீதி வான் மன் றுக்கு விசாரணைக்காக வந்தது. குற்றவாளிகள் தமது குற்றத்தை ஒப்புக்கொண் டதையடுத்து நீதிபதி சதீஸ்தரன் குற்றவாளிகள் ஒவ்வொரு வருக்கும் தலா 5ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (ற-ரி)





# இலங்கை வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, பெப்.23

கடந்த மாதம் முதல் இலங் கைக்கு வரும் சுற்றுலாப் பய ணிகளின் எண்ணிக்கை 12.9 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி வெளி யிட்டுள்ள புதிய பொருளாதார அறிக்கையில் இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு இலங் கைக்கு ஒரு லட்சத்து 94 ஆயி ரத்து 280 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இந்த ஆண்டு 2 லட்சத்து 10 ஆயி ரத்து 360 சுற் றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்று தெரிவிக் கப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் சுற்றுலாப் பயணிகள் மூலம் கிடைத்த வருமானம் 322 மில் லியன் அமெரிக்க டொலராகும். இந்த ஆண்டு ஜனவரி மாதம் 363.6 மில்லியன் வருமானம் கிடைத்துள்ளது என்று தெரிவிக் கப்பட்டது. (ற)

# சட்டவிரோதமாக வாடி அமைத்தவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப். 23

அல்லைப்பிட்டியில் சட்டவி ரோத மாக வாடி அமைத்தவருக்கு பிணை வழங்க மறுத்த நீதிமன்று, அவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

நாவாந் துறைப் பகுதியைச் சேர் ந்த ஒருவர் அல்லைப் பிட்டியில் கடற்கரையோரம் இரண்டு நிர ந்தர மீன் வாடி களை அமைத்து ள்ளார். குறித்த வாடிகள் அமை க்கும் போது உரிய முறையில் அனுமதிகள் பெறப்படவில்லை என்று அவருக்கு எதி ராகப் பொலி ஸாரால் குற்றஞ் சாட்டப் பட்டது. கடலோர பாதுகாப்பு பிரிவு சட்டத்தின் கீழ் அவர் ஊர்கா வற்றுறை நீதிவான் மன் றில் நேற்று முற்படுத் தப் பட்டார். அவர் சார்பில் சட்டத்தரணி முன் னிலையாகி பிணை கோர ப்பட்டது. பிணை வழங்க மறுத்த நீதிவான் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத் தரவிட்டார். (வ-4,37)

மட்டுவிலில் டெங்குக் கட்டுப்பாட்டுச் சோதனை

## 5 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

தென்மராட்சி, பெப். 23
மட்டுவில் பகுதியில் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் நேற்றுமுன்தினம் நடாத்திய திடீர் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் குடியிருப்புகளை டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் வைத்திருந்த நால்வருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நோய்த் தொற்றுப் பாதிப்பு அதிகம் உள்ளதாகக் கண்டறியப்பட்டது. இந்த நிலையில் பிரதேசத்தில் இடம்பெற்ற டெங்கு கட்டுப்படுத்தல் தொடர்பான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் டெங்கு நோய்த் தொற்றுப் பாதிப்பு அதிகமாகக் காணப்படும் இடங்களில் சுகாதாரப் பகுதியினர், தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்கள், சாவகச்சேரி நகர சபையினர், சாவகச்சேரி பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவினர் மற்றும் கிராமிய டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுவினர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடந்த வாரம் கல்வயல் நுணாவில் ஆகிய பகுதிகளில் 915 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மட்டுவில் தெற்கு மற்றும் மட்டுவில் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நேற்றுமுன்தினம் 985 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பரிசோதனைகளின் போது 325 காணிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய கொள்கலன்கள் காணப்பட்டுள்ளன. 115 காணிகளின் உரிமையாளர்களுக்கு காணிகளைத் துப்பரவு செய்வதற்கென சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டன. ஒன்பது பேரின் குடியிருப்புகளில் காணப்பட்ட மதில்களில் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள் வெட்டப்பட்ட வாழை மரங்கள் கால்நடைகளுக்கு நீர் வைக்கப்பட்டிருந்த பாத்திரங்கள் போன்றவற்றில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் உள்ளமை கண்டறியப்பட்டன.

இதேவேளை, சாவகச்சேரி நகரம் மற்றும் கோயிற்குடியிருப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இன்று டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் நடைபெறும் என்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். (வ- 9)

# மாங்குளத்தை வடக்கின் தலைநகராக்க ஏற்பாடு

*ஏ-9 வீதியில் 31 ஆயிரம் ஏக்கர் காணிகள் இனங்காணப்பட்டதாக சம்பிக்க தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 23
வடக்கு மாகாணத்தின் தலைநகரமாக மாங்குளத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் 31 ஆயிரம் ஏக்கர் காணி இனங் காணப்பட்டுள்ளது என்று மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தின் தலைநகரமாக மாங்குளம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை அபிவிருத்தி செய்வது தொடர்பில் பல தரப்பு களுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாணம் தொடர்பில் செயல் நுணுக்க ஆய்வும் செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி வனம், சுற்றாடல், நீர் வளம், சுற்றுலா உள்ளிட்ட 5 அடிப்படைகளின் கீழ் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இதனடிப் படையிலேயே அபிவிருத்தி நடைபெறும்.

மாங்குளத்தைத் தலைநகரமாக அபிவிருத்தி செய்ய ஏ - 9 வீதியின் இரு மருங்கிலும் 31 ஆயிரம் ஏக்கர் காணி இனங்காணப்பட்டுள்ளது. இதில் ஆயிரத்து 400 ஏக்கர் காணி காடு சார்ந்தது. வனம் மற்றும் நீர் நிலையங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் சுற்றாடல் தொடர்பான நடைமுறைகள் இறுக் கமாகக் கடைப்பிடிக்கப்படும். கனக ராயன்குளம் ஆற்றுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாது.

அபிவிருத்தி இனங்காணப்பட்டு ள்ள இடங்களில் காட்டு யானைகளின் வழித்தடங்கள் இருப்பதாக குறிப் பிடப்பட்டாலும் அவ்வாறு எதுவும் இல்லை என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. திட்டத்தைத் தயாரிப்பது எமது கடமை. அதனை நடை முறைப்படுத்துவதற்கு முன்னர் இது குறித்து சகல தரப்பினரதும் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும் - என்றார்.

(த-5)

## கூட்டுறவு ஊழியர்களுக்கு சிவராத்திரி விடுமுறை

யாழ்ப்பாணம், பெப். 23
சிவராத்திரி வழிபாடு நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும் நிலையில் வடக்கிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அறிவித்தது.
(வ-4,17)

## சிவராத்திரி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப். 23
அளவெட்டி மேற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில்நாளை வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி சிறப்பு வழிபாடுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
மாலை 5 மணிக்கு சிறப்பு முழுக்கு ஆராதனைகளுடன் ஆரம்பமாகும் சிவராத்திரி வழிபாடுகள் நான்கு சாமங்களும் நடைபெறும். அதனிடையே சிறப்பு சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம், இசை நிகழ்வுகள் என்பன இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-160)

◆ ◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப். 23
மகா சிவராத்திரியை முன்னிட்டு பொன்னாலை சந்தியில் அமைந்துள்ள நாராயணன் தாக சாந்தி நிலையத்தினர் நாளை வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடுகளை ஏற்பாடு செய்துள்ளனர்.
மாலை 6 மணிக்கு அகண்ட கற்பூரதீபம் ஏற்றப்பட்டு மறுநாள் காலை 6 ம்ணி வரைக்கும் தொடர்ந்து அணையா தீபமாக சிவ ஆராதனை செய்யப்பட உள்ளது. வீணாகான குருமுதல்வர் சிவஸ்ரீ.சபா. வாசுதேவக்குருக்களின் ஆசிகளுடன் அகண்ட கற்பூர தீபத்தை சித்தன்கேணி அருள் மிகு வைரவர் ஆலய தர்மகர்த்தா சிவநெறி சுகந்தன் சண்முகநாதன் ஏற்றி ஆரம்பித்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-10)

◆ ◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.23
சைவ சமய அருள்நெறி மன்றம் நடத்தும் மகா சிவராத்திரி விழா நாளை வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு வலி. கிழக்கு சைவ சமய அறநெறி மன்ற சிறிசீரடி சாயிநாத மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
(வ)

◆ ◆ ◆ ◆

தெல்லிப்பழை, பெப்.23
தெல்லிப்பழை கிழக்கு சித்தியம் பதியுறை அண்ணமார் ஆலய மகா சிவராத்திரி விழா நாளை 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு சிறப்பு வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
மாலை 6 மணிக்கு முதலாம் சாம வழிபாடும் இரவு 9 மணிக்கு இரண்டாம் சாம வழிபாடும் நள்ளிரவு 12 மணிக்கு லிங்கோற்பவ கால வழிபாடும் பின்னிரவு 4 மணிக்கு நான்காம் சாம வழிபாடும் மறுநாள் காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகளும் அண்ணமார் பெருமான் வெளிவீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும். தொடர்ந்து மகேஸ்வர வழிபாடு நடைபெறும். அத்துடன், இரவு முழுவதும் சமய கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.
(வ)

◆ ◆ ◆ ◆

காரைநகர், பெப். 23
காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை மகா சிவராத்திரி வழிபாடு சிறப்பாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நான்கு சாமங்களும் சிறப்பு முழுக்கு ஆராதனைகளும் வழிபாடுகளும் இடம்பெற உள்ளதுடன் மறுநாள் சனிக்கிழமை அதிகாலை சுவாமி எழுந்தருளி துர்வாக சாகர சமுத்திரத்தில் தீத்தமாடுதலும் இடம்பெறும். தொடர்ந்து பத்தர்கள் தீத்தமாடுவதற்கு அனுமதிக்கப்படுவர்.
நாளை அதிகாலை தொடக்கம் மறுநாள் அதிகாலை வரை காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் 'ஓம் நமசிவாய சிவாயநமஓம்'என்னும்திருவைந்தெழுத்து மந்திரம் இருபத்து நான்கு மணிநேரம் ஓதும் அகண்ட நாம வழிபாடும் அஷ்டோத்திர நாம அர்ச்சனை ஆகியனவும் நாள் முழுவதும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-250)

## விஸ்டம் கல்லூரியின் மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23
விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரியின் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் 'விஸ்டத்தின் வெற்றி விழா' நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.01 மணிக்கு யாழ்ப்பாண இந்துக் கல்லூரி சபாலிங்க அரங்கத்தில் பணிப்பாளர் க.ரவிக்குமார் தலைமையில் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சின் தொழில் நுட்பப்பிரிவு கல்விப் பணிப்பாளர் (இசுறுபாய) ஏ.டி.நந்தசேன, சிறப்பு விருந்தினராக தேசியக் கல்வி நிறுவகத்தின் தொழில்நுட்பப்பிரிவுப் பணிப்பாளர் (மகரகம) என்.ரி.கே.லொக்குலியன, கௌரவ விருந்தினர்களாக கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.ரி. நசுமுதீன், தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர் ஜி.கே.கமகே, தொழில்நுட்பக் கல்லூரி மூத்த விரிவுரை யாளர் (மருதாணை) ஏ.ஆரிய சிங்க, தென்மாகாணக் கல்வித் திணைக்கள ஆசிரிய ஆலோசகர் (காலி) எம்.ஆர். எம்.நவாஸ் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)



யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு வடலியடைப்பு அரசடி சன சமூக நிலையக் கட்டடத்தின் யன்னல் கண்ணாடிகள் நேற்று முன்தினம் இரவு விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-21)

தேசிய வினாடி -வினாப் போட்டி

## கரவெட்டி விக்னேஸ்வரா மாணவர்கள் முதலிடம்

பருத்தித்துறை, பெப். 23
தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற வினாடி–வினாப் போட்டியில் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பிடித்தனர்.
இலங்கை மின்சார சபையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இணைத்து நடாத்திய இந்த வினாடி வினாப் போட்டியில் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் தலா 5 மாணவர்கள் பங்கேற்றனர்.
இந்தப் போட்டியில் தேசிய ரீதியில் இருந்து 90 பாடசாலைகள் கலந்துகொண்டன. இதில் யாழ்.மாவட்டம் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேரந்த விக்கினேஸ்வராக்கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.
முதலாம் இடத்தைப் பிடித்துக்கொண்ட மாணவர்களுக்கு மடிக் கணினிகளும் பாடசாலைக்கு ஓர் புறயக்ரரும் வழங்கி வைக்கப்பட்டன. அதனை வழங்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (வ-101)

## பொலிஸாருக்கு சாரயம் விற்றவர் தண்டம் செலுத்தினார் நீதிமன்றில்

தென்மராட்சி, பெப். 23
சிவில் உடையில் சென்ற பொலிஸ் அலுவலருக்கு 180 மில்லி லீற்றர் அரச சாராயத்தை 350 ரூபாவுக்கு விற்பனை செய்த இடைக்குறிச்சி வாசிக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தர விட்டார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான்.
எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டினையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர் சிவில் உடையில் அங்கு சென்றார். அவருக்கு 180 மில்லி லீற்றர் அரச சாராயத்தை விற்பனை செய்த போதே மறைந்திருந்த பொலிஸார் கையும் மெய்யுமாக வியாபாரியைப் பிடித்தனர்.
இதேவேளை, கொடிகாமம் பகுதியில் கசிப்பு வைத்திருந்த நபரையும் பொலிஸார் கைது செய்தனர்.
இந்த இருவருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்கினை விசாரித்த நீதிவான் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த நபருக்கு 30 ஆயிரம் ரூபாவும் கசிப்பு விற்பனை செய்த நபருக்கு 15 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்து உத்தரவிட்டார்.
(வ-9)

# தமிழர் நிலங்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

## மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியம் அரச தலைவர் மைத்திரிக்குக் கடிதம்

மன்னார், பெப்.23

தமிழ் மக்களை இன அழிப்புச் செய்து 8 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் படைத்தரப்பை வலுக்கட்டாயமாக அரசு நிறுத்தியுள்ளது. அவற்றில் இருந்து படைகளை அகற்ற அரச தலைவர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்தியது.

கேப்பாபிலவு மக்கள் தொடர்ச்சியாக நடத்திவரும் நில மீட்புப் போராட்டம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், அரச தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்திலேயே இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

20 நாள்களுக்கு மேலாக தமது வாழ்வுரிமைப் போராட்டத்தைக் கேப்பாபிலவு மக்கள் முன்னெடுத்து வருகின்றனர். சனநாயக ரீதியில் நடத்தப்படும் போராட்டத்தை ஆதரிக்க வேண்டியது சனநாயக அரசின் பொறுப்பு. படைத்தரப்பு எமது பூர்வீக நிலங் களை அபக ரித்து சுகபோகம் அனு பவிக்கும் நிலையில், நாம் விரக்தியடைந்து வீதியில் நின்று போராடும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நல்லிணக்கம் என்பது சமநிலை பகிர்வுறவாடலிலேயே தங்கியுள்ளது. ஏகாதியப் போக்கால் இன நல்லுறவு மேம்படப் போவதில்லை. கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்றுள்ளது. (ற-56)

## நுளம்பு உற்பத்தியாகும் சூழல்: 24 பேர் மீது வழக்குத் தாக்கல்

வவுனியா, பெப்.23

வவுனியாவில் கடந்த இரு வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது நுளம்பு உற்பத்தியாவதற்கு ஏதுவான சுற்றாடலைக் கொண்டிருந்த 24 குடியிருப்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வாறு பொது சுகாதாரப் பரிசோதகர் மே.ஜெயா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

வவுனியாவில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. நகரை அண்டிய பகுதியிலேயே அதிகமானோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த ஆண்டு மட்டும் 96 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

சுகாதாரப் பரிசோதகர்கள், மலேரியா தடை இயக்க உத்தியோகத்தர்கள் இணைந்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத் து வருகின்றனர். நாளாந்தம் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்கள் சோதனையிடப் படுகின்றன.

கடந்த சில நாள்களாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச விடுதிகள் என்பற்றிலும் சோதனைகள் நடத்தப் பட்டன.

நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான இடங்கள் இனங்காணப்பட்டால் அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 24 பேர் நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்குத் தண்டம் விதித்ததுடன் நீதிவான் கடும் எச்சரிக்கையும் செய்தார்.–



# முன்னாள் போராளிகளுக்கு ஆலோசனை நிலையங்கள்

## வடக்கு, கிழக்கில் அமைக்கப்பட்டுள்ளன என புனர்வாழ்வு பயிற்சிப் பணிப்பாளர் தெரிவிப்பு



வவுனியா, பெப்.23

வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் போராளிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து ஆலோசனை வழங்க வடக்கு, கிழக்கில் 7 ஆலோசனை நிலையங்கள் அமைக் கப்பட்டுள்ளன. இவ்வாறு புனர்வாழ்வு நிலைய பயிற்சிப் பணிப்பாளர் கேணல் சித்திரகுணதுங்க தெரிவித்தார்.

வவுனியா, பூந்தோட்ட நிலையத்தில் புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் போராளிகள் 4 பேரைச் சமூகத்துடன் இணைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

போர் முடிவுற்றதில் இருந்து தற்போதுவரை 12 ஆயிரத்து 186 பேருக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ளது. இங்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டுபவர்கள் சகல துறைகளையும் பயின்று நற்பிரசைகளாக சமூகத்தில் வாழவழி செய்வதே எமது நோக்கம். புனர்வாழ்வு பெற்று வெளியேறிய பலருக்கு சுயதொழில் மேற்கொள்ள உதவிகளை வழங்கியுள் ளோம்.

அவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினை களை ஆராய்வதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும் 7 ஆலோசனை நிலையங்களை அமைத்துள்ளோம். – என்றார்.

ஒருவருட புனர்வாழ்வு வழங்கப்பட்ட தேவராஜா ஜெகதீபன் (மட்டக்களப்பு), றங்கசாமி நந்தகுமார் (மட்டக்களப்பு), யோசப் டின்டாஸ் விவிலியன் (மட்டக்களப்பு), கணேசன் துசாந்தன் (மட்டக்களப்பு) ஆகிய 4 முன்னாள் போராளிகள் நேற்று குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பூந்தோட்டம் புனர் வாழ்வு நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த குணசேகர, புனர்வாழ்வு நிலைய பின்னாய்வு அதிகாரி ஏகன் பெர்ணான்டோ, பூந்தோட்டம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சமயத் தலைவர்கள், முன்னாள் போராளிகளின் குடும்ப உறுப்பிணர்கள், படை யினர், பொலிஸார் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21)



சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம் செல்லும் பிரதான வீதிகள் மூன்றில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ்வரும் இரு வீதிகள் சீரமைக்கப்படுகின்றன. வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறி யியலாளருக்கு விடுத்த பணிப்புரையை அடுத்து திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. கடந்த செவ்வாய்க்கிழமை வீதித் திருத்த வேலைகளை வடக்கு அமைச்சர் பார்வையிட்டார். (ற-21)

## மேய்ச்சல் தரை தீக்கிரை

நுவரெலியா, பெப்.23

கொட்டகலையில் – ரொசிட்டா கால்நடை மேய்ச்சல் புல் வெளியில் ஏற்பட்ட திடீர்த் தீயால் சுமார் 5 ஏக்கர் புல்தரை நாசமாகியுள்ளது. தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் கால்நடை பண்ணை ஊழியர்களும், பொலிஸாரும் ஈடுப்பட்டனர்.

வறட்சி காரணமாக கால்நடைகளுக்குப் புல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் புற்றரை தீப்பிடித்தமை தொடர்பில் பண்ணையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ற-ய-43)

## காணாமல் ஆக்கப்பட்டோர் சான்றிதழ் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம்

மன்னார், பெப்.23

காணாமல் ஆக்கப்பட்டவர் ஒருவருக்கான சான்றிதழ் அண்மையில் அவர்களின் உறவினர்களுக்கு பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கப்பட்டது என்று மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் சான்றிதழைச் சட்டரீதியில் வழங்குவது தொடர்பாக கிராம அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயலமர்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற செயலமர்வில் ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயர் கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், அவர்களின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களது சான்றிதழ் பெறுவது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.– என்று மாவட்ட செயலாளர் குறிப்பிட்டார்.

செயலமர்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ் தொடர்பாகக் கருத்துகள் பரிமாறப் பட்டன. இது தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கிராம அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.– என்று செயலமர்வில் கலந்து கொண்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர் தயாளன் தெரிவித்தார். (ற-56)

# நகர சபைகள் இல்லாத மாவட்டங்கள் வடக்கில்

## நடவடிக்கை எடுக்க வேண்டுமென உள்ளூராட்சி அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.23

இலங்கை முழுவதிலும் வடக்கில் உள்ள இரு மாவட்டங்களிலேயே இதுவரை நகர சபைகள் எதுவும் இல்லை. அத்துடன் 5 பிரதேச செயலர் பிரிவுக ளுக்குத் தனியான பிரதேச சபைகளும் இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

இந்தக் குறைபாடுகள் தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தாபாவுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

போரால் அதிகம் அழிவுகளைச் சந்தித்த கிளிநொச்சி, முல்லைத்தீவு நகரங்களில் நகர சபைகள் கிடையாது. தற்போதுவரை அவை பிரதேச சபைகளாலேயே நிர்வகிக்கப்படுகின்றன. அவற்றை நகர சபைகளாகத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 5 பிரதேச செயலர் பிரிவுகளுக்குத் தனியான பிரதேச சபைகள் கிடையாது. உள்ளூராட்சிச் சபை நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கு இது பெரும் தடையாக இருக்கின்றது. மடு, ஒட்டுசுட்டான், கண்டாவளை, மருதங்கேணி, வெலிஓயா என்பவற்றுக்கு பிரதேச சபைகள் இல்லை.

அந்தப்பகுதி மக்கள் தமக்கான சேவை களைப் பெற்றுக் கொள்வதில் இடர்களை எதிர்கொள்கின்றனர்.

இவற்றை நிவர்த்தி செய்ய மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் மூலமாக உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இவை தொடர்பாக விசேட கவனம் எடுக்கப்பட்டும். குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் தீர்வு எட்டப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார்– என்றார். (ற-101)

## பேராதனை பகிடிவதை; விசாரணைகள் ஆரம்பம்

கண்டி, பெப். 23
பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட புதிய மாணவர்கள் எட்டுப்பேரை நிர்வாணமாக்கித் துன்புறுத்திப் பகிடிவதைக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும், 15 மாணவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் உபுல் திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
பல்கலைக்கழக நிர்வாகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஒழுக்காற்று விசாரணைகள் முடியும் வரை குறித்த மாணவர்கள் 15 பேரும் பல்கலைக் கழகக் கல்வி நடவடிக்கைகளில் பங்கு கொள்ள மேற்படி ஒழுக்காற்றுக் குழு தடைவிதித்துள்ளது.

பேராசிரியர் காமினி ஹெட்டிநாயக்க தலைமையில் இந்த ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எந்தவித தயவு தாட்சண்யமுமின்றி உயர்ந்தபட்சமான வகையில் அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற ஒழுக்காற்று விசாரணைகளின் பின்னர் பகிடிவதைச் சட்டப்பிரிவுக்கமைய கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.


பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முதலாம் வருட மாணவர்கள் 8 பேரும் நேற்றுமுன்தினம் வீடு சென்றனர் என்றார்.

பேராதனை கலஹா வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து விவசாய பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்கள் 8 பேரை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் சிலர் பகிடிவதைக்கு உட்படுத்தினர்.

இது தொடர்பில் பல்கலைக்கழக ஒழுக்காற்று மேற்பார்வையாளர்களுக்குக் கிடைத்த தகவல்களையடுத்துச் சம்பவம் இடம் பெற்ற வீட்டைச் சுற்றி வளைத்த பொலிஸார், இரண்டாம் வருட மாணவர்களை கைது செய்து கண்டி நீதிவானிடம் முற்படுத்தினர். அவர்களை எதிர்வரும் மார்ச் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (து)

## பிரபாகரன் கேட்டதை அரசமைப்பின் ஊடாக கொடுக்கத் தீர்மானம்

### கெஹலிய குற்றச்சாட்டு



கொழும்பு, பெப் 23
புலிகளின் தலைவர் பிரபாகரன் 30 வருடங்களாகப் போர் செய்து, இந்த நாட்டை அழித்து எதைக் கேட்டாரோ, அதைப் புதிய அரசமைப்பின் ஊடாக வழங்குவதற்கு இந்த அரசு தீர்மானித்துள்ளதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பானது, இந்த நாட்டுக்கு விரோதமானதாகும். அது நிச்சயம் நாட்டை இரண்டாகப் பிரிக்கும். பிரபாகரன் 30 வருடங்களாக போர் செய்து எதைக் கேட்டாரோ, அதைத்தான் புதிய அரசமைப்பின் ஊடாக இலகுவாக வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நாட்டுக்குப் புதிய அரசமைப்பொன்று தேவை இல்லை. தற்போதைய அரசமைப்பு திருத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஆனால், அரசு எவருடைய கருத்தையும் உள்வாங்கவில்லை. பன்னாட்டுச் சக்திகளினதும், புலம்பெயர் தமிழர்களினதும் கருத்துக்களைத்தான் கேட்கின்றது. அவர்களின் திட்டப்படியே அரசமைப்பைத் தயாரிக்கின்றது.

இந்த நாட்டை விடவும், இந்த நாட்டு மக்களை விடவும் பன்னாடுகளும் அவற்றின் நிகழ்ச்சி நிரலும்தான் இந்த அரசுக்கு முக்கியம். இவ்வாறான ஒரு தேச விரோத அரசை நீடிக்கவிட்டால், அது இந்த நாட்டின் எதிர்காலத்துக்குப் பேராபத்தாக அமைந்துவிடும்.

இந்த அரசைப் பதவியிலிருந்து விரட்டியே ஆக வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைத்தான் நாம் செய்துகொண்டிருக்கின்றோம். நுகேகொடைக் கூட்டம் எமது இந்த முயற்சியின் முக்கியமான ஒன்றாக மாறும்–என்றார். (து-3)



## ரணிலை உடனே பதவி நீக்குங்கள்

### அரச தலைவரிடம் மகிந்தானந்த கோரிக்கை

கொழும்பு, பெப் 23
நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை சரி செய்யப்பட்டு நாடு அபிவிருத்தியடைய வேண்டுமென்றால், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில் இருந்தும், கூட்டாட்சியில் இருந்தும் நீக்கவேண்டும் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்தகமே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமக்கு அரச தலைவருடன் எந்தப் பிரச்சினையும் கிடையாது. ரணிலுடன் தான் பிரச்சினை. அதனால்தான் நாம் சுதந்திரக் கட்சியின் மைத்திரி தரப்புடன் இணையாமல் உள்ளோம். எமது நிலைப்பாடு சரி என்பதை இந்த நாட்டு மக்கள் இப்போது புரிந்துள்ளனர்.

அரச சொத்துக்களைத் தனியார்மயப்படுத்துவது தான் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை. ஆனால், அந்தச் சொத்துக்களைப் பாதுகாப்பது சுதந்திரக் கட்சியின் கொள்கை. இப்படியான ஐ.தே. கட்சியுடன் இணைந்து எப்படி நாட்டை ஆட்சி செய்ய முடியும்?

இன்று அரச சொத்துக்கள் பலவற்றை விற்பதற்கான செயற்பாடுகள் மும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றன. அம்பாந்தோட்டைத் துறைமுகமும் 15 ஆயிரம் ஏக்கர் நிலமும் சீனாவுக்கு விற்கப்படுகின்றன. ஆனால், அபிவிருத்தி என்ற போர்வையில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் அபிவிருத்தி என்பது, அரச சொத்துக்களை தனியார்மயப்படுத்துவதும், வெளிநாடுகளுக்கு விற்பதும்தான். ஆனால், சுதந்திரக் கட்சி இவற்றையெல்லாம் கைகட்டிப் பார்த்துக்கொண்டு இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கின்றது.

அரச தலைவர் உடனடியாக இந்த விவகாரத்தில் தலையிட்டு இவ்வாறு சொத்துக்கள் விற்கப்படுவதைத் தடுக்க வேண்டும். ரணிலைத் தலைமை அமைச்சர் பதவியில் இருந்தும், கூட்டாட்சியில் இருந்தும் விரட்டிவிட்டால் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இலகுவாகத் தீர்ந்துவிடும்–என்றார். (து-3)

## புலிகளுக்கு ஆதரவளிக்கும் கட்சிகளின் மீது நடவடிக்கை

### சபையில் சட்டம், ஒழுங்கு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, பெப் 23
விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரிவினைவாத நிலைப்பாட்டுக்கு ஆதரவளிக்கும் அரசியல் அமைப்புகள் இருக்கும் பட்சத்தில் அவற்றுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டம், ஒழுங்கு அமைச்சு தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் தேசிய சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரான பதம் உதயசாந்த குணசேகர,
விடுதலைப் புலிகள் நாட்டுக்குப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தினர். குறித்த அமைப்பின் பிரிவினைவாத நிலைப்பாட்டுக்கு ஆதரவளிக்கும் அரசியல் அமைப்புகள் மற்றும் தலைவர்கள் இருக்கின்றனர். எனவே, அரசமைப்பின் 157 (அ) உறுப்புரையின் கீழ் அவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே சட்டம், ஒழுங்கு அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார். (து)

## செனற் சபையை மீண்டும் ஏற்படுத்த ரணில் முயற்சி



கொழும்பு, பெப் 23
இலங்கையில் மீண்டும் செனற் சபையை அமைக்கத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முயற்சி செய்து வருவதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆஸ்திரேலிய பயணத்தின்போது ரணில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டார் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செனற் சபை அமைக்கப்பட்டால் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் எந்தவொரு தீர்மானமும் செனற் சபையால் மீண்டும் அங்கீகரிக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும் எனவும், அவ்வாறு நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் ஒரு வருட காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கக்கூடிய அதிகாரமும் செனற் சபைக்கு உண்டு என்பதும் சிறப்பு அம்சங்களாகும்.

நாட்டின் பிரபல கல்விமான்கள், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவர்கள், தொழில்சார் நிபுணர்கள் போன்றோருடன் சிறுபான்மைச் சமூகத்தின் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள் போன்றோரையும் அரச நிர்வாகத்தில் இணைத்துக்கொள்வதற்கான வாய்ப்பை செனற் சபை வழங்கும்.

ஆஸ்திரேலியாவில் இயங்கும் செனற் சபையை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கையில் செனற் சபையொன்றை அமைக்கத் தலைமை அமைச்சர் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சோல்பரி ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களின்படி 1947ஆம் ஆண்டு முதல் 1972ஆம் ஆண்டுவரை இலங்கையில் செனற் சபை இயங்கியது. 30 அங்கத்தவர்களைக் கொண்ட இந்தச் சபைக்கு தேசாதிபதி தெரிவு செய்யும் 15 உறுப்பினர்களும், நாடாளுமன்றம் தெரிவுசெய்யும் 15 உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர். எனினும், செனற் சபையால் மேலதிக செலவு ஏற்பட்டதால் அது 1972ஆம் ஆண்டு முதல் கலைக்கப்பட்டது. (து)

## தாவர எண்ணெய்களுக்கான வர்த்தக வரியை உடன் நீக்குக

### அரச தலைவரிடம் வேண்டுகோள்

கொழும்பு, பெப் 23
உலக சந்தையில் தேங்காய் எண்ணெய், தாவர எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் மிகவும் அதிகரித்திருப்பதால் இலங்கையில் இயன்றவரை குறைந்த விலையில் அவற்றை விநியோகிப்பதற்காக வர்த்தக வரிகளை நீக்குமாறு எண்ணெய் இறக்குமதியாளர்கள் அரச தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் கிலோவொன்றுக்குச் சிறப்பு வர்த்தகப் பொருள் வரியாக 130 ரூபாவும், தாவர எண்ணெய்க்கு 135 ரூபாவும் அறவிடப்படுகின்றன. இந்த வரிகளை நீக்கினால் தற்போது 280 ரூபாவாக விற்கப்படும் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெயை 202 ரூபாவுக்கும், 220 ரூபாவாக விற்கப்படும் தாவர எண்ணெயை 93 ரூபா 24 சதத்துக்கும் விற்கமுடியுமென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலக சந்தையில் தேங்காய் எண்ணெய் மெற்றிக் தொன் ஒன்றுக்கு 1950 அமெரிக்க டொலர்களாகவும், தாவர எண்ணெய் 860 அமெரிக்க டொலர்களாகவும் உயர்ந்திருப்பதாக அவர்கள் அரச தலைவரிடம் எடுத்துக் கூறியுள்ளனர். (து)

## ஆர்ப்பாட்டத்தில் கைகலப்பு அறுவர் சிகிச்சையில்

திருமலை, பெப்.23
திருகோணமலை - கந்தளாய் பேராறு பிரதேசத்தில் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்ட மீனவக் குழுக்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது. அதில் ஆறுபேர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கந்தளாய் குளத்தில் வீச்சு வலை மற்றும் அத்தாங்கு போன்ற பாரம்பரிய மீன்பிடி முறைகள் தடை செய்யப்பட்டுள்ளன. இந்தத் தடைக்கு எதிராகவே மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
மீனவர்கள் வீதியை மறித்து போராட முற்பட்டபோது சிலருடன் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ய-45)

## உயர்தர மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.23
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடாந்தம் நடத்தும் ஆய்வரங்கு நிகழ்ச்சியை முன்னிட்டு, ஜி.சீ.ஈ.உயர்தரம், பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்களுக்கிடையே கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. கட்டுரைகள் ஆயிரம் சொற்களுக்கு மேற்படாமல் கையெழுத்துப் பிரதியாக அமைதல் வேண்டும். பாடசாலை மாணவர்கள் அதிபராலும், பல்கலைக்கழக மாணவர்கள் துணைவேந்தராலும் தமது கட்டுரைகளை உறுதிப்படுத்துவித்து எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம்திகதிக்கு முன்னர் பணிப்பாளர் இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களம் இலக்கம் 248, 1/1 காலிவீதிகொழும்பு - 4என்றமுகவரிக்குஅனுப்புதல் வேண்டும். (ற)



வவுனியா வளாகத்தை, வன்னிப் பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும் என்று கோரும் ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று வவுனியா பல்கலைக்கழக வளாக மாணவர்களால் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இது தொடர்பான ஊர்வலம் எதிர்வரும் 28ஆம் திகதி காலை 10 மணிக்கு வவுனியா பல்கலை வளாகத்திலிருந்து ஆரம்பமாகும் இடம்பெற உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-21)

# சிறுபான்மைச் சமூகம் சம உரிமையை இங்கு எதிர்பார்க்க முடியாது

### கூறுகிறார் தயான் ஜயதிலக

கொழும்பு, பெப். 23
இலங்கையின் சிறுபான்மைச் சமூகங்கள், நாட்டின் பெரும்பான்மையினத்தவர்களால் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதை எதிர்பார்க்க முடியாது.
இவ்வாறு இராஜதந்திரியான தயான் ஜயதிலக தெரிவித்தார்.
கொழும்பில் உள்ள பௌத்த கலாசார மன்றத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.
'புதிய அரசமைப்பு நாட்டுக்குத் தேவையற்றது. அதனைக் கொண்டு வருவதும் ஆபத்தானது. முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்த நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை தேசிய பாதுகாப்புக்காகக் கொண்டு வரப்படவில்லை.



பொருளாதார அபிவிருத்திக்காகவே கொண்டு வரப்பட்டது' என்று தயான் குறிப்பிட்டார்.
இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கையின் முதலாவது குடியரசு அரசமைப்புக் கொண்டு வரப்பட்டதையடுத்தே இலங்கையின் தேசியப் பிரச்சினை வன்முறையாக மாறியது - என்றார். (த-5)

# வறுமையைக் காரணம் காட்டி கல்வியைத் தடுக்கக் கூடாது

### வடக்கு கிராமிய அபிவிருத்தி அமைச்சர் வேண்டுகோள்

கிளிநொச்சி, பெப்.23
தமிழர்களின் எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது. வறுமையைக் காரணம் காட்டி மாணவர்களின் கல்விச் செயற்பாட்டைத் தடுக்காதீர்கள்.
இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட ஆனையிறவு தட்டுவன்கொட்டி கண்ணகையம்மன் வித்தியாலயத்தின் மெய்வன்மைத்திறனாய்வுப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. பாடசாலை மைதானத்தில் அதிபர் க.கருணாநந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
மாணவர்கள் தமது கல்விப் பராயத்தை கற்றல் நடவடிக்கையிலும், விளையாட்டு மற்றும் துணைப் பாடங்களில் விருத்தியுள்ள ஒரு சமூகமாக மாற்றமடைவதற்காகச் செலவிடவேண்டும். பெற்றோர்கள் உங்கள் (மாணவர்கள்) ஒவ்வொருவரையும் கல்விமான்களாக மாற்ற எத்தனையோ விடயங்களை தங்களது வாழ்வில் தியாகம் செய்கிறார்கள் என்பதை உணர்ந்து நடக்க வேண்டும்.
பெற்றோர்களாகிய ஒவ்வொரு தாய் தந்தையர்களும் வறுமையைக் காரணமாகக் காட்டி பிள்ளைகளின் கல்வியைத் தடுக்கக் கூடாது. அவர்களது எதிர் காலம் சிறப்பானதாக மாறும் வகையில் செயற்பட வேண்டும்.
பாடசாலை அதிபரால் என்னிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் அனைத்தையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்ற முனைப்புடன் இருக்கின்றேன். மாணவர்கள் பரீட்சைகளில்



நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.
ஏ-9 பிரதான வீதியில் இருந்து தட்டுவன்கொட்டி கிராமத்துக்குச் செல்லும் வீதிச் சந்தியில் பேருந்துத் தரிப்பிடம் அமைப்பதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கிராமத்துக்கான வீதி சீரமைக்கப்பட்டது. ஆயிரம் பாலங்கள் திட்டத்தின் கீழ் பாலம் அமைக்கப்பட்டது. பாடசாலையின் பௌதிக வள அபிவிருத்திக்கு இந்த ஆண்டு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கித்தருவேன் - என்றார். (ற-21)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 08 . 09 . 1934



மறைவு 25 . 01 . 2017

அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுச்சாமி
(ஓய்வு பெற்ற சாரதி - இ.போ.ச. பருத்தித்துறை)

கடந்த 25.01.2017 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுச்சாமி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வருகைதந்து ஆறுதல் கூறி, எங்கள் துயரில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பல வழிகளிலும் உதவிகள், புரிந்தவர்களுக்கும் பேரன்போடு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (24.02.2017) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியை நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை மனமுவந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உங்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.**

(ஏ.266) (13.18)

அம்மன் கோயிலடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.
021 205 6185



அம்பாறை - கல்முனை வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக கல்முனை கல்வி வலய ஆசிரியர்கள் தங்களது சம்பள நிலுவைகளை வழங்கக் கோரி நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ற-ய)

## டீ.பி. விஜேதுங்கவின் புதல்வி காலமானார்

கண்டி, பெப்.23
முன்னாள் ஜனாதிபதி டீ.பி விஜேதுங்கவின் மகள் சித்ராங்கனி குமாரி விஜேதுங்க (வயது-69) நேற்று அதிகாலை காலமானார்.
முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் ஒரேயொரு மகளான சித்ராங்கனி திடீர்ச் சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் மாலை கண்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை காலமானார்.
அவரது இறுதிக் கிரியைகள் நாளைமாலை 4.00 மணிக்கு கண்டிமஹியாவ பொதுமயானத் தில் இடம்பெறும். (த-ய)

## குற்றஞ் சுமத்தப்பட்ட கடற்படைத் தளபதிக்கு 6 மாதம் சேவை நீடிப்பு

கொழும்பு, பெப். 23
ஊடகவியலாளர் மீது தாக்குதல் மேற்கொண்டதாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட கடற்படைத் தளபதி ரவீந்திர விஜேயகுணவர்த்தனவுக்கு ஆறு மாதங்கள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தச் சேவை நீடிப்பை வழங்கி யுள்ளதாக, அவரது ஊட கப் பிரிவு தெரிவித்துள்ளது.
கடற்படைத் தளபதி ரவீந்ர விஜேயகுணவர்த்தன கடந்த டிசெம்பர் மாதம், அம்பாந்தோட்டையில் நடை பெற்ற கவனவீர்ப்புப் போராட் டத்தின்போது செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஒளிப் படப்பிடிப்பாளர் மீது தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது. கடற்படைத் தளபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றும் ஊடக அமைப்புக்களால் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.இவ்வாறான தொரு நிலையிலேயே அவருக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட் டுள்ளது.
கடற்படைத் தளபதியின் பதவிக் காலம் பெப்ரவரி மாதத்துடன் முடிவடையும் நிலையில் அவருக்குப் பதவி நீடிப்பு வழங்கப்பட வேண்டும் என்று, யாழ். மாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கடந்த ஆண்டு டிசெம் பர் மாதம் கச்சதீவு ஆலயத் திறப்பு விழாவின்போது கோரிக்கை விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-5)



மார்க்கண்டு அருட்சந்திரன் எழுதிய யாழ்ப்பாணப் பெட்டகம் தொகுதி 1, ஆளுமை வணக்கத்தலங்கள் ஆகிய நூல்களின் அறிமுக விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பெட்டகம் நிழலுருக் கூடத்தின் இந்த வெளியீட்டு விழா கலாபூசணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக நாவலர் நற்பணி மன்றத் தலைவர் ந.நற்கருணை ஆனந்தன் கலந்து கொண்டார். (த-9)

## கொக்கிளாய் களப்பில் மீன்பிடிக்க முல்லை மீனவர்களுக்கு அனுமதி

### கிழக்கு மாகாண சபையில் ஆட்சேபம்

அம்பாறை, பெப்.23
கொக்கிளாய் களப்பில் திருகோணமலை மீனவர்கள் தொழில் செய்வதற்குத் தடையும், முல்லைத்தீவு மீனவர்களுக்கு அனுமதியும் வழங்குவது மீனவர் களிடையே பாகுபாட்டை ஏற்படுத்தும் செயல் என கிழக்கு மாகாண சபை உறுப் பினர் சட்டத்தரணி ஜே.எம். லாஹிர் தெரிவித்தார்.
கிழக்கு மாகாணசபையின் 73ஆவது அமர்வு தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதில் கொக்கிளாய்-புல்மோட்டை களப்பு சிறுகடல் மீனவர்களுக்கு மீன்பிடித் தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக பிரேரணை ஒன்றை முன்வைத்து உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
திருகோணமலை மாவட்டத்தின் கொக்கிளாய், புல்மோட்டை மக்கள்மீன்பிடியில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். இதனை நாளாந்தச் செய்திகளில் அறியக்கூடியதாக இருக்கின்றது.
இந்த மாவட்டத்தில் கொக்கிளாய் களப்பில் திருகோணமலை மாவட்ட மீனவர்கள் மீன் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.
இது ஒரு பாகுபாடான செயற்பாடாகும். இவ்விடயத்தில் மீன்பிடி அமைச்சும் கடற்றொழில் திணைக்களமும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்- என்றார். (த-ய-49)

# ஆட்சியைத் தாருங்கள் நாட்டை அபிவிருத்தி செய்து காட்டுகிறோம்

### அரசைக் கோருகிறது ஜே.வி.பி.



கொழும்பு, பெப் 23
அரசசொத்துக்களை விற்காமல்,பொது மக்களின் பணத்தைத் திருடாமல் நல்லாட்சி ஒன்று இடம் பெறவேண்டுமென்றால் ஆட்சி அதிகாரத்தை எம்மிடம் ஒப்படையுங்கள். இந்த நாட்டை அபிவிருத்தி செய்து காட்டுகிறோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.
அம்பாந்தோட்டைத் துறைமுகம் உள்ளிட்ட அரச சொத்துக்கள் பலவற்றை இந்த அரசு வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யவுள்ளது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்துக் கூறும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இரண்டு பிரதான கட்சிகளும் தனித்தனியாக ஆட்சி செய்தும் தோல்வியடைந்துவிட்டன. இப்போது சேர்ந்து ஆட்சி செய்தும் தோல்வியடைந்துவிட்டன. 2020 இல் மக்கள் விடுதலை முன்னணி தலைமை தாங்கும் மாற்று அரசு ஒன்று உருவாகும். அந்த அரசின் மூலம்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும்.
நாட்டின் அரசியல் நிலமை தொடர்பில் நாம் கூறுகின்ற விடயங்களில் உள்ள உண்மையைத் தாமத மாகத்தான் மக்களால் உணர முடிகின்றது. நாம் சொல்வதை நம்ப மறுக் கின்றவர்கள் இப் போதைய அரசு செய்து கொண்டிருப்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மகிந்தவின் ஆட்சியைப் போல் ஊழல்கள் நிரம்பி வழிகின்றன. ஊழல்வாதிகளின் கைகளில் ஆட்சியைக் கொடுத்து விட்டு அவர்களை ஏசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இனியாவது சிந்திப்போம். நிலமையை மாற்றுவோம். நாட்டை முன்னேற்றுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும்.
பழைய அரசியலை மாற்ற வேண்டும். நாடாளுமன்றில் இருந்து அந்த மாற்றம் ஏற்படவேண்டும். அவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சக்திகள் நாடாளுமன்றத்துக்கு வரவேண்டும். அவர்கள் இப்போது தனித்து நிற்கின்றார்கள். அதுதான் இங்கு பிரச்சினை.
இவர்களால் தொடர்ந்தும் ஆட்சியை முன்னெடுக்க முடியாவிட்டால் எம்மிடம் ஒப்படையுங்கள். ஊழல் மோசடி இன்றி, அரச சொத்துக்களை விற்காமல், மக்கள் மீது அதிக வரிச்சுமையை ஏற்றாமல் நாட்டைச் சிறந்த முறையில் ஆட்சி செய்வது எப்படியென்று காட்டுகின்றோம்-என்றார். (த-3)

## மாணிக்கமடு காணிப் பிரச்சினை; மாகாண சபையில் பேசத் தடை

அம்பாறை, பெப்.23
அம்பாறை - இறக்காமம் மாணிக்கமடுப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் எதுவித அபிவிருத்திப் பணிகளையும் செய்யவேண்டாமென அறிவிக்கப்பட்டமை குறித்து கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் சபையில் பேச முற்பட்ட போது அது தொடர்பில் இங்கு பேச முடியாது என தவிசாளர் சந்திரதாச கலப்பதி தெரிவித்தார்.
இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவில், மாணிக்கமடுப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் நிரந்தரமான கட்டடங்களையோ, வேறுஎதுவித அபிவிருத்திப் பணிகளையோ மறு அறிவித்தல்வரை மேற்கொள்ள வேண்டாமென இறக்காமம் பிரதேச செயலாளரினால் காணிச் சொந்தக்காரர்களுக்கு ஏற்கனவே அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.
எனவே, இது தொடர்பாக சிறப்பு ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமெனக் கோரி மாகாண சபை உறுப்பினரான ஆரிப் சம்சுதீனால் சபைத் தவிசாளருக்கு அவசர பிரேரணை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.
இந்த விடயம் குறித்து நேற்றுத் தவிசாளர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. அப்போது தவிசாளர் சந்தரதாச கலப்பதி, இது அம்பாறை மாவட்டப் பிரச்சினையாக இருப்பதால் மாவட்ட மட்டத்தில் பேசித் தீர்க்கலாம். அவசரப் பிரேரணையாக எடுக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.
இதன்போது கிழக்கு மாகாண முதலமைச்சர் உட்பட அம்பாறை மாவட்ட முஸ்லிம் மாகாணசபை உறுப்பினர்கள் சபையில் மௌனமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ய-49)

# எந்தத் தேர்தலிலும் வெல்லும் ஐ.தே. க.

### கூறுகிறார் லக்கி எம்.பி.



கொழும்பு, பெப் 23
இனிமேல் எத்தகைய தேர்தலை நடத்தினாலும் அதில் எந்தச் சந்தேகமுமின்றி வெற்றி பெறப் போவது ஐக்கிய தேசியக் கட்சிதான் எனக் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்கி ஜயவர்தன தெரிவித்தார்.
முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு உடுநுவரப் பிரதேச விகாரையில் இடம்பெற்ற சமய வழிபாட்டில் கலந்து கொண்டபின்னர் அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜே. ஆர். ஜெயவர்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறையின்படி ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவப் போவதில்லை. கூட்டு எதிர்க்கட்சியினர் எதைப் பேசினாலும் புதிய அரசு பயப்படவில்லை. ஊழலற்ற தேர்தல் நியாயமான முறையில் இடம்பெறும் என்பதால் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என்பதிலும் சந்தேகம் இல்லை. நல்லாட்சி அரசின் அபிவிருத்தி வேலைகள் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப துரிதமாக நடைபெற்று வருகின்றன. கடந்த காலத்தில் ஊழல் மோடிசகளில் ஈடுபட்டவர்களுக்குச் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப உரிய தண்டனைகள் வழங்கப்படும்-என்றார். (த)

# எங்களுடன் அமர்வதை விடுத்து ஆக்கபூர்வமாகச் செயற்படுங்கள்

## போராட்டங்களில் ஈடுபடுவோர் மக்கள் பிரநிதிகளிடம் கோரிக்கை

கிளிநொச்சி, பெப்.23
போராட்டத்தில் கலந்து கொள்கின்றோம் என்று எங்களுடன் வந்து அமர்வதை விடுத்து மக்கள் பிரதிநிதிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.
கிளிநொச்சியில் இரு வேறு இடங்களில் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
கிளிநொச்சியில் கடந்த திங்கட்கிழமை முதல் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் தொடர்போராட்டமும், பரவிப்பாஞ்சான் கிராம மக்களின் நில மீட்புப் போராட்டமும் நடைபெறுகின்றன.
போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர்கள் தெரிவித்ததாவது:



அரசியல் பிரதிநிதிகளால் ஏமாற்றப் பட்டுவிட்டோம். காணிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளின் விடயங்களில் காலத்துக்குக் காலம் வெறும் வாக்குறுதிகளை வழங்குகின்றனர். அதன் பின்னர் அதற்கான எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. எங்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறி எங்களுடன் வந்து ஒரு சில மணித்தியாலங்கள் அமர்ந்திருந்து விட்டுச் செல்வதை நாம் விரும்பவில்லை. கடந்த காலங்கள் போன்று அவ்வாறு நடந்துகொள்ளாது ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் - என்றனர்.
கிளிநொச்சியில் இடம்பெறும் இரண்டு போராட்டங்களும் இரவுபகலாகத் தொடர்கின்றன. அவற்றில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் இதுவரை கலந்துகொண்டுள்ளனர்.
(ற-21,35)

---

## காலநிலையின் மாற்றத்தால் தேங்காய் உற்பத்தி குறைவு

யாழ்ப்பாணம், பெப்.23
தேங்காயின் விலை உயர்வுக்கு உற்பத்தி குறைந்துள்ளமையே காரணம் என்று தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் கால நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. உணவு உற்பத்திப் பயிர்களும் பாதிப்படைந்துள்ளன. அதிக வெப்பநிலை காரணமாக தென்னம் பூக்கள் பாதிப்படைந்துள்ளன. அதனால் தேங்காய் உற்பத்தியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது - என்றார்.
தேங்காய்களை மொத்த விலைக்கு வாங்கும் போது ஒரு தேங்காயின் விலை 44 ரூபாவுக்குக் கொள்வனவு செய்கின்றோம். விற்பனை செய்யும்போது ஒரு தேங்காய் 45 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றோம். முன்னர் புத்தளம், சிலாபம் போன்ற இடங்களில் இருந்து கொள்வனவு செய்வது வழக்கம். ஆனால் தற்பொழுது வன்னியிலிருந்தே தேங்காய்களைக் கொள்வனவு செய்து விற்கின்றோம். புத்தளம் போன்ற வெளி மாவட்டங் களுக்கும் வன்னியிலிருந்தே தேங்காய்கள் கொண்டு செல்லப்படுகின்றன. சமீப காலமாக தேங்காய் உற்பத்தியின் அளவு குறைவடைந்து செல்வதால் எங்களின் வியாபாரங்களில் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளோம் - என்று தேங்காய் வியாபாரிகள் தெரிவித்தனர்.
தேங்காய் விலை அதிகரிப்பால் சிரமங்களை எதிர்கொள்கின்றோம் - என்று நுகர்வோர் தெரிவித்தனர். (ற-8)

---

## குரங்கு கடித்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.23
நெல் காயவைத்துவிட்டு அதற்குக் காவல் இருந்த முதியவரைக் குரங்கு கடித்தது. இந்தச் சம்பவம் நேற்றுக் கைதடியில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
கைதடி வடக்கைச் சேர்ந்த 60 வயதுடையவரே காயமடைந்தார்.
அறுவடை செய்த நெல்லை அவர் கைதடி, வடக்கில் உள்ள தனது வீட்டில் உலர வைத்துள்ளார். சில குரங்குகள் அங்கு வந்துள்ளன. குரங்கைக் கண்டவர் அங்கிருந்து விலக முயன்றுள்ளார். ஆயினும் குரங்கொன்று தாவி அவரைக் கடித்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

---

## முகாமாகப் பயன்படுத்திய பாடசாலையின் மின் கட்டண நிலுவையை செலுத்த மறுப்பு

### புனர்வாழ்வுப் பணிமனை கைவிரித்ததால் ஓமந்தை மத்திய கல்லூரிச் செயற்பாட்டில் தடங்கல்

வவுனியா, பெப்.23
இராணுவத்தால் புனர்வாழ்வு முகாமாக உபயோகிக்கப்பட்ட ஓமந்தை மத்திய கல்லூரியின் மின் கட்டண நிலுவையான 24 லட்சம் ரூபாவைச் செலுத்த முடியாது என்று கைவிரித்துள்ளது புனர்வாழ்வு ஆணையாளர் பணிமனை.
ஓமந்தை மத்திய கல்லூரி 2008ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை புனர்வாழ்வு முகாமாக உபயோகப்படுத்தப்பட்டது. இறுதிப் போரில் கைது செய்யப்பட்ட, சரணடைந்த முன்னாள் போராளிகளுக்கு அங்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டது.
அந்தக் காலப்பகுதியில் உபயோகிக்கப்பட்ட மின்சாரத்துக்கான கட்டணமான 18 லட்சத்து 852 ஆயிரத்து 153 ரூபா 91 சதம் நிலுவையாக உள்ளது. மாணவர்கள் தங்கும் விடுதிக்குரிய மானியில் 3 லட்சத்து 93 ஆயிரத்து 206 ரூபாவும், பாடசாலைக் கட்டட மின்மானியில் 92 ஆயிரத்து 412 ரூபாவும், பாட சாலை அலுவலக மானியில் 13 லட்சத்து 6 ஆயிரத்து 750 ரூபாவும், ஆசிரியர் விடுதி 1இன் மின்மானியில் 24 ஆயிரத்து 131 ரூபாவும், ஆசி ரியர் விடுதி 2இன் மானியில் 33 ஆயிரத்து 652 ரூபாவும் நிலுவையாக விருந்தது. அதற்குரிய வட்டியுடன் 24 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்திருந்தது.
2011ஆம் ஆண்டில் பாடசாலை மீண்டும் மாணவர் பயன்பாட்டுக்கு விடுவிக்கப்பட்டது. நல்லெண்ண அடிப்படையில் 8 லட்சத்து 852 ஆயிரத்து 153 ரூபாவைச் செலுத்தினால் போதுமானது என்று பாடசாலை நிர்வாகத்துக்கு மின்சார சபை அறிவித்திருந்தது. பாடசாலை நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு குறைந்த நிலுவை உள்ள மானிகள் இரண்டைப் பயன்படுத்த மின்சார சபை அனுமதித்தது. ஆயினும் இது வரை நிலுவையில் உள்ள பணத் தைச் செலுத்த புனர்வாழ்வு ஆணையாளர் பணிமனை நடவடிக்கை எடுக்கவில்லை.

> “ஓமந்தை மத்திய கல்லூரி 2008ஆம் ஆண்டுமுதல் 2011ஆம் ஆண்டுவரை புனர்வாழ்வு முகாமாக உப யோகப்படுத் தப்பட்டது. இறுதிப் போரில் கைது செய்யப்பட்ட, சரணடைந்த முன்னாள் போராளி களுக்கு அங்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டது.

மாணவர் தங்கும் விடுதியில் 100 மாணவர்கள் தங்கி நிற்கக் கூடிய வசதிகள் உள்ளன. மின்சார வசதி இல்லாததால் அதைப் பயன்படுத்த முடியாதுள்ளது என்று பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.
இது தொடர்பாக மாவட்டச் செயலாளர் ஊடாக புனர்வாழ்வுப் பணிமனைக்கு பாடசாலை நிர்வாகத்தினர் கடிதம் மூலம் தெரியப்படுத்தினர். அதற்கு பதிலளித்துள்ள புனர்வாழ்வு ஆணையாளர் பணிமனை மின்சாரக் கட்டண நிலுவையை செலுத்த இயலாது என்று மறுப்புத்தெரிவித்துள்ளது. (ற-21)

---

## தட்சணாங்குளம் மயானம் பொலிஸாரால் சல்லடை

### சந்தேகத்துக்குரிய பொருள்கள் இருக்கின்றன என்ற தகவலால்



வவுனியா, பெப்.23
சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார், நேற்று வவு னியா, வேப்பங்குளம், தட் சணாங்குளம் இந்து மயானத்தில் தேடுதல் மேற்கொண்டனர். அவ்வாறான பொருள்கள் எவையும் தேடுதலில் சிக்கவில்லை.
மயானத்தில் சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. நேற்றுமுன்தினம் முதல் மயானத்துக்குப் பாதுகாப்பு வேலி போடப்பட்டது. மயானத்தை அண்டிய பகுதிகளில் தீவிர தேடுதல்கள் நடத்தப்பட்டன.
பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், வவுனியா பிரதேச செயலாளர், புலனாய்வாளர்கள், கிராம சேவையாளர்கள், மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் நேற்று மயானத்துக்குச் சென்றனர். மயானத்தின் வேலியை அண்டிய சில இடங்களில் தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நண்பகல் வரை சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் எவையும் கிடைக்கவில்லை, தேடுதல் கைவிடப்பட்டது.
சில தினங்களுக்கு முன்னரே சந்தேகத்துக்குரிய பொருள்கள் அகற்றப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ற-21)

---

## காணி அனுமதி வழங்குமாறு வவுனியாவில் போராட்டம்

வவுனியா விக்ஸ்காடு கிராமத்தில் வசிக்கும் மக்கள் தமக்கு நிரந்தரமாக அந்தப் பகுதியில் வசிப்பதற்கான காணி அனுமதியை வழங்கக் கோரிப் போராட்டம் நடத்தினர். வவுனியாமாவட்ச்செயலகம் முன்பாகப் போராட்டம் நடத்தப்பட்டது.
வவுனியா காமன்ஸ் றோட் இராசேந்திரம் குளப்பகுதியில் அமைந்துள்ளது விக்ஸ் காடு கிராமம். அங்கு 9 வருடங்களாகக் குடியிருக்கும் 50 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வனவள திணைக்களத்துக்குச் சொந்தமான இடத்தில் வசிக்கின்றனர். நிரந்தரமாக அங்கு குடியிருப்பதற்கான அனுமதியைத தமக்கு வழங்க வேண்டும் என்று அரச அதிகாரிகளிடமும், அரசியல்வாதிகளிடம் அவர்கள் கோரி வந்த போதிலும் இது வரை சாதகமான பதில் கிடைக்கவில்லை - என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
போராட்டத்தில் சிறுவர்கள், முதியவர்கள் என 35க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (ற-402)




# உணவு ஒறுப்புப் போராட்டம் தமிழ்நாட்டில் பெரும் எழுச்சி

சென்னை, பெப். 23
தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவரது தலை மையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் தி.மு. கழகத் தவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து தமிழ்நாட்டின் பல இடங்களிலும் பரவலாக நேற்று உணவு ஒறுப்புப் போராட்டம் இடம்பெற்றது.
ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப் போல் நேற்றுக் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை போராட்டம் நடைபெற்றது. திருச்சியில் நடை பெற்ற போராட்டத்தில் தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலின் கலந்துகொண்டார். தி.மு. கழகம் உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. அந்தக் கட்சியின் தொண்டர்கள் மட்டுமல்லாது பொதுமக்கள், இளைஞர்கள் எனப் பலரும் அதில் கலந்து கொண்டனர். (ம)

# இந்தியப் பெருங் கடலில் பெரும் பதற்றம்

*சீனா போர் ஒத்திகையை நடத்தியதால்*



பீஜிங், பெப். 23
இந்தியப் பெருங்கடலில் சீனா நேற்றுக் காலை போர் ஒத்திகையை நடத்தியதை அடுத்து, அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.
இந்தியப் பெருங்கடலைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க சீனா கடும் முயற்சிகளை எடுத்து வருகிறது.
குறித்த பகுதியைப் பாதுகாக்கும் பொறுப்பு தமக்கு உள்ளது என்று சீனா, காலாதிகாலமாகத் தெரிவித்து வருகிறது. இந்த நிலையில் நேற்றுக் காலை நடைபெற்ற இந்தப் போர் ஒத்திகையானது, சீனா - இந்தியாவுக்கு இடையே பதற்ற நிலையைத் தோற்றுவித்தது.
இந்தியாவுக்கும்-சீனாவுக்கும் காலாதிகலமாக கருத்து முரண்பாடுகள் உள்ளன. சீனா, தாய்வானை ஒன்றுபட்ட சீனா என்று அழைக்கிறது. சில தினங்களுக்கு முன்னர் தாய்வானின் நாடாளுமன்றக் குழுவொன்று இந்தியாவுக்குச் சென்றிருந்தது. இதற்குச் சீனா கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்தது.
நெருப்புடன் விளையாட வேண்டாம் என்று இந்தியாவை சீனா எச்சரித்தது. இதிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையிலான முறுகல் தன்மை மேலும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் போர் ஒத்திகைக்கு நேற்று மதியம் வரை இந்தியா எந்தப் பிரதிபலிப்பையும் காட்டவில்லை. எனினும் கண்டனங்கள் விடுக்கப்படலாம் என்று எதிர்வு கூறப்பட்டது. (ம)

# மோடியையும் சந்திக்கிறார் ஸ்டாலின்



சென்னை, பெப். 23
தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவரது தலைமையிலான அமைச்சரவை மீது நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில், ஏற்பட்ட வன்முறை தொடர்பாக தி.மு. கழகத்தின் செயல் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலின் இந்தியப் பிரதமர் மோடியை இன்று சந்திக்கவுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.
தமிழக முதல்வீர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவர் தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. இரு தடவைகள் சபை ஒத்திவைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் பெரும்பான்மை ஆதரவை நிரூபித்தார் எடப்பாடி பழனிச்சாமி.
இந்த வாக்கெடுப்பின்போது, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் அவருக்குச் சார்பான அ.தி.மு. கழக அமைச்சர்களும் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலினும் இரகசிய வாக்கெடுப்பை வலியுறுத்தினார். இல்லாதுவிடில் சட்டமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிகளுக்கு சென்றுவந்த பின்னர் வாக்கெடுப்பு நடத்தலாம் என்றும் அவர் வலியுறுத்தினார்.
இது தொடர்பான கூச்சல்களும், குழப்பங்களும் தொடர்ந்து நடைபெற்றன. இதனால் தி.மு. கழகத்தினர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். கை கலப்புக்களும் இடம்பெற்றன. காங்கிரஸ் தானாக வெளிநடப்புச் செய்தது. பின்னர் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் 122 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் பெரும்பான்மையை நிரூபித்தார் எடப்பாடி பழனிச்சாமி.
இந்த வாக்கெடுப்பு ஜனநாயகக் கொலை என்று அன்றைய தினமே தமிழக பொறுப்பு ஆளுநர் வித்யா சாகர் ராவைச் சந்தித்து முறையிட்டார் ஸ்டாலின். குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரைச் சந்திக்க விருப்பத்தையும் அவர் வெளியிட்டார்.
இதன்படி இன்று காலை ஸ்டாலின் - பிரணாப் இடையிலான சந்திப்பு நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து மோடியையும் ஸ்டாலின் சந்திக்க வாய்ப்புள்ளது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

# வழக்கு பிற்போடப்பட்டது

சென்னை, பெப். 23
தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவரது தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் தொடர்ந்த வழக்கு, பெப்ரவரி 27 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டது.
சட்டசபையின் முக்கிய எதிர்க்கட்சியான தி.மு. கழகம் பலவந்தமாக வெளியேற்றப்பட்டது. இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படாததால் முஸ்லிம் லீக், காங்கிரஸ் போன்ற கட்சிகளும் வெளிநடப்புச் செய்தன. அ.தி.மு. கழகத்தை மட்டுமே வைத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அ.தி.மு. கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூவத்தூரில் இருந்து பிணைக் கைதிகள்போல் அழைத்து வரப்பட்டிருந்தனர். எனவே அவர்களுக்கு சுதந்திரமாக வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இந்தக் காரணங்களால் இந்தத் தீர்மானம் செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று ஸ்டாலினின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# பாகிஸ்தானில் தாக்குதல்

*7 பேர் சாவு*

இஸ்லாமபாத், பெப். 23
பாகிஸ்தானில் ஆயுததாரிகளின் அச்சுறுத்தல் அதிகம் உள்ள மாகாணம் என்று கூறப்படும் கைபர் பாக்துன்க்வா மாகாணத்தின் செசன்ஸ் நீதிமன்ற வளாகத்தில் நேற்றுக் காலை தற்கொலைத் தாக்குதல் தாரியொருவர் நடத்திய தாக்குதலில் 7 பேர் சாவடைந்தனர்.
சாவடைந்த 7 பேரைத் தவிர, 14 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்று சொல்லப்படுகிறது. தற்கொலைத் தாக்குதலின் பின்னர் துப்பாக்கிச் சூடு இடம் பெற்றது என்றும், 2 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்றும் பாகிஸ்தான் ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)





# லியியாவில் கவிழ்ந்தது படகு; 74 பேர் சாவு

திரிபோலி, பெப். 23
லிபியாவில் இருந்து இத்தாலி நோக்கிப் பயணிக்க இருந்த அகதிகள் படகொன்று, லிபியக் கடற்பரப்பில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 74 பேர் சாவடைந்தனர்.
ஈராக், சிரியா, சூடான், எதியோப்பியா போன்ற நாடுகளில் உள்ள சீரற்ற அரசியல் நிலைகளாலும், உள்நாட்டுப் போராலும், ஏராளமான மக்கள் லிபியாவுக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து இத்தாலிக்குச் செல்கின்றனர். இத்தாலியில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வது அவர்களின் நோக்கமாக உள்ளது. அவ்வாறு சென்ற படகொன்று நேற்றுமுன்தினம் விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த 74 பேர் சாவடைந்தனர். எத்தனைபேர் பயணித்தனர். அவர்கள் எந்தெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தொடர்பில் முழு விவரங்கள் எதுவும் நேற்று மதியம் வரை வெளியாகவில்லை. (ம)



# கீரிமலை - நகுலேஸ்வரம்

## அருள்மிகு நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரசுவாமி திருக்கோயில்

## சப்பறத்திருவிழா இன்று (23.02.2017) வியாழக்கிழமை

# தேர்த்திருவிழாவும் மகா சிவராத்திரி உற்சவமும்

## நாளை (24.02.2017) வெள்ளிக்கிழமை

### அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம், கீரிமலை, அருள்மிகு நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய இரதோற்சவம் இன்று நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கேயிணைந்த சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இத்தலம் புனிதப் பிறவி எடுத்த மனித குலம் வணங்கவேண்டிய ஒன்றாகும்.

வழிபடும் அடியார்களின் துயர் நீக்கி அருள் சுரக்கும் நகுலேஸ்வரப் பெருமானின் திருவருட் கடாட்ஷம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று அருளாசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கிறோம். இன்று நிகழும் இந்தத் தேர்த்திருவிழா சிறப்புற எல்லாம் வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வணங்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.
நல்லை ஆதீனம்

### சிறப்புற பிரார்த்திக்கின்றோம்



ஈழத்திருநாட்டின் வரலாற்றில் முதன்மை மிக்க தலமாக விளங்குவது கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் திருக்கோயில். இத்திருக்கோயிலின் மேன்மைக்கு இலக்கணமாக விளங்குவது கண்டகி தீர்த்தம். பாவ வினைகளைப் போக்கி மோட்சம் நல்கும் சிவசேக்ஷத்திரம் எனப் பல பண்டைய நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. நகுலேஸ்வரப் பெருமானின் தேர்த்திருவிழா நடைபெறுவது சிறப்புக்குரிய விடயமாகும்.

இராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்களின் தளராத முயற்சியால் ஆலயம் மீளவும் கட்டியெழுப்பப்பட்டு இன்று ஆலய உட்பிரகாரம் முழுவதும் புதிய கோயிலாகக் கட்டப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுள்ளது. இறை நியதிப்படி யாவும் நடந்து முடிந்தது. எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானின் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறப் பிரார்த்தித்து எனது வாழ்த்துரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

**செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்.**

### சிவராத்திரியின் மகிமை

மாசித்திங்கள் தேய்பிறை 14 ஆம் நாள் சதுர்த்தசி தினத்தில் கொண்டாடப்படும் விரதம் சிவராத்திரி ஆகும்.

இது ஆணவவலியின் கொடுமையை விளக்குவதாகும். படைத்தல் கடவுள் பிரம்மா ஆணவம் கொண்டு நானே பெரியவன் என்றார் அதனால் ஆவணையில் துயிலும் திருமாலிடம் சென்று அவரை எழுப்பினார்.

இதனால் திருமாலும் ஆணவம் கொண்டு போர் செய்தனர். இதனால் தேவர்கள் யாவரும் கலங்கினர். தேவர்கள் சிவனிடம் முறையிட சிவன் சோதி வடிவாகத் தோன்றிய தினமே இதுவாகும். இவ்வாறு சிவன் தோன்றிய தலம் அண்ணாமலை என்பர்.

**தேரேறி வருவாய் என் தெய்வமே**

சீர்மிகு கீரிமலைப்பதியில்
திருநடம் புரியும் எம் சிவனே
ஊர்புகழ் உந்தன் அருள் கண்டு
உலகே வியக்கும் நிலையினிலே
நேர்வளர் நற்சிவராத்திரி முன்
நெடுந்தேர் ஏறி வலம் வந்தே
கூர்மைசேர் அருள்நலம் காட்டியுமே
குவலயத் தென்றும் ஒளி தருவாய்

**சு. குகதேவன் தெல்லிப்பளை.**

- இன்று (23.02.2017) வியாழக்கிழமை சப்பறத் திருவிழா
- நாளை (24.02.2017) வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் சிவராத்திரி நான்கு சாமப் பூஜைகளும்

  அதிகாலை 4.30 மணிக்கு விசேட அபிஷேக அலங்கார பூஜைகள்

  அதனைத் தொடர்ந்து காலை 7.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை.

  காலை 9.00 மணிக்கு இரதோற்சவ ஆரோகணம்

  பிற்பகல் 3.00 மணிக்கு இரதவரோஹணம் (பச்சை சாத்தி இறக்குதல்)

  இரவு நான்கு சாம பூஜையும் தம்பபூஜை நடைபெற்று விஷேடமாக நள்ளிரவு 12.00 மணிக்கு இலிங்கோற்பவ பஞ்சமுகார்ச்சனை விஷேட பூஜை அதனைத் தொடர்ந்து சோமஸ்கந்தர் இடபாரூடராக கற்பூர ஜோதியுடன் வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.
- யாழ். இந்திய இணைத் தூதரகத்தின் அனுசரணையு டன் ஆன்மீக சமய நிகழ்வுகளும் இரவு நிகழ்ச்சியாக இடம் பெறும்.
- 25.02.2017 சனிக்கிழமை உதயத்தில் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவம் பிற்பகல் 2.00 மணிக்கு எம் பெருமான் ஆலயத்திற்கு எழுந்தருளுதல். விஷேட பூஜையும் கொடியிறக்கமும் நிகழும்.

### சிவாலய வரலாறு

கீரிமலை நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி வரலாறு அற்புதமான வரலாற்றைக் கொண்டது. நம் ஈழத் திருத்தலங்களில் பஞ்ச ஈஸ்வரங்கள் எனப்படுவது திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தான்தோன்றீஸ்வரம் என்பன. தெற்கு நகுலேஸ்வர சிவாலயம் சிதைவடைந்து இருந்த காலத்தில் அதனைப் புதுப்பித்து புனருத்தாரணம் நடைபெற வேண்டும் என 1876ஆம் ஆண்டு வைகாசி மாதம் 24ஆம் திகதி சைவ மக்களில் ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் தனது கையொப் பத்துடன் விஞ்ஞாபனம் செய்தார்.

நகுலேஸ்வரம் என்னும் கோயில் யாழ்ப்பாணத்தின் வட புலத்திலே புண்ணிய தீர்த்தக்கரையிலே இருக்கிறது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் மிக்கது. நகுலமுனி, நளன், ஸ்ரீ ராவணன் முதலிய பலராலும் பூசிக்கப்பட்ட தலம். இஷ்டசித்திகள் கொடுக்கும் தலம். இது போர்த்துக்கேயர் காலத்தையது. இதன் பெருமை சூதசங்கிதையிலும், பஞ்சபுராணத்திலும் சுருக்கமாகவும், தட்சண கைலாய புராணத்திலே விரிவாகவும் கொண்டது என நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர் உரை செய்த (நகுலேஸ்வர மாண்மியம்) என்னும் நூலுக்கு சுன்னாகம் அ.குமாரசாமி குருக்களின் அறிவுரையிலும் காணப்படுகின்றது. இத்தனை மகிமை வாய்ந்த நகுலேஸ்வரத் திருத்தலமானது வேத விற்பன்னர் கார்த்திகேய குருக்களினதும் அவரது புதல்வர்களாகிய ஸ்ரீமத் கா.சபாபதிக்குருக்களினதும் ஸ்ரீமத் கா.தியாகராஜக் குருக்களினதும் பெருமுயற்சியால் 1878ஆம் ஆண்டு மீண்டும் இச் சிவாலயம் கட்டப்பட்டது. நகுலேஸ்வர சிவாலயத்தைத் தமது தந்தையார் 1947இல் சிவபதமடைந்த பின்னர் 1948 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நகுலேஸ்வர ஆதீன மேலாளராக நகுலேஸ்வர அனுக்கிரகம் பெற்ற ராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் விளங்குகின்றார். இங்கு சிவராத்திரி உற்சவம் வருடப்பிறப்பு உற்சவம், தீர்த்தோற்சவம் மிகச் சிறப்பு வாய்ந்தது.சைவ உலகில் வாழும் அடியார்கள் தமது பிதிர் வழிபாட்டுக்கும் பாவவிமோசனத்துக்கும் உகந்ததாக உள்ளடங்கிய தீர்த்தத்தில் தீர்த்தம் ஆடுவதற்கு ஆடி அமாவாசையில் எண்ணிறைந்த பல்லாயிரவர் பங்கு கொண்டு நகுலேஸ்வர பெருமானை வழிபாடு செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும். இன்று நம் நாட்டில் வாழ்கின்ற சைவத் தமிழ் மக்களுக்கு சாந்தியும், சமாதானமும் ஏற்பட ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானை தரிசித்து வழிபடுவோமாக.

### குருக்களின் அருளாசியுரை





திருப்பெருமா மேருவரைச் சிகரமூன்றுட் சேருமிரு சிகரமாய் திகழுமீழத்
துரப்பெருமாமுகமெனும் யாழ்ப்பாணம் தன்னில் உத்தரத்திற் கீரிமலை
- உறைந்து நாளும்.
விருப்பமரு நகுலேஸ்வரரருளைக் கொண்டு மேவிய வங்கர் கோயில்
- விளங்கு வாய்ந்த
திருப்பணிகள் செய்பவரும் செய்விப்போரும் திரவியங்களீ பவரும் சிறந்து வாழீ

**"நமஸ்சம்பலேச மயோபவேச நமஸ்சங்கராயச நமஸ்சிவாயச"**

ஆதி அந்தம் இல்லா அரும் பெருஞ்சோதியும் பஞ்ச கிருத்தியங்களுக்குக் காரணமானவரும் கண்டகி தீர்த்தம், தலம், மூர்த்தியும் ஒருங்கே அமையப்பெற்றதும் புராணகாலச் சிறப்புப் பெற்றதுமான, பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றானது கீரிமலை நகுலேஸ்வரம் எனப் பெயர் பெற்ற திவ்ய தலத்தில் நித்தியசான்னித்தியத்துடன் உறைந்திருக் கின்ற நகுலேஸ்வரப் பெருமானின் திருவருளாலும் இலங்கை நாட்டில் உள்ள சைவ அன்பர்கள், புலம் பெயர்ந்து வாழும் சைவ அன்பர்கள் அனைவரினதும் பேராதரவோடும் பெருமுயற்சியினாலும் இவ் ஆலயமானது அதி சிறந்த சிற்பாகம முறைப்படி புதிய மண்டபங்கள் அமைத்து வர்ண வேலைகளுடன் கலையம்சத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.எல்லா சைவ அன்பர்களின் பேருதவியோடு மிக விரைவில் இராஜகோபுரம் அமைய இறை திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.வடமொழி, தக்ஷிண கைலாசமான்மியம், மத்ஸிய புராணம், ராமாயணம், மகாபாரதம் மற்றும் பல தமிழ் நூல்களும் இத்தலத்தின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக் கூறுகின்றன.

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானின் இவ்வாலயத்தில் இரவு பகல் தொண்டாற்றிய தொண்டர்களுக்கும், எமது நாட்டு மக்களுக்கும் புலம்பெயர் வாழ் மக்களுக்கும் அரசாங்கத் துறையினருக்கும்,உலகமக்களுக்கும் பேரருள் கிடைத்து பேரானந்த பெரு வாழ்வு வாழ எனது அருளாசியை வழங்குகின்றேன்.

இன்று நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரர் தேரேறி வந்து எல்லோருக்கும் இன்னருள் பாலிப்பாராக.

"சர்வே ஜனா சுகினோ பவந்து"

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

குறிப்பு: ✱பக்தர்கள் கண்டகி தீர்த்தத்திலிருந்து எடுத்து வரப்பட்ட தீர்த்தத்தை தங்கள் திருக்கரங்களால் சிவராத்திரி தினத்தன்று சகஸ்ரலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வித்து தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

✱ இராஜகோபுர திருப்பணி 113 அடி உயரத்தில் ஒன்பது தளங்களுடன் தற்போது கட்டுமான வேலைகள் முடிவுற்று பூச்சு வேலைகளும் நிறைவடையவுள்ளதால் மேலும் வர்ணம் தீட்டுவதனோடு இந்தப் பணியைப் பூர்த்தி செய்வதற்கு அடியார்களாகிய உங்களிடமிருந்து பணவுதவி, பொருளுதவி நாடி நிற்கின்றோம்.


**ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்**

021 700 0470 /077 636 6338

மஹோற்சவ குருக்கள்:
**சிவஸ்ரீ நகுலேஸ்வர குமாரசுவாமிச் சிவாச்சாரியார் (நகுலேஸ்வரர் ஆதீனம்)**

# பொது மக்களின் அதிக பண மூலங்கள் வீண்விரயம்; அடிப்படை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தாமதம்

## நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கருத்துரைப்பு



பன்னாடுகளின் பகிரங்கப் போட்டித் தன்மை மற்றும் முறையான தேர்வு முறைமை இன்மையால், பொது மக்களின் அதிக பண மூலங்களும், மூலதனங்களும் வீண்விரயமாகியுள்ளதுடன், அரசின் அதிகளவான அடிப்படை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தாமதமாகியுள்ளதான தகவல் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் ஆரம்பமான தெற்காசிய வலயத்தின் நான்காவது கொள்முதல் மாநாட்டில் அதிதியாகக் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சீரற்ற முகாமைத்துவத்தின் காரணமாக, கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய சில பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கை அரசின் பிரிவுகளை சீரமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உலகவங்கி,அமெரிக்கா, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜெய்க்கா போன்றவை ஒத்துழைப்பை வழங்கியுள்ளன.

பி.எம்.எம். எனப்படும் அரச நிதியத்தை முகாமைத்துவம் செய்யும் சட்ட வரைவு இதில் முக்கியத்துவம் பெறுகிறது.

அதேபோன்று, ஜனாதிபதி தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதான திருத்தம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட முடியும். நாம் மிகவும் அபாயமான பொருளாதார நிலைமைகளை எதிர் கொண்டுள்ளோம். எனினும் இவை அனைத்தையும் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவந்து, நிதி முகாமைத்துவத்தை முறையான விதத் தில் முன்னெடுக்க முடிந்துள்ளது"– என்றார்.

தெற்காசிய வலயத்தின் நான்காவது கொள்முதல் மாநாடு இன்று 23ஆம் திகதி வரை கொழும்பு மற்றும் கண்டியில் நடைபெறவுள்ளமை நோக்கத்தக்கது.

இந்த நிகழ்வில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் தலைவர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

"விலை மனுக்கள் கோரப்படாமல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு 1.1 பில்லியன் டொலர் தொகை மதிப்பீட்டைச் செலுத்த வேண்டியுள்ளது"

*- நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க*



## 'ஷீலாண்டியா' – புதிய கண்டம் கடலுக்கடியில் கண்டறிவு

உலகமயமாதலின் வேகங்களோடு புதியனவற்றின் கண்டறிவுகள் தொழில்நுட்ப ரீதியிலும், புவி சார் ஆய்வு அறிவியல் ரீதியிலும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அந்தவகையிலே தற்போது புதிதாக ஒரு கண்டம் கண்டறியப்பட்டிருப்பதான தகவல் விஞ்ஞானிகளால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி தென் பசுபிக் கடலுக்கு அடியில் அதாவது தற்போதுள்ள நியூசிலாந்துக்கு அடியில் கண்டமொன்று கடலுக்குள் மூழ்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கண்டத்துக்கு 'ஷீலாண்டியா' (Zealandia) என்று விஞ்ஞானிகளால் பெயரிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா கண்டத்தின் மூன்றில் 2 மடங்கு அளவு கொண்டதாக இந்த இந்தப் புதிய கண்டம் அமைந்துள்ளது.

அத்துடன்,50 இலட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டதாகவும், அது நியூசிலாந்தைப் போன்று மூன்று மடங்கு பெரியது எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.அதேவேளை இப்புதிய கண்டம் எப்படி உருவாகியது என்பது தொடர்பிலான ஆய்வுகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதான தகவல் அமெரிக்க ஆராய்ச்சி இதழில் பிரசுரிக்கப்பட்டது.

உலகில் தற்போது ஆசியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் அந்தாட்டிக்கா என்பதான 7 கண்டங்கள் உள்ளமை நாம் அறிந்த விடயங்களே.




# பன்னாட்டுக் கடன்களைச் செலுத்தவேண்டிய காலம் தற்போது ஏற்பட்டுள்ளது

## தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



ஆக மொத்தமாக 3117 கோடி டொலர்களை பன்னாடுகளுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.

உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கடன்களைச் செலுத்த வேண்டிய காலம் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும், அதனைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பிலான வேலைத்திட்டங்களை அரசு முன்னெடுத்துள்ளதெனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அரநாயக்க மண்சரிவில் இருப்பிடங்களை இழந்தவர்களுக்கான வீடுகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் தலைமை வகித்து, கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.


மேலும்,

"நாட்டிலே பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டமையாலேயே நாம் ஒன்றிணைந்துள்ளோம்.அது மிகவும் ஆழமானது என்பதை நாம் உணர்ந்து கொண்டோம்.நாட்டின் பொருளாதார நிலைமையை அறிந்துகொண்டோம்.பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாமையாலேயே முன்னாள் அரச தலைவர் தேர்தலுக்குச் சென்றதாக அவருடன் இருந்த அதிகாரிகள் தெரிவித்தனர். நாம் எவ்வாறு உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கடன்களைச் செலுத்துவது.கடனைச் செலுத்த வேண்டிய காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. அதனை எவ்வாறு செலுத்துவது என்பது தொடர்பில் நாம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

இந்த வருடத்தில் செலுத்த வேண்டிய கடன் தொகை 408 கோடி டொலர்களாக காணப்படுகிறது. அதேபோன்று 2018ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய தொகை மதிப்பீடு 416 கோடி டொலர்கள்,2019 ஆம் ஆண்டில் 314 கோடி டொலர்கள், 2020 ஆம் ஆண்டு 320 கோடி, 2021 ஆம் ஆண்டில் 319 கோடி, 2022 ஆம் ஆண்டில் 356 கோடி,2023 ஆம் ஆண்டில் 194 கோடி,2024 ஆம் ஆண்டில் 184 கோடி, 2025 ஆம் ஆண்டில் 390 கோடி மற்றும் 2026 ஆண்டில் 253 கோடிடொலர்களைகடன்தொகையாகசெலுத்தவேண்டியுள்ளது. அத்துடன்அதற்கானவட்டியையும்மீள்செலுத்தவேண்டியுள்ளது. ஆக மொத்தமாக 3117 கோடி டொலர்களை பன்னாடுகளுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.உண்மையிலே இவை அனைத்தும் ரூபாக்களில் அல்ல, டொலர்களில் செலுத்தப்பட வேண்டும்" - என்றார்.

இந்தநிகழ்வின் போது அரநாயக்க மண்சரிவில் இருப்பிடங்களை இழந்த 20 பேருக்கான புதிய வீடுகளும் மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுவிலூர் கலா



# குடும்பம் கோயிலாக...

குடும்பம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்து உருவாக்கும் எழில் கொஞ்சும் உயிரோவியம். ஆரோக்கியமான சமுதாயத்தின் கேந்திரமையமாகக் குடும்பம் அமைகிறது. குடும்பம் அழகாக மிளிர வேண்டுமெனில், கணவன் மனைவியின் மானசீகமான விசுவாசம் கலந்த அன்பு விதைக்கப்பட வேண்டும். அழகிய சிற் பங்களால் செய்யப்பட்ட தேர் அச்சாணி இன்றி ஓடுவதில்லை. மண்ணில் விதைக்கப்படும் விதை, நீரின்றி முளைப்பதில்லை. அதுபோல அன்பின்றிக் குடும்பமும் ஒரு போதும் தளைப்பதில்லை.
கணவன் மனைவி இருவரும் ரயில் தண்டவாளத்தின் இருபக்கப் பாளங்கள். குடும்பம் உயிர்ப்படைய இருவரும் ஒருவருக் கொருவர் துணையாக, ஒருவரில் ஒருவர் சார்ந்து அன்பு செய்து வாழவேண்டியது கட்டாயமானது.
எதிர்பார்ப்புகள், தேடல்கள், ரசனைகள், விருப்பு வெறுப்புக்கள் என்பவை இருவராலும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொருவருக்குமான எதிர்பார்ப்புக்களும் விருப்பு வெறுப்புக்களும் வித்தியாசமானவையும் தனிமையானவையுமாகும். அவற்றைப் புரிந்துணர்வுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மிக மிக முக்கியமானது. கருத்துப் பகிர்வுகளின் போது விட்டுக் கொடுத்துப் பொறுமையுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். விட்டுக் கொடுப்பதால் எவரும் கெட்டுப்போவதில்லை.
பிறருக்கு உதவி செய்பவராயினும், பொதுச் சேவைக்காக தம்மை அர்ப்பணித்தவராயினும், உழைக்காது பொழுதைக் கழித்தவராயினும், பெற்றோர் மற்றும் உடன்பிறப்புக்களுக்காக வாழ்ந்தவராயினும் குடும்பத்தில் இணையும்போது தமது பழக்கவழக்கங்கள் குணாதிசயங்களை மாற்றியமைக்க வேண்டும். குடும்பம் என்கிற கட்டடத்தைக் கட்டியெழுப்பும் பெரிய பொறுப்பை சிரமேற்கொள்ள வேண்டும். குடும்பத்தில் இணைந்த பின்னும் பெற்றோர் சொல்லே மந்திரம் என வாழ்வதும், உடன்பிறப்புக்களின் கொள்கைகளை குடும்பத்தில் திணிப்பதும், பொதுச் சேவை என்கிற பெயரில் குடும்பத்தை விட்டு அதிகளவு நேரம் விலகி வாழ்வதும் பிறரோடு வெளியே மகிழ்ந்திருப்பதும் குடும்பத்தை நடுத்தெருவுக்கு கொண்டு வந்து சேர்த்து விடும். கருத்து வேறுபாடுகள் வலி சுமந்த மனங்களை உருவாக்கிவிடும்.
சில குடும்பங்களில் பெற்றோர் மற்றும் உடன் பிறப்புக்களால் விரிசல்கள் ஏற்படுகின்றன. சிலவேளைகளில் நீதிமன்ற வாசல்களில் நீதிகேட்டு நிற்கும் பரிதாப நிலைகூட ஏற்படுகின்றது. பெற்று வளர்த்த பெற்றோரை மறந்து தாமே துணையைத் தேடுகின்றனர். துணையைச் சேர்த்துக் கொண்டபின் பெற்றோரை முதன்மைப்படுத்தி சச்சரவுகளை உருவாக்குவது எந்த வகையில் நியாயம்? பெற்றோர் எப்போதும் பெற்றோரே. துணை எப்போதும் துணையே. துணைக்காக பெற்றோரையோ, பெற்றோருக்காக துணையையோ நிந்திப்பதும், நோகடிப்பதும் மணவாழ்வின் மகிழ்ச்சியை மாய்த்து விடும். துணை என்பது இறப்பு வரை துணையாக வாழ்வது என்பதைக் கணவனும் மனைவியும் புரிந்து கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.
அன்பு, பாசம், காதல், தியாகம், விட்டுக் கொடுப்பு என பல வடிவங்களில் ஆளுமை செய்யும் அன்பு, கணவன் மனைவியரிடையே காதலாகவும், பிள்ளைகளிடையே பாசமாகவும் உறவுகொள்கிறது. காதலும் பாசமும் குடும்பவாழ்வின் ஆணிவேர்களாக, அச்சாணியாகச் செயற்படுவதைக் காணமுடியும்.
ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்கிற நிலையிலேயே இன்று குடும்பங்கள் உடைந்து உருமாறுகின்றன. இவற்றுக்குப் பல காரணங்கள் உள்ளபோதிலும், கணவன் மனைவியின் புரிந்துணர்வின்மையும், பொறுப்பற்ற தன்மையுமே முக்கிய காரணங்களாக அமைகின்றன. கணவன் மனைவி இருவரும் தமது துணை தன்னைக் கவனிக்க வேண்டும், தனது தேவைகளை நிறைவேற்ற வேண்டும், வாழ்நாளெல்லாம் துணையாக வேண்டும் என விரும்புகின்றனர். வீட்டில் மனைவி நீண்ட நேரம் காத்திருக்க, அடுத்தவர்களோடு வெளியே மகிழ்ந்திருக்கும் கணவனாலும், பெண்ணின் தேவைகளை, விருப்பு வெறுப்புக்களை பொருட்டாக எண்ணாத கணவனாலும், பெண் விரக்தியடைகிறாள். இப்படிப்பட்ட சில காத்திருக்க வைக்கும் செயல்கள் குடும்ப வாழ்வைக் கூறு போட்டுவிடும்.
குடும்பவாழ்வில் தனியொருவர் மகிழ்ச்சி தேவையற்றது- வீணானது. இருவரும் மகிழ்ந்திருக்க வேண்டும். எனக்கு நீ, உனக்கு நான் என்னும் உயர்ந்த கொள்கையோடு ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்வதே குடும்பத்தை மெருகேற்றும். ஆணும் சரி, பெண்ணும் சரி அன்பின் அருமையை உணர்ந்து குடும்பத்தை வளம் பெருக்கி வனப்படையச் செய்ய வேண்டும். தனிமையும் தவிப்பும் வேண்டவே வேண்டாம். முடிந்தவரை இணைந்திருங்கள். கணவன் - மனைவியின் மனமகிழ்ச்சியானது, அடுத்த சந்ததியை உருவாக்குகிறது அல்லவா?
ஆக ஆண்களே! பெண்களே! உணர்ந்திடுவீர். பாலைவனத்திலும் ஒரு சோலைவனம் உள்ளபோது, கல்லுக்குள்ளும் ஈரம் உள்ளபோது, குடும்ப வாழ்வில் பசுமை வராதா? எட்டியாய் கசக்கும் வாழ்வையும், எட்டிப்பிடித்து தித்திப்பாக்கிட ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள், நாளுக்கு நாள் சந்தோசம் பெருகிட, அன்புடன் கூடிய அரவணைப்புடன் வாழுங்கள். ஏற்றத் தாழ்வுகள், வசதிகள் வசதியீனங்களைத் தகர்த்துவிட்டு மனமொத்த தம்பதியினராய் வாழ்ந்திடுங்கள். உங்கள் குடும்ப வாசல்களையும் தென்றல் தொட்டுச் செல்லட்டுமே புரிந்திடுவீர்களா...

சில குடும்பங்களில் பெற்றோர் மற்றும் உடன்பிறப்புக்களால் விரிசல்கள் ஏற்படுகின்றன. சில வேளைகளில் நீதிமன்ற வாசல்களில் நீதிகேட்டு நிற்கும் பரிதாப நிலை கூட ஏற்படுகின்றது. பெற்று வளர்த்த பெற்றோரை மறந்து, தாமே துணையைத் தேடுகின்றனர். துணையைச் சேர்த்துக் கொண்டபின் பெற்றோரை முதன்மைப்படுத்தி சச்சரவுகளை உருவாக்கு வது எந்த வகையில் நியாயம்? பெற்றோர் எப்போதும் பெற்றோரே. துணை எப்போதும் துணையே. துணைக்காக பெற்றோரையோ, பெற்றோருக்காக துணையையோ நிந்திப்பதும், நோகடிப்பதும் மண வாழ்வின் மகிழ்ச்சியை மாய்த்துவிடும். துணை என்பது இறப்பு துணையாக வாழ்வது என்பதைக் கணவனும் மனைவியும் புரிந்துகொள்ள வேண்டியது குடும்பவாழ்வின் கட்டாயமாகும்.

ஞானபாஸ்கரோதய வெற்றிக்கிண்ணம்
ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான
மாபெரும் மென்பந்து கிரிக்கட் சுற்றுத்தொடர்
அணிக்கு 7 வீரர்கள் 6 பந்துப்பரிமாற்றங்கள்
- மைதானம் -
G.P.S. மைதானம் கல்வியங்காடு
விண்ணப்ப முடிவு திகதி :26.02.2017
முதல் பரிசு : 50000/=
இரண்டாம் பரிசு : 25000/=

பங்குபற்றும் அணிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் குறித்த திகதிக்குள் பதிவுசெய்யும் அணிகளே பங்குபற்ற முடியும்
அனுசரணை:-
KIRUBA LEARNERS | SAMSUNG | Prakanth Photocopy | Sports World Jaffna
விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடங்கள்
Prakanth photo copy(Thirunelveli), Sports world(Jaffna), Samsung (Thirunelveli), Royal sports(Pointpedro)
தொடர்புகளுக்கு - 0773839120,0768229634,0774445242,0779317674
ஊடக அனுசரணை:- உதயன்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நம்ப முடியுமா சுதந்திரக் கட்சியை?

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் இதுவரை இருந்து வந்த இருள்மேகம் விலகியிருப்பதாக நேற்றுமுன்தினம் வெளிவந்த செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த முயற்சிகள் முக்கால் கிணறு தாண்டிய நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதிலிருந்து மெல்ல நழுவும் போக்கை வெளிக்காட்டத் தொடங்கியது. இப்போது மீண்டும் வழிக்கு வந்திருக்கும் அந்தக் கட்சி, விட்ட இடத்திலிருந்து புதிய அரசமைப்புக்கான முயற்சிகளைத் தொடர்வதற்கும் இணங்கியிருக்கிறது.

ஆனால் இப்படித் திடீர் திடீர் என தனது பாதையை மாற்றிக்கொள்ளும் அந்தக் கட்சி, மீண்டும் இறுதிக் கட்டத்தில் பிரச்சினை எழுப்பாது என்று எப்படி நம்புவது?

ஆரம்பத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைந்தே புதிய அரசமைப்பு முயற்சியை ஆரம்பித்தன. நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாற்றம்பெற்றது. புதிய அரசமைப்பை உருவாக்கும்போது 6 விடயங்களில் ஆலோசனைகளை வழங்குவதற்காக 6 உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன. மிக முக்கியமான மீதி 6 விடயங்களிலும் ஆலோசனை வழங்கு வதற்காக வழிகாட்டல் சபையும் உருவாக்கப்பட்டது. இந்த இருகுழுக்களிலுமே அனைத்துத் தரப்பையும் சேர்ந்த நாடா ளு மன்ற உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். சிறி லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் அதில் உள்ளடக்கம்.

இந்தக் குழுக்களின் ஆரம்ப காலக் கூட்டங்கள் மிகச் சிறப்பாகவே நடந்தேறின. பல்வேறு முக்கிய விடயங்களும் அலசப்பட்டபோது சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் உட்பட அனைத்துப் பிரதிநிதிகளும் இணைந்து அவற்றை நிறைவேற்றினர். அதனடிப்படையிலேயே உப குழுக்கள் ஆறினது அறிக்கைகளும் வெளிவந்திருந்தன. அந்த அறிக்கைகளில் சில காத்திரமான முன்மொழிவுகளையும் தாங்கி வந்திருந்தன.

ஆனாலும், வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டு அது நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட இருந்த வேளையில் சுதந்திரக் கட்சி தனது கிளர்ச்சியை ஆரம்பித்தது. வழிகாட்டல் குழுக்கூட்டங்களில் பங்கேற்பதைத் தவிர்க்கத் தொடங்கியது. அதுமட்டுமன்றி, சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் அதிகாரப் பகிர்வுக்கு எதிராகவும் புதிய அரசமைப்பு முயற்சிக்குமாறாகவும் வெளிப்படையாகவே கருத்துக்களைத் தெரிவிக்கத் தொடங்கினார்கள். கிட்டத்தட்ட எந்தவொரு அதிகாரத்தையும் தமிழர்களுடன் பகிர்ந்துகொள்வதற்குத் தயாரில்லை என்கிற பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் மறுஒலிபரப்பாக அவர்களின் கருத்துக்கள் இருந்தன.

தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் பெரும் ஆதரவுடன் அரச தலைவர் பதவியைப் பெற்றவரான சுதந்திரக் கட்சியின் தலைவர், அதிகாரப்பகிர்வுக்கு ஆதரவானவராகத் தன்னைக் காட்டிக்கொண்ட அதேநேரத்திலேயே அவரது கட்சி அதிகாரப்பகிர்வுக்கு எதிரான பரப்புரையை மிக வேகமாக முன்னெடுத்தமை தமிழர்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தையும் கேள்வியையும் எழுப்பியது.

சுதந்திரக் கட்சியின் மற்றைய தலைவர்களை அரச தலைவரான மைத்திரிபால சிறிசேன கட்டுப்படுத்தவேண்டும் என்று முன்னாள் அரசதலைவர் சந்திரிகா குமாரணதுங்கவே கருத்துத்தெரிவிக்கும் அளவுக்குத் தீவிரமான கருத்துக்களைத் தெரிவித்தார்கள் சுதந்திரக் கட்சியினர்.

அவர்களே இப்போது மீண்டும் வழிக்கு வந்து, விட்ட இடத்திலிருந்து புதிய அரசமைப்பு முயற்சியைத் தொடர்வதற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். இப்போதுள்ள கேள்வி எல்லாம், இது எத்தனை நாளைக்கு என்பதுதான்? நிலையான கொள்கை ஒன்றைக் கொண்டிராமல், இப்படி அடிக்கடி கொள்கை மாற்றம் செய்யும் சுதந்திரக் கட்சியினர், திடீரென மீண்டும் ஒரு தடவை இப்படி மாறமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? இந்தச் சந்தேகத்தை நீக்க உறுதியான நடவடிக்கையை அரச தலைவர் எடுக்கவேண்டும்.

# சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் எம்.பிக்களுக்கு விழிப்புணர்வுப் பட்டறை

**புதிய அரசமைப்பு முயற்சி ஆட்டம் காணும் நிலைமை**

**ராஜபக்ச ஆதரவாளர்களை வெளியேற்ற சந்திரிகா அம்மையார் பரிந்துரை**

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்


கடந்த வாரம் செவ்வாய் அன்று நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில் பெரும்பாலும் நாட்டை எதிர்நோக்கி உள்ள பொருளாதார நெருக்கடிகள் பற்றியே விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக உள்ளூர் அரிசி உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளமையால் அதனைச் சமாளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த ஒரு வேண்டுகோளை அடுத்து இந்தோனேசிய அரசு நிவாரண உதவியாக 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைத் தந்துதவ முன்வந்திருப்பது பற்றிக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. சிறிசேன, வேறுபல நாடுகளுக்கும் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருப்பது தெரியவந்துள்ளது. வியட்நாம் மற்றும் இந்தோனேசியா நாடுகளில் இருந்து மேற்கொண்டும் அரிசியை இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இது ஏற்கனவே இந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் அரிசிக்கு மேலதிகமாகும். இவ்வாறு அரிசி இறக்குமதி செய்வதானது ஏற்கனவே பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் நாட்டில், மேலும் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாகவே இருக்கப்போகின்றது. இவ்வாறு எழுந்துள்ள சிக்கல் நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பதற்காக அமைச்சர் சரத் அமுனுகம தலைமையில் உப குழு ஒன்று நியமிக்கப்பட்டது.



முன்னைய ஆட்சிக் காலத்தில் இருந்ததை விட நாட்டின் பொருளாதார நிலைமை இப்போது ஓரளவு நல்ல திருப்பத்தை அடைந்திருப்பதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அமைச்சர்களிடம் தெரிவித்தார்.

### சுதந்திரக் கட்சியினருக்குப் பயிற்சிப் பட்டறை

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பணிமனையின் தலைவராக இருக்கும் முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க, சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவிருப்பதாகவும், நாட்டின் நிதி நிலைமை மற்றும் புதிய அரசமைப்புத் தொடர்பாக விழிப்பூட்டுவதற்காக இது நடைபெறவிருப்பதாகவும், ஜனாதிபதி சிறிசேன அறிவித்தார். ஜனாதிபதி மாளிகையில் இருந்து அவர்கள் அனைவரையும் பேருந்து மூலம் நிகழ்ச்சி நடைபெறவிருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் நந்தவாஸ் வீரசிங்க, மத்தியின் நிதி நிலைமைகள் குறித்து விளக்க உரை நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டது. உத்தேச அரசியலமைப்புத் தொடர்பாக ஐ.தே.க. தேசியப் பட்டியல் உறுப்பினர் ஜெயம்பதி விக்கிரமரட்ணவும், பேசவிருந்ததை அவர்கள் எதிர்த்தனர். ஐ.தே.க உறுப்பினர் ஒருவரின் பேச்சை நாம் ஏன் கேட்க வேண்டும். தேவையானால்



ளங்கள் தரப்பில் இருக்கும் நிபுணர்களை அதற்கு ஏற்பாடு செய்யலாமே என்று ஒருவர் குரல் எழுப்பினார். அமைச்சர் பிரேமஜெயந்த மற்றும் பைசர் முஸ்தபா ஆகியவர்கள் இதற்குப் பலமாக எதிர்ப்புத் தெரிவித்தார்கள். சில முக்கிய அமைச்சர்கள் வெளிநாட்டில் இருப்பதால், இதனை வேறொரு திகதியில் வைத்துக் கொள்ளலாம் என்றும் சிலர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். ஜனாதிபதி, தாம் திருமதி குமாரதுங்கவுடன் பேசுவதாகவும் அவர் மிகவும் தேவைப்பட்ட ஒருவர்; அவரை ஏமாற்ற முறச் செய்ய முடியாது என்றும் தெரிவித்தார். இதன் பேரில் இணக்கம் ஒன்று ஏற்பட்டது.

நாட்டின் இன்றைய பொருளாதாரப் பிரச்சினை மற்றும் இப்போது கவலை அளித்துக் கொண்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக மட்டுமே, பட்டறையில் கவனம் செலுத்தப்படும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், ஜெயம்பதி விக்கிரம ரட்ணவை அழைப்பதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வரப்போகின்ற மேதினப் பேரணி பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இந்த வருடம் மே தினத்தை கட்சி எழுச்சியுடன் கொண்டாடவேண்டும் என்று தெரிவித்த சிறிசேன, கட்சியின் மாவட்ட ஏற்பாட்டாளர் களைமுன்னதாக கொழும்புக்கு அழைத்து கூட்டம் ஒன்றை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். இதற்காக கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தை அழைக்கும்படியும் பணிப்புரை விடுத்தார். இந்த மத்திய குழுக் கூட்டம் மிக குறிப்பிட்ட தக்கதாக இருக்கப் போகின்றது. அரசமைப்புப் போன்ற முக்கிய விடயங்களில் கட்சியின் நிலைப்பாடு குறித்து ஆராயப்பட்டு இந்தக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட இருக்கின்றது. ஜனாதிபதி சிறிசேன, திருமதி குமாரதுங்கவுடன் ஆலோசனை மேற்கொண்டதை யடுத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தை நீர் கொழும்பில் உள்ள யஹட்டன்ஸ் ஹோட்டலில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. சனிக்கிழமை நடைபெற்ற அந்தக் கூட்டத்துக்கு ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. பாதுகாப்பு அலுவலர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி மற்றும் பிரதி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் கூட்டத்தில் பிரசன்னமானார்கள். மூன்று அம்சங்களை முன்னிலைப்படுத்தி வீரசிங்க தனது உரையை நிகழ்த்தினார். இப்போது நிலவும் நிதிவரிக் கொள்கை, பொதுக்கடன்கள், மற்றும் இப்போதைய பொருளாதார நிலைமை என்பவை குறித்ததர்கும் அது. கூட்டத்தில் முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க மற்றும் சப்ரகமுவ முதலமைச்சர் மகிபால ஹேரத்தைத் தவிர்த்து ஏனைய சிறிலங்கா சுதந்திரக்கட்சி முதலமைச்சர்களும் கலந்து கொண்டிருந்தனர் ஹேரத் வெளிநாடு சென்றுள்ளார்.


உத்தேச அரசமைப்பு விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஐ.தே.கவுடன் முரண்பாடான ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றது. இப்போது எஞ்சியுள்ள ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரப் பிரிவுகள் அவ்வாறே இருக்க வேண்டும்; அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிசேனவே கட்சியின் வேட்பாளராக இருக்க வேண்டும் என்ற வகையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் கடந்த மாதம் முடிவு எடுத்திருந்தார்கள். கூட்டத்தை முடித்து வைத்து பேசிய ஜனாதிபதி சிறிசேன, அரசு தீர்வு காண வேண்டிய சவாலுக்குரிய பல விடயங்கள் இன்னமும் இருக்கின்றன என்று தெரிவித்தார்.

**கூட்டு எதிர்க்கட்சியினர் விலக முடிவு**

இவ்வாறு மத்திய வங்கியின் பிரமுகர்களின் விரிவுரைகளை ஐ.தே.க. அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. ஐ.தே.கவைப் பொறுத்தவரை புதிய அரசமைப்பு ஒன்றுக்கான முயற்சியில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அதிகாரப்பகிர்வானது 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்குள்ளேயே இருக்க வேண்டும் என்பது சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்களின் நிலைப்பாடு. அரசமைப்புக்கான முயற்சிகளை அரசமைப்புச் சபை மூலமாக ஐ.தே.க. முன்னெடுத்து வருகின்றது. இந்தச் சபையினால் நியமிக்கப்பட்ட ஆறு வழிகாட்டுக் குழுக்களும் தமது அறிக்கைகளை வழங்கியுள்ளனர். அவர்கள் மீதான நாடாளுமன்ற விவாதம் கடந்த ஜனவரி 9 திகதி நடைபெறவிருந்த நிலையில், அரசியலில் உள்ள முக்கிய இரு கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டில் முரண்பாடுகள் தோன்றியதால், விவாதம் திகதி குறிக்கப்பெறாமல் பின் போடப் பட்டுள்ளது. இதேவேளை அரசமைப்புச் சபையில் இருந்து விலகிக் கொள்வதாக கூட்டு எதிர்க்கட்சியினர் அறிவித்திருப்பது பெரிய பின்னடைவாகக் காணப்படுகின்றது. கூட்டு எதிர்க்கட்சியின் சார்பில் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறுகையில், முக்கிய பிரச்சினைகளில் அரசு தனது நிலைப்பாட்டை இன்னமும் தெளிவுபடுத்திக் கூறவில்லை. அதனால் ஆறு உப குழுக்களிடமிருந்து நாங்கள் விலகிக் கொள்கிறோம். ஆனால் நிலைமைகளைக் கண்காணிப்பதற்காக குணவர்த்தனவும் பிரசன்ன ரணதுங்கவும் தொடர்ந்து இருந்து வருவார்கள் என்று தெரிவித்தார். இந்த வெளி நடப்புக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் தமது இணக்கத்தைத் தெரிவித்திருக்கின்றார் என்று பந்துல குணவர்த்தன கூறினார். குறிப்பிட்ட உபகுழுக்களில் உறுப்புரிமை பெற்றுள்ள எங்கள் உறுப்பினர்களுக்கு நாங்கள் அறிவிப்போம். அவர்கள் அடுத்துவரும் வாரங்களில் அவைகளில் இருந்து படிப்படியாக விலகுவார்கள் என்றார் கூட்டு எதிர்க்கட்சியின் மூத்தலைவர்களின் ஒருவரான பந்துல குணவர்த்தன. தங்கள் தரப்பினர் வெளியேறுவதற்கு முக்கிய காரணம், மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பான உப குழுவின் பரிந்துரைகள் என்றார் பந்துல குணவர்த்தன. இந்தக் குழுவுக்குத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினரான தர்மலிங்கம் சித்தார்த்தன் இருக்கிறார். இதன் பரிந்துரைகள் சமஷ்டி முறை ஆட்சிக்கு வழிவகுப்பதாக இருக்கப் போகின்றன. வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கு இந்தக் குழு பரிந்துரை செய்கிறது. பொலிஸ் அதிகாரம், நிதி, மற்றும் காணி அதிகாரங்களை பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகளும் காணப்படுகின்றன. இவை சமஷ்டி முறைக்குத் தான் இட்டுச் செல்லும். எனவே இவ்வாறான பரிந்துரைகளைச் செய்வ தில் மறைமுகமான நிகழ்ச்சி நிரல் ஒன்று இருப்பதாகவே நாங்கள் கருது கிறோம் என்றார் குணவர்த்தன. கடைசியாக இந்தப் பரிந்துரைகளையெல்லாம் ஒன்று சேர்த்துவிட்டு இவைகளுக்கு நாங்களும் ஆதரவளித்துள்ளோம் என்று கூறப்போகிறார்கள். அவ்வாறாயின், அது எங்கள் மீது மோசமாகப் பிரதி பலிப்பதாக இருக்கும் என்றார் அவர்.

**ராஜபக்ச ஆரதவாளரை வெளியேற்றுங்கள்**

புதிய அரசமைப்பை மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப் போவதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். நாங்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்கள் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மை பெறுவதைத் தடுத்து நிறுத்துவோம் என குணவர்த்தன கூறினார். நாடாளுமன்றத்தில் அரசியல் அமைப்பை மூன்றில் இரண்டுமடங்குபெரும்பான்மையுடன் நிறைவேற்றி மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்புக்கு போவதென்ற உத்தேசம் கூட்டு எதிர்க் கட்சியினரின் இந்த நடவடிக்கையால் வெறும் கனவாக முடிந்துவிடக்கூடிய நிலைமை தோன்றியுள்ளது. இவை இவ்வாறு இருக்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் சிறிசேன ஆதரவுப் பிரிவுகளை மீண்டும் ஒன்றாக இணையச் செய்வதற்கான முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்றே வருகின்றன. இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சவை ஆதரிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களை வெளியேற்ற வேண்டும் என்று திருமதி சந்திரிகா குமாரதுங்கா வலியுறுத்தி உள்ளார். ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் கொலைகாரர்கள், திருடர்கள் என்று அவர் வர்ணித்தார். அவ்வாறாயின், அது ஐ.தே.கவை பலப்படுத்துவதாக இருக்காதா என்று கேட்டபோது, தாம் அப்படி நினைக்கவில்லை என்றார். கடந்த வாரம் வெளிநாட்டு நிருபர்கள் சங்கக் கூட்டத்தில் பேசிய அவர், அப்படியானவர்களை வெளியேற்றியதன் பின்னர் பரப்புரைகளை மேற்கொண்டால், மக்கள் ஆதரவை சுதந்திரக்கட்சியினரால் பெற்றுக் கொள்ள முடியும் என்றார். இலங்கையில் மூன்றாவது கட்சி ஒன்று பெரிதாகத் தலைதூக்குவது சாத்தியமில்லை என்று கூறிய அவர், தமது தந்தையார் காலத்திலும் இந்த நிலைமையே நிலவியது என்று கூறினார். இரண்டு கட்சிகள் தான் பெரிய கட்சிகளாக இருக்க முடியும் என்றார் அவர்.



# வாசகர் திருமுகம்

## வடக்கு மாகாண ஆளுநரை தமிழ்ப் பொதுமக்கள் சந்திக்க முடியாத அவலம்!

அண்மையில் எனது பட்டதாரி மகளின் ஆசிரியர் நியமனம் தொடர்பில் தமிழ் பேசத் தெரிந்த அரசியல்வாதியான வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயைச் சந்திப்பதற்காக யாழ்.கச்சேரி முன்பாக உள்ள ஆளுநர் அலுவலகத்துக்குச் சென்று பொலிஸாரின் அனுமதி, வரவேற்பாளரின் அனுமதியுடன் உள்ளே சென்று விட்டேன். எனினும் அன்றைய தினம் ஆளுநரை என்னால் சந்திக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது.

நான் சென்றவேளை, வடமாகாணத்தின் உயர்நிலை அதிகாரிகள் சிலர், ஆளுநரைச் சந்தித்துவிட்டு வெளியில் வந்து கொண்டிருந்ததைக் கண்டு அவர்களிடம், ஆளுநர் பணிச்சுமையுடன் இருக்கிறாரா? அல்லது வேறு அதிகாரிகள் எவராவது அவருடன் உள்ளனரா? எனக் கேட்டேன். அதற்கு, ஆளுநர் அறையில் வேறு எவரும் இல்லையெனப் பதிலளித்துவிட்டு அவர்கள் சென்று விட்டனர். ஆனால் நான் ஆளுநரைச் சந்திப்பதற்கு ஆளுநரின் கீழ் பணிபுரியும் சிலர் முட்டுக்கட்டை போட்டனர்.

ஆளுநர் கூட்டம் நடத்துகின்றார்; தற்போது சந்திக்க முடியாது. நீர் யார் என்ற வினாக்கள் தொடுக்கப்பட்டன. இவ்வாறு ஆளுநரைச் சந்திக்க விடாது தடுப்பவர் யார் தெரியுமா? இவர் அரச அலுவலரும் இல்லை, அலுவலக உதவியாளரும் இல்லை, சுகாதாரத் தொழிலாளியுமில்லை, அங்கு நிற்கும் தென்மராட்சியைச் சேர்ந்த ஒருவரே, இவ்வாறு ஆளுநரிடம் பொதுமக்களைச் செல்லவிடாது, சந்திக்கவிடாது ஆளுநருக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் விதத்தில் நல்லவர் போல் நடந்து ஆப்பு வைக்கிறார். இவரைப் பற்றி ஆளுநர் இன்னமும் அறியாதது கவலைக்குரியதே.

வடக்கு மாகாணமன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மக்கள் தமது கு[illegible]களைக் கூறி அவற்றுக்குத் தீர்வு [illegible]றுக் கொள்வதற்காக ஆளுந[illegible] சந்திக்க வரும்போது, இவ்வா[illegible] புல்லுருவிகளை உடன் கவனி[illegible] அங்கிருந்து வெளியேற்றி[illegible] வேண்டும். இல்லாவிடில், [illegible]நர் அலுவலகம் இருந்தென்ன [illegible]னாதிபதியிடம் சொல்லுங்கள்" எ[illegible] அலுவலகம் இருந்தென்ன பய[illegible]ல்லாம் பூச்சியமாகிவிடும்.

*ம.செல்வ[illegible]ணிக்கம்*
*இளைப்பாறிய அர[illegible]லுவலர்*
*[illegible]நொச்சி*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 2 | | 9 | | 7 | |
| 8 | | | | | | | | 1 |
| | | 6 | | | | 9 | | |
| 5 | | | 9 | | 1 | | | 4 |
| | 6 | | | 3 | | | 8 | |
| 3 | | | 8 | | 2 | | | 7 |
| | | 5 | | | | 6 | | |
| 7 | | | | | | | | 5 |
| | 8 | | 5 | | 3 | | 4 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 5 | 3 | 8 | 4 | 2 | 1 | 9 |
| 9 | 3 | 1 | 7 | 5 | 2 | 8 | 6 | 4 |
| 8 | 4 | 2 | 9 | 1 | 6 | 7 | 5 | 3 |
| 7 | 9 | 3 | 5 | 6 | 1 | 4 | 8 | 2 |
| 5 | 1 | 8 | 4 | 2 | 9 | 3 | 7 | 6 |
| 4 | 2 | 6 | 8 | 7 | 3 | 5 | 9 | 1 |
| 3 | 5 | 9 | 1 | 4 | 7 | 6 | 2 | 8 |
| 1 | 6 | 7 | 2 | 3 | 8 | 9 | 4 | 5 |
| 2 | 8 | 4 | 6 | 9 | 5 | 1 | 3 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இலேசான பணியை நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சுமாராக இருக்கும். மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடு படுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**இடபம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்கவும். அளவான வருமானம் கிடைக்கும். உடல் நலத்துக்கு ஒவ் வாத உணவு உண்ண வேண்டாம்.

**மிதுனம்:** உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரம் அபரிமித மாக வளர்ச்சி பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** சமயோசிதமாகச் செயற்பட்டு வருவீர் கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உப யோகப் பொருள் வாங்குவர். பணியாளர் களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும்.

**சிங்கம்:** தகுதிக்கு மீறி எவருக்கும் வாக்களிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முயற் சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். உடல்நலத்துக்கு சிகிச்சை தேவைப்படலாம்.

**கன்னி:** குடும்பத்தினரின் ஆதரவால் முன்னேற் றம் உண்டாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு அவசியம். பணவரவு சுமா ராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு மன அமைதிக்கு வழிவகுக்கும்.

**துலாம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக் கும். பணியாளர்கள் பாராட்டு வெகுமதி பெறு வர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக் கும். பெண்கள் ஆன்மிகச் சுற்றுலா செல்வர்.

**விருச்சிகம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**தனுசு:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். பிள்ளைகளின் வழியில் தாராள மனதுடன் செலவு செய்வீர்கள். மாணவர் களுக்கு படிப்பில் சிறந்த தர தேர்ச்சி கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகா சம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும். லாபம் படிப்படியாக உயரும். குடும்ப ஒற்றுமையைக் காப்பாற்ற முயல்வீர்கள்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலக்கு எளிதில் முழு மையாகும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக் கும். பெண்களுக்கு பொன், பொருள் சேரும். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

**மீனம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்களுக்கு வீட்டுத் தேவை தாராள செலவில் நிறைவேறும். அரசியல்வாதி கள் பதவி பெற அனுகூலம் உண்டாகும்.

# சிங்கத்தின் வேட்டை தொடரும்



சூர்யா நடிப்பில் கடந்த வாரம் வெளி யான 'சி3' படம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிவருகிறது. 'சிங்கம்', 'சிங்கம் 22 படத்தின் அடுத்த பாகமாக உருவாக்கியுள்ள 'சி32' படத்தை ஹரி இயக்கியுள் ளார். இந்தப்படத்தில்சூர்யா அனுஷ்கா ஷெட்டி, ஸ்ருதிஹாசன், விவேக், சூரி, ராதாரவி, தாகூர் அனுப் சிங் உள் ளிட்ட பலரும் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு ரசிகர்கள் மத்தி யில் நல்ல வரவேற்பு கிடைத்ததால் படம் வெளியான 6 நாள்களிலேயே 100 கோடியை வசூலித்து புதிய சாதனையை படைத்தமை குறிப்பிடத்தக்கது. சூர்யா நடிப்பில் குறைந்த நாள்களில் 100 கோடி வசூலைக் குவித்துள்ளது. 'சி3' பட வெற்றியையடுத்து இயக்குநர் ஹரிக்கு, நடிகர் சூர்யா கார் ஒன்றைப் பரிசளித்துள்ளார். இயக்குநர் ஹரி அளித்த பேட்டியில், சூர்யாவுடன் இணைந்து 'சிங்கம்' படத்தின் நான்காவது பாகத்தை எடுக்க உள்ளதாகவும், சிங்கத்தின் வேட்டை தொடரும் என்றும் ஹரி குறிப்பிட்டுள்ளார். ஹரி அடுத்ததாக 'சாமி' படத்தின் அடுத்தபாகமாக சாமி22 படத்தை இயக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. அதன்பின்னர் சிங்கம் படத்தைப் போன்று வேறொரு கதைக் களத்தில் சூர்யாவுடன் இணையவுள்ள ஹரி, அதன்பின்னர் 'சி42' படத்தை இயக்க உள்ளதாகக் கூறப்படுகிறது




**கணவன் :** ஊரெங்கும் ஒரே காய்ச்சலா இருக்கு! குடிக்க வெந்நீர் போட்டுக் கொடு.



**மனைவி:** பயப்படாதீங்க பரவுறது மூளைக் காய்ச்சல்தான்! அது உங் களை ஒன்றும் பண்ணாது.

**கணவன்:** இன்னுமா சமையல் ஆகலே! நான் ஹோட்டலுக்கு போறேன்.
**மனைவி:** ஒரு ஐந்து நிமிசம் பொறுங்கோ...
**கணவன்:** அதுக்குள்ளே ஆகிடுமா?



**மனைவி:** நானும் புடைவையை மாத்திட்டு உங்களோட வந்திடறேன்...

'எனக்குத் தெரியும்' என்பதின் அர்த்தம்....



எனக்கு இந்த வேலையைக் செய்யத் தெரியும் என்பது அல்ல... "நீ உன் வேலையைப் பாரு" என்பதே.....

**ஆசிரியர்:** உனக்கு எந்த மிருகம் பிடிக்கும்?
**மாணவன் :** பூனை பிடிக்கும்
**ஆசிரியர் :** ஏன்?



**மாணவன்:** பூனை குறுக்க வந்தால் என் பாட்டி என்னைப் பாடசாலைக்கு அனுப்ப மாட்டாங்க....



# நாக்கின்

## நிற வடிவமே போதும்! உங்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு

ஒருவருடைய நாக்கின் வடிவம் மற்றும் நிறத்தை வைத்தே அவர்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்களின் குணங்கள் என்ன என்பதைப் பற்றி கூறிவிடலாம்.

**தடித்த நாக்கு**

தடித்த நாக்கைக் கொண்டவர்கள் அனைத்து விடயங்களிலும் அதிகளவில் கோபம் அடைபவராக இருப்பார்கள்.மேலும் இவர்கள் அனைத்து விதமான செயற் பாடுகளிலும் விதண்டா வாதம் செய் வதுடன், தன்னுடைய தலைமைத்துவம் மட்டும் தான் வீட்டில் இருக்க வேண் டும் என்று நினைப் பார்கள்.

**மென்மையான நாக்கு**

மென்மையான நாக்கைக் கொண்டவர்கள் வெள்ளை மனதை கொண்டவர்கள். அவர்கள் தமது மனதில் பட்டதை பேசும் திறன் கொண்டவர்களாக இருப்பார்கள்.

**நீளமான நாக்கு**

நீளமான நாக்கைக் கொண்டவர்கள் தமது வாழ்வின் அனைத்து விடயங்களிலுமே விவேகமாக செயற்படுவார்கள். அதுவே பெண்களாக இருந்தால், அவர்கள் தங்கள் கணவர்கள் மீது அதிக காதல் மற்றும் உண் மையான அன்பைச் செலுத்துபவராக இருப்பார்கள்.

**சிறிய நாக்கு**


சிறிய நாக்கைக் கொண்டவர்கள் மிகவும் அமைதியானவர்கள். மேலும் இவர்கள் குறைவாகப் பேசும் திறன் கொண்டவர்களாதலால் எவரையும் எதிர்த்து பேசாதவர்களாக இருப்பார்கள்.

**வெள்ளை நாக்கு**

நாக்கில் வெள்ளை படிந்த ஆண்கள் காதலில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். அதுவே பெண்களாக இருந் தால், அவர்களுக்குப் பிடித்தமான வர்கள் மீது அதிகப்படியான அன்பைச் செலுத்துபவராக இருப்பார்கள்.

**சிவப்பு நாக்கு**

ஒருவருக்கு நாக்குச் சிவப்பாக இருந்தால், அவர்கள் அனைத்து விடயத்திலும் ஒரு விதமான கூச்சம் மற்றும் பயந்த சுபாவம் உடையவராக இருப்பார்கள்.





# பப்பாளி இலையின் நன்மைகள்

அன்றாடம் நாம் உண்ணும் பழங்களில் இருக்கும் மருத்துவ நன்மைகளைவிட, அந்தப் பழ மரங்களின் இலை, பூ, பட்டை, வேர் இது போன்ற மற்ற பாகங்களிலும் மருத்துவ நன்மைகள் அதிகமாக நிறைந்துள்ளன. அந்த வகையில், பப்பாளி இலை முக்கிய பங்கை வகிக்கிறது. இந்த இலையில் ஃபைட்டோ நியூண்ட்ரியண்டுகள், என்சைம் போன்ற நிறமிகளும், கல்சியம், பொட்டாசியம், சோடியம், மக்னீசியம் மற்றும் இரும்பு போன்ற கனிமச் சத்துக்களும் அதிகமாக உள்ளன.

எனவே பப்பாளி இலையில் ஜூஸ் செய்துக் குடித்து வந்தால், ஏராளமான நன்மைகளை நாம் பெறலாம்.


எமது உடம்பில் ஓடும் குருதியில், குருதித் தட்டுக்கள் குறைந்தால், அது பல்வேறு நோய்களை ஏற்படுத்தும். இதனால் பப்பாளி இலை ஜூஸ் குடித்து வந்தால், குருதி செல்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம்.

பப்பாளி இலையின் சாறு எமது உடம்பில் உள்ள கல்லீரலின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, மஞ்சள் காமாலை, கல்லீரல் புற்று நோய் போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கிறது.

எமது உடம்பில் உள்ள வைரஸ்கள் மற்றும் பக் றீரியாக்களுடன் எதிர்த்துப் போராடி, மலேரியா, டெங்குக் காய்ச்சல், புற்றுநோய் போன்ற ஆபத் தான நோய்களிடம் இருந்து எம்மை பாது காக்கிறது.

அன்றாடம் நாம் பப்பாளி இலைச் சாற்றைக் குடித்து வந்தால், அது எமது உடம்பின் நோயெதிர்ப்பு திறனை அதிகரிக்கச் செய்து, உடல் சோர்வு போன்ற பிரச்சினைகளைத் தடுக்கிறது. வயிற்றில் ஏற்படும் செரிமானப் பிரச்சினை, ஒவ்வாமை, போன்ற சருமப் பிரச்சினை, ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சி, நீரிழிவு மற் றும் பக்கவா தம் போன்ற பிரச்சினைகளுக்கு பப்பாளி இலைச் சாறு சிறந்த தீர்வாக உள்ளது.

**எமது உடம்பில் உள்ள வைரஸ்கள் மற்றும் பக்றீரியாக்களுடன் எதிர்த்துப் போராடி, மலேரியா, டெங்குக் காய்ச்சல், புற்றுநோய் போன்ற ஆபத்தான நோய்களிடம் இருந்து எம்மை பாதுகாக்கிறது.**



# நாளை

**மாசி-12**

வெள்ளிக்கிழமை -24.02.2017
திதி: திரயோதசி மு.இ. 09.39
நட்சத்திரம்: திருவோணம் முழுவதும்
சுபநேரம்:06.30-08.00 வரை
ராகுகாலம்:11.00-12.30 வரை
மகாசிவராத்திரி

# வரலாற்றில் இன்றைய தினம்

1820 - அனைத்துப் பிரித்தானிய கபினட் அமைச்சர்களையும் கொன்றொழிக்கும் சதி அம்பலமானது.

1861 - பல்ரிமோர் மேரிலாண்டில் கொலைமுயற்சி மேற்கொள்ளப்படுவதாக அறிந்து, ஜனாதிபதி வேட்பாளர் ஆபிரகாம் லிங்கன் இரகசியமாக நியூயோர்க் நகரை வந்தடைந்தார்.

1887 - பிரெஞ்ச் றிவெறியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 2000 பேர் உயிரிழந்தனர்.

1903 - குவாண்டனாமோ குடாவை கியூபா அமெரிக்காவுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கியது.

1905 - உலகின் முதலாவது சேவைக் கழகமான றோட்டரிக் கழகத்தை ஸ்தாபிப்பதற்கு சிக்காகோ அட்டோர்னி போல் ஹாரிசும் வேறு மூன்று வர்த்தகர்களும் மதிய போசனமொன்றில் ஒன்று கூடினார்.

1917 - ரஷ்யா சென். பீற்றர்ஸ் பேக்கில் பெப்ரவரி புரட்சியின் முதல் ஆர்ப்பாட்டம் தொடங்கியது. (கிழகோரியன் நாள்காட்டிக்கமைய இது மார்ச் 8 ஆம் திகதியாகும்)

1927 - வானொலி அலைவரிசையை ஒழுங்குபடுத்தும் சமஷ்டிவானொலி கொமிசன் சட்ட வரைவில் அமெரிக்க ஜனாதிபதி கல்வின் கூலிக் ஒப்பமிட்டார்.

1941 - புளுட்டோனியம் மூலகம் முதன் முதலாக டாக்டர் கிளென் ரி சீபோர்க்கால் பிரித்தெடுக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது.

1945- இரண்டாம் உலகப் போர்; பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்கப் படைகளால் கூட்டிணைந்து விடுவிக்கப்பட்டது.

1980 - அமெரிக்கத் தூதுவராலய பணயக் கைதிகள் தொடர்பாக ஈரானிய நாடாளுமன்றம் தீர்மானிக்கும் என உயர் தலைவர் ஆயதுல்லா கொமெனி கூறினார்.

1991 - வளைகுடா போர்; சவூதி அரேபிய எல்லையைத் தாண்டி தரைத் தாக்குதலுக்காக படைகள் ஈராக்கினுள் புகுந்தது

2010 - இனந்தெரியாத கும்பலால் 2.5 மில்லியன் லீற்றர் டீசல் மற்றும் ஐக்ரோகாபன் கழிவுகள் வட இத்தாலி லம்றோ ஆற்றில் கொட்டப்பட்டதில் சுற்றுச் சூழல் பேரிடர் ஏற்பட்டது.

1992 - ஐ.நா. சிறுவர் நிதியத்தால் வழங்கப்பட்ட முதலுதவிப் பெட்டிகளை இலங்கை எடுத்துவர புனர்வாழ்வு அமைச்சு மறுப்பு

1992 - சித்த வைத்தியம் இந்தியாவை விட இங்கு வளர்ந்துள்ளது. அதனைக் காக்க வேண்டும் என வடக்கு –கிழக்கு மாற்று மருத்துவத் துறைப் பணிப்பாளர் மருத்துவர் பசுபதி உமாமகேஸ்வரன் தெரிவிப்பு.

1992 - இனப் பிரச்சினைக்கு உள் நாட்டுத் தீர்வே தேவை என ஜேர்மன் அதிபர் செவ்வி.

1993 - மும்முனைத்தாக்குதலுடன் மாதகலில் படையினர் முன்னேற முயற்சி விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர்.

1993 - வலி. மேற்குப் பகுதியில் மக்கள் இடம்பெயர்வு


1993 - குடா நாட்டில் ஊரடங்கு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் என கூட்டுப்படைத் தலைமையகம் அறிவிப்பு

1993 - சென்னையிலிருந்து 440 மைல் தொலைவில் வைத்து கிட்டுவின் கப்பல் வழிமறிப்பு என இந்தியா ஒப்புக் கொண்டது

2014 - தமிழக அரசின் விடுதலை முடிவு முழு ஆசியாவுக்கும் அச்சுறுத்தல் என ராஜீவ் கொலை கைதிகள் விடுதலை தொடர்பில் இலங்கை அரசு கடும் எச்சரிக்கை.

## மரண அறிவித்தல்

### அருட்பிரகாசம் விக்னராஜா



தோற்றம் 15.05.1946 மறைவு 21.02.2017

"கோகனதைவாசா" சுதுமலை மத்தியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அருட்பிரகாசம் விக்னராஜா அவர்கள் 21.02.2017 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம் - கோகனதையம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவதாசன், சிவதேவி, சிவானந்தன் மற்றும் முருகானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற வேதநாயகியின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து -ஸ்ரீமதியம்மா , நடராஜா-சோதி மணியம்மா ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற ஸ்ரீநிவாசன் மற்றும் ஸ்ரீரஞ்சன் ,ஸ்ரீதரன் ,சாரதாதேவி, ஸ்ரீ தாசன், சசிதரன்,சசிகலா, சசீந்திரன், சசிகுமார் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2017) வியாழக் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**தகவல்:**

**அ.முருகானந்தன் சகோதரன்**

## பனைசார் உணவு உற்பத்திப் பொருள்கள் கொள்வனவு

பனை அபிவிருத்திச் சபையினால் பின்வரும் பனைசார் உணவு உற்பத்திப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

01. சீவல் ஒடியல
02. புளுக்கொடியல்
03. வட்ட சீவல் ஒடியல்
04. ஒடியல்
05. பனாட்டு

உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி மாதிரிகள் மற்றும் விலை மனுக்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம் ஆகிய இடங்களில் உள்ள சபையின் மாவட்ட அலுவலகங்களிற்கு 28.02.2017 ஆம் திகதிக்கு முன் நேரில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :**
**தலைவர்** தொ.பே.-
**பனை அபிவிருத்திச்சபை** 021 222 2034
**தேசிய வீடமைப்புச் செயலகம்** தொ.நகல்-
**கண்டி வீதி, யாழ்ப்பாணம்.** 021 222 4154

## கலைப்பீட முதலாம் ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதுமுக மாணவர்களுக்கான அறிவித்தல்

கலைப் பீடத்துக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 2015/2016 ஆம் கல்வி ஆண்டுக்குரிய மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை காலை ஆரம்பமாகும் என்று கலைப்பீடாதிபதி **கலாநிதி கருணாகரன் சுதாகர்** தெரிவித்துள்ளார்.

இதன்படி கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் காலை ஒன்பது மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் அறிமுக ஆரம்ப நிகழ்வின் முதலாவது அமர்வில் கலந்துகொள்ளுமாறு கலைப்பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசேட பாடங்களின் அடிப்படையில் கலைப் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் காலை பதினொரு மணிக்கு நடைபெறும் அறிமுக ஆரம்ப நிகழ்வின் இரண்டாவது அமர்வில் கலந்துகொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி அறிமுக நிகழ்வு தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நடைபெறும்.

விடுதி வசதிகோரி விண்ணப்பித்து விடுதி வசதி வழங்கப் பட்டுள்ள மாணவர்கள் அறிமுக நிகழ்வுக்கு முன்தினம் 28.02.2017 தொடக்கம் விடுதிகளுக்கு வருகைதர முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பதிவாளர்**

SUPER LUXURY BUS FOR HIRE

Call
076 822 7522
076 822 7515
076 822 7523
29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi
581, K.K.S ROAD, JAFFNA.

ஆசிரியர்கள் தேவை
KIDS CENTER - KOPAY
தரம் 6-11 வரையான மாலை நேர வகுப்புக்களுக்கு தமிழ் , கணிதம் , வரலாறு , விஞ்ஞானம் , ஆங்கிலம் ஆகிய பாட ஆசிரியர்கள் தேவை.
071 525 5568

## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி

### சந்திரா அம்பலவாணர் (பேராயம்மா)

(ஓய்வுநிலை வைத்திய பொறுப்பதிகாரி, கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய்)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திய கலாநிதி சந்திரா அம்பலவாணர் அவர்கள் 22.02.2017 புதன்கிழமை மட்டக்களப்பில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கணபதிப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வண. திருமதி J.P.அம்பலவாணர் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பேராயர் கலாநிதி D.J.அம்பலவாணர் (தெ.இ.தி.யாழ். அத்தியட்சாதீனம்) அவர்களின் அன்பு மனைவியும் வைத்திய கலாநிதி தயாளன் அம்பலவாணர் (சத்திர சிகிச்சை நிபுணர், விரிவுரையாளர், யாழ். மருத்துவபீடம்), கலாநிதி தர்ஷன் அம்பலவாணர் (திட்ட முகாமையாளர், அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வைத்திய கலாநிதி வளர்மதி அம்பலவாணர்(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். மருத்துவபீடம்), திருமதி மெர்லீன் வீவர் அம்பலவாணர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செல்வன் டேவிட் ஜீவாதித்தன் அம்பலவாணர் (யாழ். பரியோவான் கல்லூரி மாணவன்) அவர்களின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற திருமதி புஸ்பம் குணசிங்கம் மற்றும் திருமதி ராணி ஸ்கொட் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று (23.02.2017) வியாழக்கிழமை காலை 10.00-12.30 மணிவரை இல. 27, நாவலடி வீதி, திருநெல்வேலி இல்லத்தில் வைக்கப்பட்டு பின்னர் இறுதி வழிபாட்டிற்காக மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிஷன் தேவாலயத்திற்கு கொண்டு செல்லப்படும். அங்கு மாலை 2.00 மணிக்கு இறுதி நல்லடக்க வழிபாடு நடைபெற்று உடுவில் மிஷன் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**27, நாவலடி வீதி,**
**திருநெல்வேலி.**

**வைத்திய கலாநிதி தயாளன் அம்பலவாணர்**
**கலாநிதி தர்ஷன் அம்பலவாணர்**

## மரண அறிவித்தல்



மண்ணில் 28.08.1944

விண்ணில் 22.02.2017

### திருமதி இரகுநாதன் அருந்தவநாயகம்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கண்ணாபுரம், வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரகுநாதன் அருந்தவநாயகம் 22.02.2017 புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான இரகுநாதனின் அன்பு மனைவியும் லோகநாதன் (இலங்கை மின்சார சபை), சிவநாதன், அருந்துதி, தர்சினி (கிளார்க் VCM Institute), கவிதா ஆகியோரின் அன்புத் தாயும், விஜயலட்சுமி, கோணேஸ்வரி, அமரர் இன்பநாதன், கிருஷ்ணசாமி ஆகியோரின் அன்பு மாமியும், அபிராமி, கீர்த்திகா, சுவஸ்திகா, கீர்த்திகன், சுவனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இந்திரபுவனேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.02.2017) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

125/39, கண்ணாபுரம்,
வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்
**குடும்பத்தினர்**

### கேப்பாபிலவு...

அவர்களுக்கு உரிய தீர்வை வழங்கக் கோரிக் கொழும்பு புறக் கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

'முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி மேற்கொண்டு வரும் நியாயமான போராட்டத்துக்கு நல்லாட்சி அரசு விரைவில் தீர்வு வழங்க வேண்டும்.

2012 ஆம் ஆண்டு கேப்பாபிலவு மக்கள் மெனிக்பாம் முகாமிலிருந்தபோது கேப்பாபிலவிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரியிருந்தனர். சில மாதங்களுக்கு முன்னர் மக்களை அழைத்துக் காணி விடுவிப்பதற்காகப் பேச்சுக்கு வருமாறு கூறி ஏமாற்றியுள்ளனர். போர் முடிந்து 7 வருடங்களுக்கு மேல் கடந்துள்ள நிலையிலும் இராணுவ முகாம்கள் என்னும் போர்வையில் மக்களின் காணிகள் அபகரித்து வைக்கப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பொதுமக்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணிகளை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும். தமது காணிகளில் மக்கள் சுதந்திரமாக நடமாடக் கூட்டு அரசு எனக் கூறிக் கொள்பவர்கள் ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும். நல்லாட்சி அரசு எனக்கூறிக்கொண்டு வெளிநாடுகளுக்கு ஒரு முகத்தையும் தமது நாட்டு மக்களுக்கு இன்னொரு முகத்தையும் காட்டி ஏமாற்றும் நடவடிக்கையை அரசு கைவிட வேண்டும். நேர்மையாக மக்களை வழி நடத்தவேண்டும். வடக்குப் பகுதி மக்களின் காணி மீட்புப் போராட்டம் வெற்றி பெறத் தென்னிலங்கைச் சக்திகளையும் ஒன்றிணைத்துப் போராட்டத்துக்கு வலுச்சேர்ப்போம், என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இந்தப்போராட்டத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தென்னிலங்கை மக்கள் மற்றும் அரசியல்வாதிகளான சிவசக்தி ஆனந்தன், விக்கிரமபாகு கருணாரட்ண, சிறிதுங்க ஜய சூரிய, குமரகுருபரன், அசாத் சாலி, சிகா.செந்திவேல் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-4)

## மாணவி...

அரச தரப்புச் சாட்சியாக மாற்றப்பட்டார். ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் அதனை உறுதிப்படுத்தி உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் நேற்றுக் கையொப்பம் இட்டார்.

ஊர்காவற்றுறை நீதவான் மன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 12 பேரும் நேற்று மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் 11ஆவது சந்தேக நபரான உதயசூரியன் சுரேஷ்கரன் என்பவரே அரச தரப்புச் சாட் சியாக மாற்றப்பட்டார். அவர் தனது முடிவை நேற்றுத் திறந்த மன்றில் தெரிவித்தார்.

சந்தேகநபர் தொடர்பான சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் அறிக்கை நீதிவான் மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் குறித்த சந்தேகநபரை அரச சாட்சியாக மாற்றுவதாகச் சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிவித்தலை நீதிவான் திறந்த நீதிமன்றில் குறித்த சந்தேகநபருக்கு வாசித்துக் காட்டி அரச சாட்சியாக மாறச் சம்மதமா என்று கேட்டார். சந்தேகநபர் அதற்குச் சம்மதம் என்று தெரிவித்தார். அதனை உறுதிப்படுத்தி நீதிமன்றில் உறுதிமொழிப் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இட்டார்.

இதுதவிர, 12 ஆவது சந்தேக நபரான த.ரவீந்திரனிடம் வாக்கு மூலம் பெறுவதற்கும் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க ஏது வாகவும், தமது பாதுகாப்பில் எடுப்பதற்கான அனுமதியைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் நேற்றுக் கோரினர்.

கோரிக்கையைப் பரிசீலித்த நீதிவான், 12 ஆவது சந்தேகநபரை எதிர்வரும் 22 ஆம் திகதிதொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி வரை தினமும் முற்பகல் 9 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் இடையே குற்றப் புலனாய்வுத் துறையினரின் தேவைக்காக அனுமதிப்பதாக அறிவித்தார்.

12 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 8ஆம் திகதி மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

**பின்னணி**

2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மாணவி சிவலோகநாதன் வித்தியா (வயது - 18) பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது கடத் தப்பட்டுக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அதன் பின்னர் வெவ் வேறு நாள்களில் முதலில் 9 சந்தேக நபர்களும் பின்னர் 3 பேரும் கைது செய்யப்பட்டு 18 மாதங்களுக்கு மேலாக யாழ். மேல் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-4,37)

## மரண அறிவித்தல்

திருமதி

### ஜெயமாலினி ஜெகதீசன்



யார்க்கரு வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமாலினி ஜெகதீசன் 22.02.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இலட்சுமி தம்பதியரின் ஏக புதல்வியும் ஜெகதீசனின் (ஓய்வுநிலை அரச உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் இரத்தினம் (ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தர்), தங்கராசா(தங்கம்சன், நெல்லியடி), சிவப்பிரகாசம் (அம்சன் ஒளியகம் நெல்லியடி), மகேசன்(கனடா), மகேந்திரன் (லண்டன்), குகதாசன்(ஜேர்மனி), சிறிதரன்(கனடா), சிவனேசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தனுஷியா (ஆசிரியர், யா/ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்), பிரதீபன் (பொறியியல் விரிவுரையாளர், ஆஸ்திரேலியா), கார்த்திகா (ஆசிரியர், யா/நாகர்கோவில் அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் முரளிதரன்(திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை), துஷ்யந்தி(வைத்திய கலாநிதி, ஆஸ்திரேலியா), ஞானசெல்வன்(ஆசிரியர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமியும் அபிஷேகா, சஜனிகா, கிருத்திகன், விபுசனா ஆகியோரின் அம்மம்மாவும் லஸ்வின், தான்னா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**யார்க்கரு வீதி,**
**கரவெட்டி கிழக்கு,**
**கரவெட்டி.**
**குடும்பத்தினர்**
**021 226 3035**

## நன்றி நவிலலும் அந்தியேட்டி ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 24 • 06 • 1932

மறைவு 24 • 01 • 2017

### அமரர் மாரிமுத்து வேலுப்பிள்ளை

24.01.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எங்கள் குலதெய்வம் யாழ் தென்மராட்சி படித்த மகளிர்திட்டத்தைச் சேர்ந்த அமரர் திருமதி மாரிமுத்து வேலுப்பிள்ளை அமரத்துவமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் இறுதித் தருணத்தில் பல வழிகளிலும் உறுதுணையாக இருந்து உதவிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 20.02.2017 திங்கட்கிழமை கீரிமலையில் நடைபெற்றன. அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (23.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அந்நிகழ்விலும் பங்குபற்றுவதோடு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்பு உள்ளங்கள் அனைவரையும் வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

படித்த மகளிர் திட்டம்
மிருசுவில்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி

### மனோன்மணி சந்திரசேகரம்

மண்கும்பான் கிழக்கு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சந்திரசேகரம் நேற்று (22.02.2017) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு-கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் அன்ன பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் தியாகராசா, சந்திரசேகரம்(சந்திரன்)இன் அன்பு மனைவியும் இராசலிங்கம், தங்கராசா, சிவராசா(சிவம்), செல்வராசா(செல்லா), காலஞ்சென்றவர்களான பத்மநாதன், மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு இன்று (23.02.2017) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சி.சி. பாடசாலை லேன்,**
**இருபாலை கிழக்கு.**
**தி. சந்திரகுமார்**
**(மைத்துனர்) 077 847 0476**

## மரண அறிவித்தல்

### கந்தையா திருநாவுக்கரசு

**(றைக்டர் 240)**



சாவகச்சேரி, சப்பச்சி மாவடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு 21.02.2017 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு -சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும் நீலாம்பிகையின் அன்புக் கணவரும் திருஞானச்செல்வி (ஜேர்மனி), திருக்குமார் (சுவிஸ்), திருமாலதி(ஜேர்மனி), திருவேணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவசுந்தர்ராஜா (ஜேர்மனி), கலைச்செல்வி (சுவிஸ்),பஞ்ச வர்ணன் (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (யாழ்.ரெக்ஸ் சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜன், சிவாயன், அசின், அதர்மிகா விதுரன், ரகிஸா, நர்த்தனா, நஸ்மியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, மகாலிங்கம் மற்றும் அன்னலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2017) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சப்பச்சிமாவடி,**
**சாவகச்சேரி.**
**குடும்பத்தினர்.**
**077 727 9691**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்

### செல்லையா நடராசா



தோற்றம் 28.01.1945 மறைவு 27.01.2017

கடந்த 27.01.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா நடராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (24.02.2017) வெள்ளிக் கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 26.02.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வீரப்பதிராயன்,கரணவாய் தெற்கு ,**
**கரவெட்டி.**
**தகவல் : குடும்பத்தினர்.**
**077 352 0309**

## மகிந்த...

தமிழருக்கெதிரான இன வன்முறை ஏற்படக் கூடிய அபாயம் இருப்பதாகவும் குறிப்பிட்டார். தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உட்படத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புப் பிரேரணையை இரா.சம்பந்தன் கொண்டு வந்தார்.

அதில், தமிழ் மக்களுக்கெதிராக நடத்தப்பட்ட இன மோதல்களினாலும் இன வன்முறைகளினாலும் இலங்கைத் தமிழருள் 50 சதவீதம் வரையிலானோர் பாதுகாப்பின்மை காரணமாக நாட்டை விட்டு வெளியேறி உலகம் முழுதும் பல்வேறு நாடுகளில் குடியமர நிர்ப்பந்திக்கப்பட்டனர். நாட்டில் சமமான பிரசைகளாகத் தாம் வாழ்வதற்கு உதவக் கூடிய அரசியல் கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தபோதுதான் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும்.

தமிழ் இளைஞர்கள் இலங்கை அரசுக்கெதிராக 25 ஆண்டுகளுக்கு மேலாகப் போரை நடத்தினர். தமிழ் இளைஞர்களினால் தொடுக்கப்பட்ட அத்தகைய ஆயுதப் போராட்டம் தமிழ் மக்களுக்கெதிரான பல தசாப்த கால இன வன்முறைக்குப் பின்னரே தோன்றியது. இந்த முரண்பாடு பன்னாட்டு மயமாக்கப்பட்டு, பிரச்சினை பன்னாட்டுச் சமூகத்தின் பொறுப்பில் இருக்கின்றது.

*இந்தியாவின் பங்களிப்பு*

எமது அயல் நாடும் தாய் நாடுமாகிய இந்தியா இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தனது நல்லெண்ணத்தை வழங்கியது. அதனை 1983இல் இலங்கை ஏற்றுக் கொண்டது. ஓர் அரசியல் தீர்வுக்கான முக்கிய அடித்தளம் இடப்பட்டது. முரண்பாட்டைத் தீர்ப்பதற்குப் பல உள்நாட்டு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அரசமைப்பில் 13 ஆவது திருத்தம் சட்டமாக்கப்பட்டதன் பின்னர், அது போதாதென்றும், நடைமுறைப்படுத்த முடியாதென்றும் காணப்பட்டதால் மேற்கொள்ளப்பட்டன. மங்கள முனசிங்க தெரிவுக் குழுத் தீர்வாலோசனைகள், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க காலத்தில் 1995, 1997 இல் மேற்கொண்ட தீர்வாலோசனைகள் மற்றும் 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சட்டமூலமாகச் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வாலோசனைகள், ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலத்தில் ஒஸ்லோ அறிக்கை மற்றும் டோக்கியோ அறிக்கை, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஆரம்பக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ச ஆற்றிய உரை, மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட பல்லின வல்லுநர் குழு.

இந்த நடைமுறைகள் அனைத்தும் அதிகாரப் பகிர்விற்கான தீர்வாலோசனைகளை 13 ஆவது திருத்தத்தின் பரப்பெல்லைக்கு அப்பால் வெகு தூரம் எடுத்துச் சென்றன.

*ஒன்றரை லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர்*

மோதலின் விளைவாக ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்றும் வன்முறைகள் மீண்டும் ஏற்படுவது இன்னும் அதிகமான தமிழ்மக்கள் கொல்லப்படுவதற்கும் மேலும் அதிகமான தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கும் வழிவகுக்குமென்று கருதப்படுகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கம், நிலைமாறு கால நீதிப் பொறிமுறை நடைமுறைகள் திருப்திகரமாக முடிவுறுவதற்கும் வன்முறைகள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கும் எமது தரப்பில் நாம் அதிகூடிய ஒத்துழைப்பை வழங்கும் அதேவேளை, அனைத்துமக்களுக்கும் நீதி மற்றும் சமத்துவத்துடனான நிரந்தர சமாதானத்தை உறுதி செய்யும் வகையில் இந்த நடைமுறைகள் நேர்மையானதும் ஒரு நோக்கம் கொண்டதுமான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுவது மிகவும் இன்றியமையாததாகும். இந்த நடைமுறைகள் வெற்றிகரமாக முடிவுறுவதை சாத்தியமாக்குவதற்கு அனைவரும் தமது ஒத்துழைப்பை நல்குவது மிகவும் அவசியமானதாகும் - என்று பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*எதிர்பார்ப்புக்கள் பொய்யாகின*

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த இரா. சம்பந்தன், ஆட்சி மாற்றத்தின் பின்னர் நம்பிக்கை ஏற்பட்டது. புதிய அரசு மீது பல எதிர்பார்ப்புகள் இருந்தன. அரசுக்கு ஒத்துழைப்புகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கியுள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வைக் காண்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். அதில் எமது கௌரவமும் எமது பிரதேசத்தில் நாமே எமது தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையும் பாதுகாக்கப்படவேண்டும்.

காணிப் பிரச்சினை, காணாமற் போனோர் விவகாரம், அரசியல் கைதிகள், உண்மை மற்றும் நல்லிணக்கம், இழப்பீடு, காணாமற் போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் மீள் நிகழாமை என்பன மாற்று நிலை நீதியின் அடிப்படை விடயங்களாக உள்ளன. இவற்றுக்குத் தீர்வுகாணப்பட வேண்டும். மேற்படி விடயங்கள் தொடர்பில் அரசின் செயற்பாடுகளால் எமது மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். இந்த விடயத்தில் நாம் வெளிப்படையாக இருக்க வேண்டும். கடந்த அரசைப் போன்று இந்த அரசும் தம்மைக் கொடுமைப்படுத்துவதாக மக்கள் கருதுகின்றனர். மேற்படி பிரச்சினைகளை முன்னைய அரசைப் போன்றே இந்த அரசும் கையாண்டு வருவதாக மக்கள் நம்புகின்றனர் - என்றார். (த-5)

## வடக்கில்...

வடக்கில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்தது.

வவுனியாவில் ஹெப்பிற்றிக் கொலாவப் பகுதியைச் சேர்ந்த குழந்தை பிரசவித்து ஒரு வாரமான 25 வயதுடைய தாய் ஒரு வருக்கும், பூவரசங்குளம் பகுதியைச் சேர்ந்த 37வயதுடைய பெண்ணுக்கும் பன்றிக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

அவர்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர் என்று வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நோய்த் தொற்று சிறுவர்களுக்கே அதிகம் ஏற்படுவதற்கு வாயப்புக்கள் உள்ளன. நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த சிறுவர்களையே அது அதிகம் தாக்கக் கூடியது. இது அபாயகரமான தொற்று நோய் என்பதால் சிறுவர்களைத் தேவையின்றி அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். காய்ச்சல், தடிமன், உடல் சோர்வு ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெறுங்கள்- என்றார்.

வடக்கில் முதலில் கிளிநொச்சியில் இந்தத் தொற்று 3 சிறார்களிடம் அடையாளம் காணப்பட்டது. பின்னர் யாழ்ப்பாணம் வேலணையில் 26 வயதுப் பெண்ணிடம் அடையாளம் காணப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் கிளிநொச்சியில் 2 கர்ப்பிணிகள் உட்பட 7 பேருக்கு பன்றிக் காய்ச்சல் ஏற்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 நாள்களுக்கு முன்னர் 4 பேர் பன்றிக் காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாகியமை மருத் துவ அறிக்கையில் தெரியவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## உள்நாட்டு...

வைக்க வேண்டும். பன்னாட்டுச் சமூகத்தின் தோளில் தொங்கினால் முன்நோக்கி நகர முடியாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தது.

அத்துடன், வடக்கில் புத்தர் சிலைகள் உடைக்கப்படுவதன் பின்னணியில் தமிழர்கள் இருப்பதாகச் சமூக வலைத்தளங்களில் தவறான விம்பம் தோற்றுவிக்கப்படுகின்றது. உண்மையான சூத்திரதாரிகளை அரசு கண்டறிய வேண்டும் என்றும் அது வலியுறுத்தியது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் பௌத்த மதத்துக்கும், விகாரைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனத் தவறான தகவல் பரப்பப்பட்டு வருகின்றது. வடக்கிலுள்ள புத்தர் சிலை மீது ஒயில் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. தேடிப் பார்த்தால் தென்னிலங்கையில் செயற்படும் குழுவொன்றின் பிரதிநிதிகளே அதைச் செய்துள்ளனர். இவ்வாறான சூத்திரதாரிகளைக் கண்டறிந்து அரசு மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தவேண்டும். சகல இனங்களுக்கும் சம உரிமை கிடைக்கவேண்டும். ஜனநாயக ரீதியிலான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிப்பதற்கான சிறந்த பாதையாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் தமதுரையின்போது இந்தியாவின் அரச தலைவர், ஐ.நா. போன்ற பன்னாட்டு அமைப்புகள் வெளியிட்ட கருத்துகளை மேற்கோள் காட்டிப் பேசினார். பிரச்சினைகள் பன்னாட்டு மயப்படுத்தப்படுகின்றன என்பது இதன்மூலம் தெளிவாகின்றது. பன்னாட்டுச் சமூகத்தால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்ற உண்மையையும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஜெனிவாத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இலங்கை தொடர்பான அறிக்கையும் வெளிவரவுள்ளது. இதன்போது புதியதொரு பிரேரணை கொண்டு வரப்படலாம். கால அவகாசம் வழங்கப்பட்டுப் பிரச்சினைகள் இழுத்துக்கொண்டு செல்லப்படலாம். அரசு என்னதான் நன்மை செய்தாலும் பன்னாட்டுச் சமூகம் இனிவிட்டு விடாது. பலஸ்தீனத்தில் குண்டுபோடும் கூட்டம்தான் இலங்கை பற்றியும் பேசுகின்றது. உள்நாட்டுப் பொறிமுறை மீது எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கை வைக்கவேண்டும். பன்னாட்டுச் சமூகத்தின் தோளில் தொங்கினால் முன்நோக்கி நகரமுடியாது.

மட்டக்களப்பில் 'எழுக தமிழ்' பேரணி நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் முஸ்லிமோ, சிங்களவரோ கலந்து கொள்ளவில்லை. மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பே 'எழுக தமிழ்' பேரணியில் கலந்து கொண்டுள்ளது. வடக்கு மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. காணிப் பிரச்சினை, காணாமற் போனோர் பிரச்சினை என அந்தப் பட்டியலை நீடித்துக்கொண்டே போகலாம். இவற்றுக்கு அரசு தீர்வைக் காணாததாலேயே அதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு இனவாதிகள் சிலர் முயற்சிக்கின்றனர்.

பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் தொடர்கின்றது. புதுக்குடியிருப்பிலும் உணவு ஒறுப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. காணி உரிமைப் பத்திரமும் மக்களிடம் இருக்கின்றது. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் - என்றார். (த-5)

## 2 சகோதரர்களையும்...

மறியலில் உள்ள 2 சகோதரர்களையும் நீதிமன்றில் நேற்று நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டியுள்ளார் கண்கண்ட சாட்சியான சிறுவன்.

ஊர்காவற்றுறையில் நிறைமாதக் கர்ப்பிணியான ஞானேஸ்வரன் மேரிறெம்சியா (வயது-27) என்பவர் கடந்த மாதம் மண்டையோட்டு எலும்புகள் நொறுங்கி மூளையில் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழக்கும் அளவுக்குத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சகோதரர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஊர்காவற்துறை நீதிமன்றில் நேற்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போதே கொலை நடந்த இடத்தில் நின்றிருந்ததாகக் கூறப்பட்ட கண்கண்ட சாட்சியாகக் கூறப்படும் சிறுவன் இருவரையும் அடையாளம் காட்டினார். குறித்த சகோதரர்கள் இருவரையும் வழமைபோன்று 14 பேருடன் ஒரே இடத்தில் நிற்க வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது.

அதன் பின்னர் குறித்த வழக்கு திறந்த நீதிமன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி சாலினி ஜெயபாலச்சந்திரன் முன்னிலையானார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின்போது, மரபணுப் பரிசோதனைக்காக இரத்த மாதிரியை எடுப்பதற்குச் சம்மதமா என்று நீதிவான் கேட்டார். அதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. அதனால் முதலாவது சந்தேகநபரைச் சட்ட மருத்துவ நிபுணரிடம் முற்படுத்திக் குருதி மாதிரியைப் பெற்று மரபணுப் பரிசோதனைக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்து அதுவரை சந்தேக நபர்களின் விளக்கமறியலையும் நீடித்தது நீதிமன்று. (த-4-37)

## போர்க்குற்றம்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒட்டுமொத்தப் படையினரும் போர்க் குற்றங்களை இழைத்தார்கள் என்று கூறவில்லை. உயர் மட்டங்களிலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் அவர்கள் செயற்பட்டிருக்கலாம். படையினர் சிலர் பாலியல் பலாத்காரம் மற்றும் படுகொலை போன்ற தனிப்பட்ட ரீதியிலான குற்றங்களிலும் ஈடுபட்டிருந்திருக்கலாம். அவை பற்றித் தகுந்த விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட்டு தண்டனை வழங்கப்படவேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின் போது மனம்பேரி என்ற இளம்பெண் ஒருவர் படையினராலேயே படுகொலை செய்யப்பட்டிருந்தார். இது தொடர்பில் உண்மை கண்டறியப்பட்டு படையினருக்குத் தண்டனையும் வழங்கப்பட்டது. தவறிழைத்தவர்கள் அதன் விளைவுகளையும் அனுபவிக்க வேண்டும். படையினருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான மனக்கசப்பும் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும். டி.எஸ். சேனாநாயக்க தலைமை அமைச்சராக இருந்த காலத்தில் படைத் தளபதிகளாக தமிழர்கள் இருந்திருக்கின்றனர். தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்களும் படையில் அங்கம் வகிக்க வேண்டும் - என்றார். (த-5)

## இனப்பிரச்சினையை...

தற்போதிருக்கும் வரலாற்றுச் சந்தர்ப்பத்தை நாம் தவறவிட்டு விடக்கூடாது. இவ்வாறான நிலையிலும், கடும் போக்குவாதிகளும் இரு தரப்புகளில் இருந்தும் தலைதூக்கப் பார்க்கின்றனர்.

இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நாடாளுமன்றில் நேற்றுக் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசமைப்பை உருவாக்குவதில் தற்போது இருப்பதைப் போன்றதொரு இணக்கப்பாடு 1972ஆம் ஆண்டும் மற்றும் 1978ஆம் ஆண்டுகளில் இருந்திருக்கவில்லை. நாடு சந்தித்த பெருந்துயரின் பின்னர் நீதியை நோக்கிப் பயணிப்பதற்கான பக்குவமொன்று இன்று ஏற்பட்டிருக்கிறது. புதிய பயணமொன்றுக்கான அத்தியாயமொன்றை எழுதும் பொறுப்பு இந்தச் சபைக்குரியதாகும். அரசமைப்பை இயற்றி இந்தச் சபையில் அங்கீகரித்து அதை மக்கள் மத்தியில் அங்கீகாரத்திற்கு கொண்டுசெல்வோம். இன்று எமக்குப் பொன்னான வாய்ப்பொன்று ஏற்பட்டிருக்கிறது. கடந்த 60 வருட காலத்தில் அரசியலில் பரம எதிரிகளாக இருந்த இரு பெரும் கட்சிகளும் இன்று இணைந்து செயற்படுகின்றன. பிளவுபடாத நாடொன்றுக்குள் தீர்வொன்றைக் காண்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஏனையவர்களும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர். தெற்கிலுள்ள பெரும்பான்மை மக்களின் இணக்கப்பாடின்றி எந்தவொரு தீர்வையும் ஏற்கப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்த முன்னெடுப்புகளை குறுகிய அரசியல் இலாபங்களுக்காக குழப்ப முயற்சிக்காமல் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள செயற்பட வேண்டும் - என்றார். (த-5)

## தீர்க்கமான...

நாளாகவும் தொடர்ந்தது. தமக்குத் தீர்க்கமான முடிவு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கை விடப்போவதில்லை என்று அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

வலிந்து காணாமற் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும் என்று வலியுறுத்தி, காணாமற்போனோரின் உறவினர்கள் கடந்த திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். நேற்றுமுன்தினம் ஐ.நா. பொதுச் செயலருக்கான மனுவையும் கையளித்திருந்தனர். இந்த நிலையில் நேற்று மூன்றாவது நாளாகவும் அவர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். அரசியல் தரப்பினர் மக்களுடன் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தினர். தமக்கு உறுதியான தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று மக்கள் குறிப்பிட்டனர். (த-5-35)

## படங்களுக்கு இடையேயான வேறுபாடுகளை இனம் கண்டு வட்டம் இடுவோம்






## நோய்கள் எம்மை நெருங்காதே!

மணலால் வீடு கட்டிடுவோம்
மாவிலையால் அழகூட்டிடுவோம்
குழியைத் தோண்டி நீரூற்றி
குட்டிக் கிணறும் செய்திடுவோம்

வெற்றுத் தீப் பெட்டிகளால்
வேலி கட்டி மகிழ்ந்திடுவோம்
பயற்றம் விதைகளைத் தூவியே
பச்சைக் காய்கறி பயிரிடுவோம்

எங்கள் வீட்டில் தோழருடன்
எழிலாய் நாமும் விளையாடிடுவோம்
விளையாட்டெல்லாம் முடிந்தவுடன்
விரும்பியே கை கால் கழுவிடுவோம்

சுத்தமான நீர் கொண்டே
தினமும் தாகம் தீர்த்திடுவோம்
சத்து மிகுந்த உணவுகளை
சரிவர நாளும் உண்டிடுவோம்

தூய்மை உள்ள மனதுடனே
துணிந்து கருமம் ஆற்றிடுவோம்
நோய்கள் எம்மை நெருங்காதே
நாளும் வளர்வோம் திடமாக

## கொன்றை வேந்தன்

நாம் எமது குழந்தைகளுக்கு சின்னஞ் சிறு வயதில் கூறும் அறிவுரைகளே பிற் காலத்தில் அவர்களை ஒழுக்க சீலர் களாகவும், சான்றோர்களாகவும் ஆக்க உதவும். பிஞ்சு மனதிலே எதுவும் பசுமரத் தாணிபோல ஆழமாகப் பதிந்து விடும் என்பதாலேயே நீதிக் கருத்துக்களை குழந் தைகளுக்கு இலகுவில் மனதில் பதியும் படியாக சொற் சுருக்கமாகவும் பொருள் செறிவாக வும் எழுதி வைத்துள்ளார்கள். அந்த வகை யிலேயே ஔவையாரால் எழுதப்பட்ட கொன்றை வேந்தன் அமை ந்துள்ளது. இதில் அகர வரிசைப் படி 91 கொன்றை வேந்தன் சூத்திரங்கள் அமை ந்துள்ளன.

அவற்றுள் சிறுவர்களுக்கென தெரிந் தெடுக்கப்பட்ட 10 சூத்திரங்களும் பொரு ளும் கொடுக்கப்பட்டுள்ளன.

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
*தாயும் தந்தையுமே ஒரு குழந்தையால் முதலில் அறியப்பட்ட தெய்வங்கங்களா வர். ஒரு குழந்தைக்கு எத்தனை உறவுகள் பின்னால் வந்த போதும் அது முதன் முதலில் பார்த்துப் புரிந்து கொள்ளக் கூடிய தெய்வங்களாக விளங்குபவர்கள் அந்தக்குழந்தையின் தாயும் தந்தையுமே.*

2. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்
*கணித நூலும் இலக்கண நூலும் மனி தருக்கு இரண்டு கண்கள் என்று சொல்லத் தக்கவையாகும்.*
*ஒரு மனிதனுக்கு இரு கண்கள் எப்படி அத்தியாவசியமானவையோ அவற்றைப் போன்ற அவசியமானவையே மனித வாழ்க்கைக்கு கணித அறிவும் இலக்கண அறிவும்.* (தொடரும்)

## உயர்ந்தது (உரையாடல்)

பச்சைப் பசேல் எனத் செழித்து வளர்ந்த வயல் வெளியின் வரம்பு மேட்டில் நீண்டு உயர்ந்து தலை நிமிர்ந்து நின்றது அந்தப் பனைமரம். வயல் நிலத்தை அடுத்து சுற்றி வேலியிடப்பட்ட காணி ஒன்றில் பல தென்னைகள் நின்றன. அவற்றில் ஒன்று சற்று வளைந்தும் உயரம் குறைவானதாகவும் காணப்பட்டது. அதற்கு தனது உயரம் குறித்து அதற்குச் சற்றுத்தாழ்வு மனப்பான்மையும் இருந்தது. இப்போது பனையைப் பார்த்து அந்தத் தென்னை பேசத் தொடங்கியது.

தென்னை :- ஏய் கறுப்பன் பனையே! என்ன இப்படி கொஞ்சமும் பணிவில்லாது நீண்டு நிமிர்ந்து நிற்கிறாய்? இருந்தாலும் உனக்குத் தலைக்கனம் அதிகம் தான்.

பனை :- எனக்குத் தலைக்கனம் எதுவும் இல்லை. இயற்கையிலேயே என் தோற்றம் இப்படித்தான் நண்பரே! (என்கிறது அடக்கத்துடன்)

தென்னை :- அதுசரி, நீ இப்படி கறுப்பாக இருக்கிறாயே! இது உனக்கு வருத்தமாக இல்லையா? (ஏளனமாகப் பேசுகிறது)

பனை :- நீ என்னோடு இன்று வீண் வம்பு தான் வளர்க்கிறாய். என்றாலும் உனக்கு நான் பதில்சொல்லத்தான் வேண்டும்.

தென்னை :- ஆ... ஆ... சொல்லு, சொல்லு

பனை :- அன்பரே! கறுப்பு என்பது நிறங்களில் ஒன்றுதான். அது தாழ்வானது அல்ல. உன்னைப் போலத்தான் இந்த உலகத்தவரும் நிற இன சாதிக்கு தாழ்வு உயர்வு கருதி அடிதடி, குத்து வெட்டு, சண்டை சச்சரவுகள் [illegible] அமைதியை இழந்துள்ளனர். வீடுகள் கட்டுவோருக்கென எம்மை [illegible] வீழ்த்துபவர்களுக்கும் எமது உடம்பைத் தானமாகக் கொடுக்கிறே[illegible] கடந்த காலங்களில் எறிகணை வீச்சுக்களால் எமது இனத்தவர்கள் [illegible] களை இழந்து முண்டங்களாக நின்றும் மனிதரின் பதுங்கு குழிகளு[illegible] பாதுகாப்பு அரண்களுக்கும் தமது கரிய, ஆனால் வைரித்த உடல்க[illegible] தானமாக்கினார்களே, உனக்கு இது தெரியாதா?

தென்னை :- உந்தப் பழைய கதைகள் எனக்குத் தெரியாது. நான் அப்போது சின்[illegible] தென்னம்பிள்ளை. வேறேதும் இருந்தால் கூறு. (அசட்டையாகக் கூறுகி[illegible]

பனை :- இன்னும் கேள்கறுத்த மேகம் தான் கன மழைதருகிறது. மழை இல்[illegible] என்றால் இன்று நீயும்இல்லை; நானும் இல்லை. மனிதர் பயணம் செ[illegible] யும் நீண்ட நெடுந்தெருக்களைப் பார்? கருமைதான். ஏன் அதிகம் பேசுவா னேன். மனிதர்களது தலையில் அழகைத்தருவது அந்தக் கறுத்த முடி தானே! அதில் கொஞ்சம் நரை கண்டாலே மனிதன் படும் பாட்டை நீ அறிவாயா? தனக்கு வயதாகி விட்டதோ என அவன் கவலைப்படுகிறான். மீண்டும் தனது தலை முடியைக் கறுப்புமை கொண்டே அழகூட்டுகிறான் கறுப்பின் மகத்துவம் அறியாமல் ஏளனம் பேசாதே. (கொஞ்சம் உரக்கப் பேசுகிறது)

தென்னை :- சரி... சரி போதும் உன் கறுப்புப் புராணம். வேலிகட்டி, பசளையிட்டு, நீர் பாய்ச்சி மருந்தடித்து தென்னம்பிள்ளை என எங்களை ஒரு குழந்தை போல் வளர்க்கிறார்களே! உன்னை இங்கு யார் கவனிக்கிறா்ர்கள்? உனது இனத்தவர் அநாதைகள் போலல்லவா நிற்கிறார்கள். "பெற்ற பிள்ளை கவனியாது விடினும் வைத்த பிள்ளை காப்பாற்றுவான் என்றெல் லவா எங்களை மனிதர் உயர்வாகப் பேசுகிறார்கள்.(தற்புகழ்ச்சியுடன் பேசுகிறது)

பனை :- உண்மைதான். உன்னை நீர் ஊற்றி, ஆடு மாடுகளிடமிருந்து வேலி கட்டிக் காப்பாற்றி எடுப்பதற்குள் மனிதர்களுக்குப் போதும் போதுமென் றாகி விடும். என்னைப் பார். ஒரு சொட்டு நீருக்குக் கூட நான் மனிதரிடம் கையேந்துவதில்லை. ஆனால் என்சொந்தக் காலில் நின்று அவர்க ளுக்குப் பயன் தருகிறேன்.
(பனையின் பேச்சை இடைமறிக்கிறது தென்னை)

தென்னை :- நீ என்னைப் போலத் தேங்காய். இளநீர் என்று ஏதாவது....
(தென்னையை இடை மறிக்கிறது பனை)

பனை :- நான் கொடுக்கும் பயன்களைப் பட்டியலிடட்டுமா? கற்பக தரு என்ற ஒரு பெயர் எம்மினத்துக்கு உண்டு என்று நீ அறியாயோ? கற்பக தரு என்றால் கேட்பவையெல்லாம் கொடுக்கும் மரம் என்பது பொருள்.

தென்னை :- நீ என்னதான் சொன்னாலும், நானே உயர்ந்தவன். நன்றி செலுத் துவதில் எனக்கு இணை எவரும் இல்லை. இதனை ஔவையார் என்ற முதிய பாட்டியொருவர்;
நன்றி யொருவர்க்குச் செய்தக் கால் அந் நன்றி
என்று தருங்கொல் என வேண்டா - நின்று
தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்" - என்று
பாடியுள்ளாரே (ஆர்ப்பரிக்கிறது தென்னை) வலிய வம்பிழுத்த தென் னைக்கு இறுதியாக ஒன்று கூறியது பனை

பனை :- தென்னையே! நீ குறிப்பிட்ட ஔவையின் மூதுரை பாடல் மட்டுமல்ல அவரது ஏனைய நீதி நூல்களும், உலகப் பொது மறையான திருக் குறளும் 200 வருடங்களுக்கு முன்பே எமது இனத்தவரின் ஓலை களில்தான் எழுத்தாணிகளால் எழுதப்பட்டு பாதுகாக்கப்பட்டன. அந்த ஓலைச்சு வடிகளில் இருந்துதான் இன்றைய தலைமுறைக்கு இந்த நூல்கள் அச்சுருவாக்கி பெருங்கொடையாக அளிக்கப்பட்டன. மனி தருக்கு கல்விக் கண் துறக்க நாம் செய்த இந்த உதவியைவிட வேறு பெருமை ஏதாவது உள்ளதா? எமக்கு அதைவிட என்னதான் இருக்க முடியும்.
பனை இப்படிக்கூறிக்கொண்டு இருக்க தென்னை முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டது.

**தற்பெருமை பேசக்கூடாது. எமது பெருமையை மற்றவர்கள் புகழ்ந்து பேச வேண்டும். உடையது விளம்பேல் - ஆத்திசூடி**

## மற்றவர்களுடன் பேசும் போது...

- கடவுளிடம் நன்றியுணர்வோடு பேச வேண்டும்
- தாயிடம் அன்பாகப் பேச வேண்டும்
- தந்தையிடம் இயல்பாகப் பேச வேண்டும்
- துணைவியிடமும், கணவனிடமும் உண்மையாகப் பேச வேண்டும்
- குழந்தையிடம் ஆர்வமாகப் பேச வேண்டும்
- சகோதரனிடம் அடக்கத்துடன் பேச வேண்டும்
- சகோதரியிடம் அளவோடு பேச வேண்டும்
- நண்பனிடம் உரிமையுடன் பேச வேண்டும்
- வியாபாரியிடம் கண்டிப்பாகப் பேச வேண்டும்
- அயலவரிடம் அன்னியோன்னியமாகப் பேச வேண்டும்
- தொழிலாளியிடம் மனித நேயத்துடன் பேச வேண்டும்
- ஊரவரிடம் அவதானமாகப் பேச வேண்டும்
- உறவினரிடம் பரிவோடு பேச வேண்டும்
- அதிகாரிகளிடம் பணிவாகப் பேச வேண்டும்
- ஆசிரியரிடமும் பெரியோரிடமும் பண்பாகப் பேச வேண்டும்
- சமூகத்தவரிடம் சகஜமாகப் பேச வேண்டும்



## குதிரை வீரர் சிலைகள்

குதிரை மீது அமர்ந்துள்ளது போன்று மன்னர்கள், போர் வீரர்களின் நினைவுச் சின்னங்களைக் கல்லில் செதுக்கும் போது சிற்பக் கலைஞர்கள் ஒரு நடை முறையைக் கையாண்டு வருகின்றனர். ஒரு போர் வீரர் அமர்ந்திருக்கும் குதிரை தனது நான்கு கால் களையும் நிலத்தில் ஊன்றிய படி நிற்பதாக சிலை வடிக்கப்பட்டால், அந்தப் போர் வீரர் இயற்கையாக மரணமடைந்தார் என்பது கருத்து. குதிரை ஒரு காலை உயர்த்தியபடி நிற்பதாகச் செய்யப்பட்டால். போர்க் களத்தில் ஏற்பட்ட விழுப்புண் காரணமாக அந்தவீரன் பின்னர் மரணமடைந்தான் என்பது பொருள்.
குதிரை இரண்டு முன்னங்கால்களையும் தூக்கியபடி நின்றால் அந்த வீரன் போரில் உயிர் நீத் நான் என்று பொருள்படும்.

## வடதாரகை 'ஏ' இலகு வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 23
வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வடதாரகை 'ஏ' அணி இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது.

சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் சுப்பர்ஸ்ரார் அணியை எதிர்த்து வடதாரகை 'ஏ' அணி மோதியது. இதில், வடதாரகை 'ஏ' அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## முத்தமிழ் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 23
வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கோயிற்புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம் அணி சம்பியனானது.

ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. முத்தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் முத்தமிழ் வித்தியாலய அணி 25:10, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. மூன்றாமிடத்தை ஒலுமடு அ.த.க.பாடசாலை அணி பெற்றது. (ம-422)





## விக்டோரியா - சிவப்பிரகாச இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 23
வலிகாம கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியும், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமும் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன. மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இந்த இறுதியாட்டம் இடம்பெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. இதில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 25:23, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது.

இரண்டாவதாக நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. முதலாவது செற்றை பலத்த போராட்டத்தின் பின்னர் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி 28:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது செற்றில் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று பதிலடி கொடுத்தது. மூன்றாவது செற்றில் வெற்றிபெறும் அணியே இறுதிக்குத் தகுதிபெறும் என்ற பரபரப்பான நிலையில், அந்த செற்றை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், பெப். 23
**கரப்பந்தாட்டம்**
ஞானதீபம் திறன் விருத்தி மையத்தினர் நடத்தும் 23 வயதுக்குட்பட்டவர்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர் அரியாலையில் இடம்பெற்று வருகிறது. இன்று மாலை 6 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் ஓ.எல்.ஆர். போய்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் யுத் அணியை எதிர்த்து கெருடாவில் விவேகானந்தா அணி மோதவுள்ளது. இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து கச்சாய் வொலிகிங்ஸ் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**
வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் ஹிஜிரா அணியை எதிர்த்து அல் இக்பால் 'ஏ' அணி மோதவுள்ளது. (ம-108-23)

## சின்னடம்பன் பாரதி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 23
வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணி சம்பியனானது.

ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணியை எதிர்த்து கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி மோதியது. இதில் சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணி 25:21, 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

மூன்றாமிடத்தை மறவன்குளம் பாரதி வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

## அரையிறுதியை உறுதிசெய்தது ஞானமுருகன்

கரணவாய், பெப். 23
வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் கால் பந்தரட்டத் தொடரில் அரையிறுதிக்குச் செல்வதற்கான வாய்ப்பை அதிகப்படுத்தியது ஞானமுருகன்.

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்னார் விடத்தல்தீவு அணியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது.

3:0 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது.

புள்ளிப்பட்டியலில் 'ஏ' பிரிவில் ஞானமுருகன் முதலிடத்தில் உள்ளது. இதன்மூலம் அரையிறுதிக்குச் செல்வதற்கான வாய்ப்பை அந்த அணி உறுதிசெய்தது. (ம-108)



## ஐக்கியம் வி.கழகம் கபடியில் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 23
பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கபடியில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை ஐக்கிய அணி சம்பியனானது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் பருத்தித்துறை சென். தோமஸ் அணி 26:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியில் தமது அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பருத்தித்துறை ஐக்கிய அணி ஆட்ட நேர முடிவில் 47:41 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)



## சிம்பாப்வே ஆப்கான் நாளை ஆட்டம்

சிம்பாப்வே-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் சிம்பாப்வேயின் ஹராரே மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களில், இரண்டில் ஆப்கானிஸ்தானும் ஒன்றில் சிம்பாப்வேயும் வெற்றிபெற்றன. இதனால் நாளைய ஆட்டத்திலும் சிம்பாப்வே வெல்லவேண்டும் என்ற அவசியம் உள்ளது. மாறாக நாளை ஆப்கானிஸ்தான் வென்றால் அந்த அணி கிண்ணம் வெல்வதை உறுதிசெய்யும். (ம)

## சிவப்பிரகாச ம.வி. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், பெப். 23

வலிகாம கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயது ஆண்கள் பிரிவில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி மோதியது. இதில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி 25:15, 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இறுதியாட்டத்தில் சண்டிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணியும் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று காலை மோதவுள்ளன. (ம-422)



வவுனியா வலுவூட்டல் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு. வீதியோட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ம)



## தெ.ஆபிரிக்காவுக்கு நியூசிலாந்து பதிலடி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 6 ஓட்டங்களால் வெற்றிபெற்று பதிலடி கொடுத்தது நியூசிலாந்து. இதனால் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடர் 1:1 என்று சமநிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. நியூசிலாந்தின் ஆரம்ப வீரர்களாக பிரவுண்நீல் மற்றும் லாதம். இரண்டே ஓட்டத்துடன் லாதத்தை வெளியேற்றினார் பார்நெல். வில்லியம்சன் இணைய பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஒட்டங்களைத் தொட்டது நியூசிலாந்து. 34 ஓட்டங்களுடன் பிரவுண்நீலை வீழ்த்தினார் பிரிட்டோரியஸ். அரைச்சதம் கடந்தார் வில்லியம்சன். ரெய்லர் ஆரம்பம் முதல் சிறப்பாக விளையாடினார். 69 ஒட்டங்களுடன் வில்லியம்சனின் ஆட்டம் தாகிரின் சுழலில் முடிவு கண்டது. 60 பந்துகளில் அரைச்சதத்தையும் 110 பந்துகளில் சதத்தையும் நிறைவுசெய்தார் ரெய்லர். 57 பந்துகளில் 71 ஓட்டங்களைக் குவித்து பலப்படுத்தினார் நீஸ்கம். முடிவில் நியூசிலாந்து 289-4.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் அம்லா. குயின்டன் அரைச்சதம் கடந்தாலும் அவர், தனது வழக்கமான அதிரடியை வெளிப்படுத்தவில்லை. 65 பந்துகளில் 57 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். பிளாசிஸ் தடுமாறினார். டுமினி, வில்லியர்ஸ், மில்லர், பிறிட்டோரியஸ் நால்வரும் முறையே 34, 45, 28, 50 ஓட்டங் களைச் சேர்த்தாலும் பின்வரிசை நியூசிலாந்தின் பந்துவீச்சில் தடுமாறியது. இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் 15 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் 8 ஓட்டங்களையே தென்னாபிரிக்கா பெற்றது. 6 ஓட்டங்களால் நியூசிலாந்து வென்றது. (ம)

## சாதனை!

ஒருநாள் ஆட்டங்களில் அதிக சதத்தைப் பதிவுசெய்ய நியூசிலாந்து வீரர் என்றசாதனையைப் படைத்தார் ரெய்லர். தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் ரெய்லர் சதம் கடந்தார். இது அவரின் 17 சதமாகப்பதிவானது. இதன் மூலம் ஒருநாள் ஆட்டங்களில் அதிக சதங்களைப் பதிவு செய்த நியூசிலாந்து வீரர் என்ற சாதனையைப் படைத்தார் ரெய்லர்.

முன்னாள் வீரர் ஆஸ்லே 16 சதங்களைப் பதிவுசெய்தமையே இதுவரை சாதனையாக இருந்தது. இவரின் சாதனையையே ரெய்லர் முறியடித்தார். நேற்றுக் குவித்த 102 ஓட்டங்களின் உதவியுடன் பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களில் 6 ஆயிரம்ஓட்டங்களையும் அவர் கடந்தார். தனது 180 ஆவது ஆட்டத்தில் இந்த மைல்கல்லை அவர் எட்டினார். (ம)

## சண்டிலிப்பாய் இந்து இறுதியில்

யாழ்ப்பாணம், பெப். 23

வலிகாம கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயது ஆண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது. முதலாவது செற்றை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது செற் 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வசமானது. மூன்றாவது செற் 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துவின் வசமாக 2:1 என்ற செற் கணக்கில் அந்த அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது. (ம-422)



## விக்டோரியா, மெய்கண்டான் ம.வி. இறுதியில்

யாழ்ப்பாணம், பெப். 23

வலிகாம கல்வி வலயத்துக்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயதுப்பிரிவில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணியும் இறுதியில் இன்று மோதவுள்ளன. மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று காலை இறுதியாட்டம் நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 25:13, 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி 25:16, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## இந்தியா-ஆஸ்திரேலியா டெஸ்ட் இன்று ஆரம்பம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டம் புனே மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இந்தத் தொடரை எதிர்கொள்வதற்காக இரு அணிகளும் கடந்த சில தினங்களாக கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டு வந்தன.

இந்திய ஆடுகளங்கள் சுழலுக்குச் சாதகமானவை என்பதால் இந்திய அணியின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் என்ற பொதுவான எதிர்பார்ப்பு நிலவுகிறது. 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கையுடன் காலியில் நடைபெற்ற ஆட்டத்தின் இந்தியா தோற்றது. இதுவே இந்திய அணி சந்தித்த இறுதித் தோல்வி. அதன்பின்னர் 19 ஆட்டங்களில் தொடர்ந்து வெற்றிநடை போட்டுவருகிறது.

இலங்கை (2:1), தென்னாபிரிக்கா (3:0), மேற்கிந்தியத் தீவுகள் (2:0), நியூசிலாந்து (3:0), இங்கிலாந்து (4:0), பங்களாதேஷ் (1:0) என இறுதியாக எதிர்கொண்ட 6 தொடர்களிலும் இந்தியா கிண்ணம் வென்றது. இந்த நிலையில் ஆஸ்திரேலிய அணி இந்தியாவின் தொடர் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்குமா அல்லது தோல்வியடைந்த அணிகளுடன் சேருமா என்பது தொடர்பில் பரவலான எதிர்பார்ப்பு உள்ளது. இரண்டாவது ஆட்டம் பெங்களூரில் மார்ச் 4 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் ராஞ்சியில் மார்ச் 16 ஆம் திகதியும், நான்காவதும் இறுதியானதுமான ஆட்டம் தர்மசாலாவில் மார்ச் 25 ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



## வேலை ஆள் தேவை

பால் பண்ணை ஒன்றிற்கு வேலை ஆள் தேவை.
தங்குமிடம் , 3 வேளை உணவு இலவசம்
தங்கியிருந்து வேலை செய்பவர் விரும்பத்தக்கது.
தொடர்பு :- T.Kajan 076 722 5066

# இறுதி ரி-20 ஆட்டத்தில் ஆஸி. ஆறுதல் வெற்றி



இலங்கைக்கு எதிரான மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் 41 ஓட்டங்களால் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. எனினும் முதல் இரு ஆட்டங்களிலும் வென்ற காரணத்தால் 2:1 என்ற அடிப்படையில் இலங்கை கிண்ணம் வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி ஆஸ்திரே லியாவின் ஆரம்ப வீரர்களாக பின்ஞ் மற்றும் கிலிஞ்சர் இருவரும் களமிறங்கினர். இந்தத் தொடரிலேயே ஆஸ் திரேலியாவின் ஆகச் சிறந்த ஆரம்ப இணைப்பாட்டம் இதுவே. தொடக்கம் முதலே அதிரடியை வெளிப்படுத்தினார் பின்ஞ். 30 பந்துகளில் அவரின் அரைச்சதம் பதிவானது. அணி 79 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 53 ஓட்டங்களுடன் பின்ஞ் ஆட்டமிழந்தார். டங் 28 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் கிலிங்சர். 30 ஓட்டங்களுடன் ஹெட் ஆட்டமிழந் தார். 62 ஓட்டங்களுடன் ரண்அவுட் செய்யப் பட்டார் கிலிஞ்சர். ரேணர், பல்க்நெர் இருவரும் முறையே ஒரு ஓட்டத்துடனும், 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். முடிவில் ஆஸ்தி ரேலியா 187-6.

பந்துவீச்சில் மலி ங்க, சானக இருவரும் தலா 2 இலக்குகளையும், பிரசன்னா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்குமுன்னணி வீரர்களான தரங்க மற்றும் குசல் மென்டிஸ் இருவரும் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினர். 4 ஓட்டங்களுடன் குணரத் னவை வீழ்த்தினார் சாம்பா. முனவீரவுடன் இணைந்தார் சிறிவர்தன. இருவரும் இரட்டை இலக்கங்களில் ஓட்டங்களைக் குவித்தனர். எனினும் நீடிக்க முடியவில்லை. முனவீர 37 ஓட்டங்களுடனும், சிறிவர்தன 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

மத்திய வரிசையின் பெரும் நம்பிக்கையான கப்புக்கெதர வெறும் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வெளியேற் றிவர் சாம்பா. மலிங்க, சஞ்சய இருவரும் ரண்அவுட் செய்யப்பட்டனர். 146 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை. 41 ஓட்டங்களால் வெற்றிபெற்று வழித்துத் துடைப்பை தவிர்த்தது ஆஸ்திரேலியா.

சாம்பா, பல்க்நெர் இருவரும் தலா 3 இலக்குகளையும், ரிச்சாட்சன், ஹெட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2846 திகதி 22.02.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
11 31 35 45 S
போனஸ் இல. சனிக்கிழமை ஜக்பொட்
63
ரூ. 48,417,512/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
பச்சை நிற டிக்கட்டுக்கள்
25 ஆம் திகதி சனிக்கிழமை
சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

Galaxy Star
வெற்றி வாரம் 138 திகதி 22.02.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
09 14 34 41 55
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,964,300 /-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் பணிபுரியும் **தர்சினி** அவர்களின் அன்புத் தாயார். திருமதி

### இரகுநாதன் அருந்தவநாயகம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

VCM Institute சமூகம்,
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

திருமதி
### தங்கம்மா தளையசிங்கம்

யாழ்ப்பாணம், கரந்தன், நீர்வேலியை பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா தளையசிங்கம் 22.02.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தளையசிங்கத்தின் மனைவியும் கயேந்திரன் (வவுனியா), தர்சினி, நவநீதன், பிரியதர்சினி (வவுனியா) ஆகியோரின் தாயாரும் சந்திரகலா, பத்மநாதன், வசந்தப்பிரியா, ஜெகராசா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.02.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**ஞானவைரவர் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

சட்டமாணி நுழைவு
வெள்ளி (24.02.2017)
சனி (25.02.2017)
ஞாயிறு (26.02.2017)
காலை 9.00-3.30
மணிவரை

SLAS
Open, Limited
பிரிவு-I
வெள்ளி (24.02.2017)
ஞாயிறு (26.02.2017)
காலை 9.00-3.00
மணிவரை
அடுத்த வாரம் முதல்
சனி, ஞாயிறு தினங்களில்
பிரிவு-II
மாலைநேர வகுப்பு
திங்கள் தொடக்கம்
வியாழன் வரை
பி.ப 5.00-7.00 மணிவரை
ஆரம்பம்: 27.02.2017 திங்கள்
மாலை 5.00மணி

முகாமைத்துவ
உதவியாளர்
வங்கிசார்
பரீட்சைகள்
உட்பட அனைத்து
பரீட்சைகளுக்குமான
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

076 688 3394
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள்
பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி
கொமர்ஷல் வங்கி
அருகில்)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டச் செயலகத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி கார்த்திகா அகிலன்** அவர்களின் அன்புத் தந்தை

### சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்

அவர்கள் 19.02.2017 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். மாவட்டச் செயலக நலன்புரி கழகம்**

## மரண அறிவித்தல்

### முத்தையா குகதாசன்



அன்னை மடியில் 10.12.1938 | ஆண்டவன் அடியில் 20.02.2017

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா குகதாசன் 20.02.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் புரந்தரன்(நோர்வே), தவேந்திரன்(நோர்வே), பத்மினி (லண்டன்), சாந்தினி (பிரான்ஸ்), இராஜேந்திரன் (லண்டன்) காலஞ்சென்ற தர்மினி, உருத்திராங்கன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரன், சந்திரமோகன், குகரதி, மேகலா, தர்மிலா, ஹேமராணி ஆகியோரின் பாசமிகு அன்பு மாமனாரும், தரணியா, ஜீவந்தி, டிசாந்தி, துசாந்தி, சிவந்தன், யசிந்தன், பிருந்தா, நிசுநிதா, நிவேதா, பெனித்தா, விசுவாசன், லவாங்கி, சாளவி, அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2017) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இல.131 ஆனந்தம் வடலி வீதி (A.V.Road), அரியாலை, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தவேந்திரன் (நோர்வே) 075 562 3305,**
**புரேந்திரன் (நோர்வே) 075 470 9945**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி சண்முகலிங்கம்



தோற்றம் 10.06.1953 | மறைவு 22.02.2017

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி சண்முகலிங்கம் நேற்று (22.02.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயராணி, இந்திராணி, மகேந்திரன், வைத்தியநாதன், செல்வராணி, பவானந்தன், விக்கினேஸ்வரன், விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகேஸ்வரி (யமுனா, ஜேர்மனி), கனகேஸ்வரன்(சாங்கர், கனடா), புவனேஸ்வரி (பேபி, கனடா), றோகினி(சயிலா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரசனா(கனடா), சரவணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆதுசன், ராகுல், யதீசா, விதுசா, சர்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பாக்கியம்(கனடா), சுந்தரலிங்கம்(கனடா), தனலட்சுமி(கனடா), சிவசிதம்பரலிங்கம், பஞ்சலிங்கம், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2017) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முத்தர் வளவு,**
**குப்பிளான் வடக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 413 6813, 077 739 4745**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.